
கல்கி

KALKI 26-12-1976 75 காசு




சத்துமிகுந்த, சுவையான
பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள்
B
R
I
T
A
N
N
I
A
Glaxo
BISCUITS
BRITANNIA
Glaxo
BISCUITS
வளரும் குழந்தைகளுக்கு
சுவையான துணை
பிரிட்டானியா
பிஸ்கட்டுகள் மிகச் சிறந்தவை
பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள் அருமையான தனிச் சுவையோடு மேம்பட்டு விளங்குவது ஏன்? சத்துச் செறிந்த ஆரோக்கியமான குணச்சிறப்பே காரணம். ஆசையோடு குழந்தைகள் அவற்றை விரும்பிச் சுவைத்து வளருகின்றனர்! பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள்— வளரும் குழந்தைகளுக்குச் சுவையான துணை.
லின்டாஸ்-BBC.GLA 6-140 TM

மூட்டுப் பிடிப்பா?




ஆற்றுவது அயொடெக்ஸ்

தேய்த்து ஆற்றும் நிவாரணம்.

வலி தணிக்கும் களிம்புகள் பல இருக்கலாம்; ஆனால் வலி தணித்து அதே சமயம் ஆற்றிவிடுவது அயொடெக்ஸ். ஆற்றக் காரணம் அதில் உள்ள அயொடின்.

தலை வலிக்கும் சரி, மூட்டு நோவுக்கும் சரி,— ஆற்றும் களிம்பு ஒன்றுதான்: அயொடெக்ஸ்.





போடுவீர் அயொடெக்ஸ், புறப்படுவீர் ஓடியாட.

லின்டாஸ்-IODEX-4-140 TM


பாம்பே டையிங்
அணிந்த ஆடவன்
கண்ணாடியில்
காணும் பிரதிபிம்பம்
ஆயினும் வியப்பூட்டும்
ஆனந்தம்!
பாம்பே டையிங் வழங்கும்
ஆடவர் அணிகள்.
பாலியெஸ்டர்/காட்டன் ஷர்ட்டிங்கு-
களின் ஒப்பற்ற உயர் தரம் 50/50,
67/33, 80/20 மற்றும்
நூற்றுக்கு நூறு பாலியெஸ்டர்
பிரிண்டுகள், பாலியெஸ்டர்
டெனிம்கள் மற்றும்
டெக்ஸ்சரைஸ்ட்
ஸூட்டிங்குகள்.
U. BDM-29-76 Tam
கபித்தான் பாலியெஸ்டர் ஷர்ட்டிங்குகள் வாட்ரீன் பாலியெஸ்டர் ஸூட்டிங்குகள்


பாம்பே டையிங்

பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம் & பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
"பாலுஸேரி பில்டிங்ஸ்". 3, சிங்கராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை — 600 005
தந்தி : 'EVERMANS', போன்: 841194 & 841062. தபால் பெட்டி: 414

நீண்டகாலச் சீட்டுகள்

50 மாதங்கள் — 50 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
LTN	ரூ. 100/-	ரூ. 5,000/-
LTO	ரூ. 50/-	ரூ. 2,500/-
LTP	ரூ. 20/-	ரூ. 1,000/-

40 மாதங்கள் — 40 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
LTA	ரூ. 500/-	ரூ. 20,000/-
LTB	ரூ. 250/-	ரூ. 10,000/-
LTC	ரூ. 125/-	ரூ. 5,000/-

குறுகியகாலச் சீட்டுகள்

20 மாதங்கள் — 20 அங்கத்தினர்கள்
மாதம் ரூ. 30/- முதல் ரூ. 100/- வரை சந்தா
25 மாதங்கள் — 25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
A	ரூ. 200/-	ரூ. 5,000/-	C	ரூ. 50/-	ரூ. 1,250/-
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	D	ரூ. 25/-	ரூ. 625/-


சேரும் குரூப்பை விவரித்து எழுதவும்
கிளைகள் : புது டில்லி - பம்பாய் - பெங்களூர் - கல்கத்தா - கோயமுத்தூர்


ஸ்தாபிதம் : 1947

30 YEARS
எங்கள் சேவை உங்களுக்குத்தேவை

.பூரணமான பாதுகாப்புக்குச் சற்று அதிகம் செலவிடத்தான் வேண்டும்!

லேபார்ட்ஸ்






இவற்றின் விலை சற்று அதிகம்தான். ஆனால் இவற்றை விட நம்பகமான உறுப்புகள் எதுவும் கிடையாது. லேபார்ட்ஸ் பயன்படுத்துவதால் உங்களுக்கு விளையக்கூடிய நன்மைகளைக் கருதினால், கூடுதல் விலை அதிகமாகவே தோன்றாது.

வண்டி வாங்குவதற்கு நீங்கள் செலவிட்ட பெருந்தொகையை எண்ணிப் பாருங்கள். வண்டிக்கோ பயணிகளுக்கோ கெடுதல் நேரும் வகையில் எதையும் நீங்கள் செய்யக் கூடாது என்பது உங்களுக்கே விளங்கும்.

அசோக் லேலண்ட் வண்டிகளுக்கான அசல் உறுப்புகள் லேபார்ட்ஸ்தான். இவற்றைத் தயாரிப்பது அசோக் லேலண்ட்.




எனவே லேபார்ட்ஸ் வாங்கினால் சிறந்த உறுப்புகளையே வாங்குகிறீர்கள் என்று அர்த்தம். தரம், வேலைப்பாட்டு நயம், நுணுக்கம், உறுதி — எல்லாவற்றிலுமே அவை சிறந்தவை. லேபார்ட்ஸ் என்று கேட்டு வாங்குங்கள். உங்கள் பணத்துக்கு உரிய மதிப்பை விட அதிகமாகவே பெறுவீர்கள்.

அசோக் லேலண்ட் வண்டிகளுக்கான அசல் உறுப்புகள்

அசோக் லேலண்ட் லிமிடெட்
சென்னை 600 057

உங்கள் வண்டியின் நலனைப் பேணுங்கள். லேபார்ட்ஸ் உபயோகியுங்கள்.

உங்கள் டாய்லெட்டுக்காக நீங்கள் தலைகுனிகிறீர்களா?



டாய்லெட்டினால் நம்மில் பலருக்கு பலமுறை தர்மசங்கடமான நிலை ஏற்படுகிறது. அதைவிட ஆபத்தான உண்மையை அறிய இதைக் கவனமாய்ப் படியுங்கள்.

அசுத்தமான டாய்லெட் தொற்று நோய்க்குக் காரணமான கிருமிகள் வளரும் இடம். உங்களுடைய, உங்கள் குடும்பத்தினருடைய ஆரோக்கியத்தைப் பாதிக்கும்.

இதை அலட்சியமாய் விட்டுவிடாதீர்கள். உங்கள் டாய்லெட் சுத்தமாக இருக்கிறது என்பதை உறுதியாக நம்புகிறீர்களா? உங்கள் தோட்டி தினமும் காலையில் சரிவரச் சுத்தம் செய்கிறாரா? அல்லது பேருக்குச் சுத்தம் செய்துவிட்டுப் போய் விடுகிறாரா? அப்படி அவருடைய வேலை திருப்தியாக இல்லாவிடில் ஸானிஃபிரஷை நாடுங்கள்.

ஸானிஃபிரஷ் பாடுபட்டு உழைக்கும் கக்கூஸ் தூய்மைப் பொருள்.

ஸானிஃபிரஷ் மூன்று வழிகளில் வேலை செய்கிறது.

1. ஸானிஃபிரஷ் கறைகளைப் போக்குகிறது.

ஸானிஃபிரஷ் உங்களுடைய டாய்லெட்டை முழுக்கவும் துப்புரவாக்குகிறது. அதில் அசுத்தம் போக்கும் தீவிரமான பொருள் இருப்பதால் விடாப்பிடியாக நீங்காத கறைகளும் நீங்கிவிடுகின்றன. துருக் கறைகளும் மறைந்து விடுகின்றன. பாருங்கள், உங்கள் டாய்லெட் பளிச்சென ஒளி வீசுகிறது!

2. ஸானிஃபிரஷ் கிருமிகளைப் போக்குகிறது.

அசுத்தமான டாய்லெட் கிருமிகளின் பிறப்பிடமாயிருப்பதால் தீங்கு விளைவிக்கக் கூடியது. சாதாரண பினைல் தரமுடியாத பாதுகாப்பை ஸானிஃபிரஷ் உங்களுக்குத் தருகிறது. உங்கள் குடும்பத்தினரின் ஆரோக்கியத்தைப் பேணிக்காக்கிறது.

3. ஸானிஃபிரஷ் துர்நாற்றத்தை விரட்டுகிறது.

போதுமான காற்றேட்ட வசதியில்லாத டாய்லெட்டில் துர்நாற்றம் நீடித்து நிற்கிறது. ஸானிஃபிரஷில் மிகவும் சக்தி வாய்ந்த வாசனைப் பொருள் இருப்பதால், காற்றிற்குப் புத்துணர்ச்சி தந்து துர்நாற்றத்தை மாய்க்கிறது.

ஸானிஃபிரஷ் உபயோகிப்பது மிகவும் சுலபம்.

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இதுதான். முதலில் டாய்லெட்டில் ஃப்ளஷ் மூலம் தண்ணீரை விடுங்கள். டாய்லெட்டின் பேஸினில் ஸானிஃபிரஷைத் தாராளமாகத் தூவுங்கள். 3-4 மணி நேரம் கழித்துப் பாருங்கள். இதைவிட, இரவு பூராவும் அப்படியே விட்டு வைப்பது மிகவும் சிறந்தது. அதற்குப் பிறகு ஃப்ளஷ் செய்யவும். ஃப்ளஷ் வேலை செய்யாவிடில் ஒரு வாளி தண்ணீரை ஊற்றவும். இப்போது உங்கள் டாய்லெட் எவ்வளவு பளிச்சிடுகிறது என்பதைப் பாருங்கள்!

தவறாமல் தினந்தோறும் ஸானிஃபிரஷ் உபயோகிப்பதே சிறந்தது.




ஸானிஃபிரஷ் உங்கள் அருவருப்பான வேலையைச் செய்து டாய்லெட்டை சுத்தமாக வைக்கிறது.

பல்சாரா
நலமான வாழ்க்கைக்கு
நவீனமான வசதிகள்

BALSARA பல்சாரா & கம்பெனி (பிரை.) லிட்.
43, [illegible] ரோடு, பம்பாய் 400 023.

CHAITRA-BLS-85 TAM

மனித குலத்தை மிகப் பரவலாகப் பாதிக்கும் நோயால் பீடிக்கப்பட்டுள்ளவர்களில் நீங்களும் ஒருவராக இருக்கலாம்...



உங்களுக்கே தெரியாத நிலையில்!

நூற்றுக்கு 95 பேர்கள் பற்சிதைவால் பாதிக்கப்படுகிறார்கள். எனினும் அதிக அக்கறை காட்டாத இந் நோய், காலப் போக்கில் வலிதரும் சொத்தையாக மாறி உங்களைப் பெரும் அவதிக்கு உள்ளாக்கி விடும். எனவேதான் உங்கள் பற்களுக்கு இடைவிடாத பாதுகாப்பு தேவைப்படுகிறது.

பினைகா ஃப்ளோரைட் பற்சிதைவுக்கு எதிராக நீடித்த பாதுகாப்பளிக்கிறது

பற்சிதைவை 50 சதவிகிதம் வரை ஃப்ளோரைட் குறைக்கிறது என விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஆகவே தவறாமல் பினைகா ஃப்ளோரைடினால், நாள்தோறும் காலையிலும், படுக்கை வேளையிலும் பல் துலக்குங்கள். இதன் தனிப்பட்ட, நீடித்து நிற்கும் ஆற்றல் பல் எனாமலைப் பலப்படுத்துகிறது. பற்களைச் சிதைக்கும் கிருமிகளின் வளர்ச்சியையும் வலிதரும் சொத்தையையும் தடுக்கிறது.



பல்லுக்கு உறுதி,
பற்சிதைவுக்கு எதிரி—

பினைகா ஃப்ளோரைட்

U-BF/115 TAM


1976 டிசம்பர் 26
மார்கழி 11
போடு புதிர்!
30 கி. மீ. தூரத்திலிருக்கும் இரண்டு இடங்களிலிருந்து A, B என்ற இருவர் ஒரே நேரத்தில் புறப்பட்டு சைக்கிளில் மணிக்கு 15 கி. மீ. வேகத்தில் ஒருவரை நோக்கி ஒருவர் வந்து கொண்டிருக்கிறார்கள். A யின் தொப்பியில் உட்கார்ந்திருந்த ஒரு ஈ அதே நேரத்தில் B யை நோக்கிப் பறக்கிறது. B யின் தொப்பியை அடைந்ததும், திரும்பவும் A யின் தொப்பிக்குப் பறக்கிறது. A யும் B யும் சந்திக்கும் வரை அது இது போல் பலமுறை மாறி மாறி மணிக்கு 20 கி. மீ. வேகத்தில் பறந்து கொண்டிருக்கிறது. இருவரும் சந்திக்கும் வரை, ஈ எவ்வளவு கி. மீ. பறந்திருக்கும்?

கன்ஸ்யூமர் கவுன்ஸில் ஆஃப் இந்தியா
வின் மகத்தான கண்டுபிடிப்பு:

மூலிகைச் செடிகளின் உதவியால்
மட்டுமே உங்கள் பற்களை நோய்
களிலிருந்து காப்பாற்ற முடியும்

ஒரே நீம் டூத்பேஸ்ட்

இதில் மட்டும் தான் நிம் விதையின் குணமும் மணமும் அமைந்துள்ளது

பல் டாக்டர்களின் சர்வேயின் படி பார்த்ததில் புகழ்பெற்ற டூத் பேஸ்ட்டுகள் யாவுமே பற்களை வெண்மையாக மட்டும் வைத்துக் கொள்கிறது. பல் நோய்கள் வராமல் இது காப்ப தில்லை. நோய் வராமல் தடுக்கவல்ல மூலிகையின் குணம் இப்பொழுது வரும் டூத் பேஸ்டுகளில் இல்லாதது தான் இதன் காரணம். ஆனால் நீம் டூத் பேஸ்ட் இயற்கையின் குணம் கொண்டிருக்கிறது நீம் டூத் பேஸ்ட் நீம் விதையின் எண்ணை கொண்டு தயாரிக கப்படுவதால் இது பற்களை வெண்மையாக வைத்துக் கொள்வதோடு மட்டுமல் லாமல் நோய்கள் உங்கள் பற்களை நெருங்க விடாமல் பாதுகாக்கிறது.



வேண்டுகோளின் பேரில்
இதர விபரம்

IDL/NTN 2T

பற்களை வெண்மையாக
வும் ஆரோக்கியத்துடனும்
வைத்துக் கொள்ள தவ
றாமல் உபயோகியுங்கள்—
நீம் டூத் பேஸ்ட்

கல்கத்தா கெமிக்கலின் ஒரு தயாரிப்பு

எழுத்தறிவிப்பவன் ஏஜெண்டு!

தமிழக ஆளுநரின் ஆலோசகர்கள் இருக்கும் திக்கு நோக்கிக் கையெடுத்துக் கும்பிடுகிறோம்.

எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்பது பழமொழி. அவர்களுக்கு இழைக்கப்பட்டு வந்த மாபெரும் அநீதியைத் துடைக்க முன்வந்ததற்காக ஆளுநரின் ஆலோசகர்களை வாழ்த்துகிறோம்.

குடும்பக் கட்டுப்பாடு என்பது தேசத்துக்கு அத்தியாவசியத் தேவைதான், யாரும் மறுக்க முடியாது. ஆனால் அந்தத் திட்டத்துக்கும் பள்ளி ஆசிரியர்களுக்கும்முடிச்சுப்போடுவது மாபெரும்அநீதி.

எதிர்கால ராமன்களையும், ராமானுஜர்களையும், கொரோனாக்களையும், கோகலேக்களையும், ராஜாஜிகளையும், நேருஜிகளையும் உருவாக்க வேண்டிய உன்னதப் பொறுப்பில் உள்ள பள்ளி ஆசிரியர்கள், அந்த வேலையை விட்டுவிட்டு அரசாங்க மருத்துவமனை வாயில்களில் தவம் இருக்கிறார்கள். எதற்கு? அவர்களுக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை. 'குடும்பக் கட்டுப்பாடு ரண சிகிச்சைக்கு ஒரு கேஸ் கிடைக்காதா?' என்றுதான் காத்திருக்கிறார்கள்!

'டிசம்பர் இறுதிக்குள் கேஸ் பிடித்து வா' என்று ஓர் உத்தரவு. கூடவே, 'அதெல்லாம் இல்லை; நவம்பர் இறுதிக்குள்ளாகவே கேஸ் பிடித்து வர வேண்டும்' என்று மறு உத்தரவு. பிறகு 'அந்த ஊரில் கேஸ் பிடித்தது செல்லாது. ஆகவே மேலும் இரண்டு கேஸ் பிடித்து வா!' என்று இப்படி தினத்துக்கு ஓர் உத்தரவு.

ஒவ்வொரு கேஸ் பிடித்து வரவும் ஆசிரியர்கள் படும் சிரமம், மனக்கஷ்டம், பொருள் நஷ்டம் ஆகியவை கொஞ்ச நஞ்சமல்ல.

'இரண்டு கேஸ்களைப் போடாவிட்டால் தாற்காலிக வேலைநீக்கம்' என்று பழி வாங்கப் பட்டவர்கள் எண்ணிலடங்காதவர்.

இந்த அருவருப்பான காரியத்தில் ஆசிரியர்கள் மட்டுமின்றிப் பள்ளி ஆசிரியைகளும் ஈடுபடுத்தப்படுவது சொல்லிமாளாத அநாகரிகம்.

இதற்கெல்லாம் ஒரு முடிவு காண ஆளுநரின் ஆலோசகர்கள் முன் வந்தமைக்காக அவர்களைப் பாராட்டுகிறோம்.

'இனி எந்த ஆசிரியரையும் குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சைக்கு ஆள் பிடித்து வரவில்லையானால் ஒழுங்கு நடவடிக்கை எடுப்போம் என்பதாக அச்சுறுத்தக் கூடாது' என்று உத்தரவு பிறந்துள்ளது. அடுத்து, இது காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களை உடனே மீண்டும் வேலையில் அமர்த்துமாறு ஓர் உத்தரவு பிறந்துள்ளது. மதுரையில் கூடி இந்த இரு உத்தரவுகளும் பிறக்க வழி ஏற்படுத்திய பாராளுமன்ற ஆலோசனைக் குழுவினரை மனமாரப் போற்றுகிறோம்.

கல்கி மலர் 36 இதழ் 22

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

பட்டணப் பிரவேசம்!

“கிராமத்துக்குத் திரும்பிப் போ!'' என்று சில காலம் முன் தலைவர்கள் எல்லாம் அலறிக் கொண்டிருந்தார்கள். இப்போது தொண்டை நீர் வற்றியதாலோ என்னமோ கோஷம் ஓய்ந்திருக்கிறது. ஆனால் பிரச்னை தீரவில்லை. கிராமப் புறங்களிலிருந்து வேலை தேடிப் பட்டணத்துக்கு வருவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துத்தான் வருகிறது. இதற்கான காரணங்களை ஆராய்ந்து குறைகளை நீக்குவதற்குப் பதிலாகக் கோஷங்களை மட்டும் எழுப்பிப் புண்ணியமில்லை யல்லவா?

இந்த வகையில் கோயமுத்தூரில் இயங்கி வரும் தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகம் அருமையான தொண்டாற்றி இருக்கிறது. இதன் பல்வேறு இலாக்காவினர் விவசாயம் சம்பந்தப்பட்ட வெறும் ஏட்டுப்படிப்பை மாணவர்களுக்கு வழங்குவதுடன் நிற்பதில்லை. பல்கலைக் கழகத்தின் சோதனைச் சாலைகளிலும் வயல் வரப்புகளிலும் நடந்த ஆராய்ச்சிகளின் முடிவுகளைக் கிராமப்புற விவசாயிகளுக்கு நேரில் சென்று விளக்குகிறார்கள். அதே சமயம் விவசாயிகளின் பிரச்னைகளையும் கேட்டறிந்து யோசனை

களை வழங்குகிறார்கள். மாணவர்கள் இந்த நற்பணிகளில் ஆசிரியர்களுடன் ஒத்துழைக்கிறார்கள்.

சமீபத்தில் நடந்த இத்தகைய ஓர் ஆராய்ச்சி, கிராமங்களிலிருந்து பட்டணத்துக்குப் பலரும் குடி பெயர்வதன் காரணம் என்ன என்று அறிவது. இதில் தெரிய வரும் முடிவுகள் கண் துடைப்பன அல்ல, கண் திறப்பன!

நீர்ப் பாசன வசதி உறுதி செய்யப்படாததுதான் 77.6 சதவிகிதம் விவசாயிகள் நகர்ப் புறங்களுக்குக் குடி பெயரக் காரணம் என்கிறது அறிக்கை. ஆக அரசு எந்த அம்சத்தில் முழு முதற் கவனம் செலுத்த வேண்டும் என்பது புரிகிறது.

அடுத்தாற்போல் விவசாயத்தை வாபகரமாக நடத்தப் போதுமான அளவு நிலம் இல்லாததால் குடி பெயர்தல் 12.8 சதம். உச்சவரம்புகளைக் கண்மூடித்தனமாக நிர்ணயிக்கக்கூடாது என்பதை இது உணர்த்துகிறது.

கூலி குறைவாகக் கிடைப்பதால் குடி பெயர்தல் 6.4 சதம். நிலமில்லாத விவசாயிகள் குடி பெயர இதுவே முக்கிய காரணம். கூட்டுக் குடும்பத்தில் ஏற்பட்ட சச்சரவுகளால் குடி பெயர்தல் 3.2 சதம்.

கூட்டிப் பார்த்தால் நூறு சதம் வருகிறது; கணக்கு சரி என்பதோடு திருப்தி அடையாமல் அரசும் அரசை அமைக்கும் மக்களும் இந்தக் கண்டுபிடிப்புக்கள் பற்றிச் சிந்தித்து ஆவன செய்ய வேண்டும்.

நந்தி விலகலாம்; சந்தி சிரிக்கலாமா?

பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தையும் சஞ்சயின் ஐந்து அம்சத் திட்டத்தையும் கண்கண்ட தெய்வமாகவே வழிபடுபவர்கள் இருக்கிறார்கள். அதில் தவறு ஏதுமில்லை. ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்பேன் என்று கூறவில்லையா அறிஞர் அண்ணாதுரை? அண்ணல் காந்தியடிகளின் கருத்தும் அது தானே? அந்தத் தெய்வத்தை நந்தி மறைக்க விடலாமா?

இருபது அம்ச: ஐந்து அம்சத் திட்டங்களை நிறைவேற்றத் தடங்கலாக நிற்கிறார் நந்தினி சத்பதி என்பது ஒரிஸ்ஸாவில் பலரது குற்றச்சாட்டு. அது மட்டும் அவர் விலக நேர்ந்ததற்குக் காரணமல்ல, வேறு பல உட்பூசல்களும், தனிப்பட்ட பகை உணர்ச்சிகளும் விருப்பு வெறுப்புக்களும் ஒரிஸ்ஸா காங்கிரஸ் அரசியலில் விளையாடின என்பது நமக்குத் தெரியும். நந்தினி சத்பதியை எதிர்த்தவர்கள் இன்று நந்தி விலகியதாக எண்ணி மகிழலாம். ஆனால் ஒரிஸ்ஸா, மேற்கு வங்க காங்கிரஸ் விவகாரங்கள் சந்தி சிரிக்கும் நிலையை அடைந்து விடக் கூடாதே என்பது தான் நமது கவலை.

ஒரிஸ்ஸா விவகாரத்திலிருந்து நாம் உணர்ந்து தெளியக் கூடிய கருத்துக்கள்:

1. தலைமை, அடிமட்டத்தில் அளிக்கப்படும் ஆதரவினால் படிப்படியாக உருவாக வேண்டும். மேல் மட்டத்திலிருந்து தலைமை திணிக்கப்படக் கூடாது. அப்படி திணிக்கப் பட்டால் இன்று நந்தினிக்கு ஏற்பட்ட கதி தான் நாளை இன்னொரு மந்திரிக்கும் ஏற்படும்.

2. 'பெர்ஸனாலிடி கல்ட்' எனப்படும் தனி நபர் பிரபையை வளர்த்துக் கொள்வதும் அதன் காரணமாக ஆணவம் அடைவதும், அனுசரித்துப் போகத் தெரியாத யதேச்சாதிகாரப் போக்கில் கொண்டு போய் விடும். கடைசியில் கர்வபங்கம் ஏற்படும்.

3. யுவர் காங்கிரஸ், காங்கிரஸின் ஓர் அங்கமாக, பயனுள்ள சமூகத் தொண்டாற்றும் பகுதியாக விளங்குவதோடு நில்லாமல் தனக்கென்று ஒரு தனித்தன்மையை வளர்த்துக் கொண்டு வருகிறது. இதனால் ஏறத்தாழ ஓர் எதிர்க் கட்சியாகவே கூட இயங்குகிற நிலை சில சந்தர்ப்பங்களில் அதற்கு ஏற்படுகிறது. இதன் நன்மை தீமைகளை அசை போட வேண்டிய அவசியம் காங்கிரஸ் மேலிடத்துக்கு ஏற்பட்டிருக்கிறது.

4. ஒரிஸ்ஸா விவகாரத்தினால் பிரதமரின் மனம் எவ்வளவு வேதனையுறும் என்பதை யாரும் எளிதில் ஊகிக்கலாம். எதிர்க் கட்சிகளெல்லாம் சேர்ந்து கொண்டு சட்டபூர்வமாக அமைந்த ஓர் ஆட்சியைக் கூப்பாடு போட்டுக் கவிழ்க்க முயலக் கூடாது. அதனை அனுமதிக்க முடியாது என்று கூறி வந்தவர் நமது பிரதமர். ஆனால் இன்றோ சட்டபூர்வமாக அமைந்த ஒரு காங்கிரஸ் ஆட்சியைக் காங்கிரஸ்காரர்களே கூப்பாடு போட்டுக் கவிழ்த்துக் குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு வழி வகுத்துள்ளார்கள். அதனை அனுமதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் பிரதமருக்கு ஏற்பட்டு விட்டது. அவர் அடையக்கூடிய துயரம் கொஞ்சநஞ்சமாகவா இருக்கும்?

வருந்துகிறோம்


தமிழகத்துக்கே உரித்தான நாதகரக் கலையில் புகழ் பெற்ற செம்பனார்கோயில் தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை அவர்கள் காலமான செய்தி அறிந்து வருந்துகிறோம். கலைமாமணி தக்ஷிணாமூர்த்தி பிள்ளை அவர்கள் தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் ஆதீனங்களில் ஆதீன வித்வானக அங்கீகாரம் பெற்றவர். இந்தியாவின் பல பாகங்களில் மட்டுமின்றி அயல் நாடுகளிலும் நாதகரக் கலைக்காக வரவேற்புப் பெற்றவர்.

வருகிற 2-1-77ல் சென்னை சங்கீத வித்வத் சபை தனது பொன் விழா ஆண்டில் அவரைக் கௌரவித்துப் பாராட்டுப் பத்திரம் வழங்க இருந்தது. அதனைப் பெறுவதற்கு முன்னரே அவர் காலமானது துரதிர்ஷ்டம்தான்.


புதல்வர்களான மாயூரம் சகோதரர்கள் நாதகரக் கலையை வளர்த்தும் அதனால் வளர்ந்தும் வருகிறார்கள். தகப்பனாரின் புகழுக்குப் புகழ் சேர்க்கும் வகையில் இவர்கள் முன்னேறுவதே அவருக்குச் செய்கின்ற அஞ்சலியாகும்.



நந்தினி இஸ் அவுட்!
இளைஞர் காங்கிரஸ்
நந்தினி
பரூவா



அசோக்மேத்தா
பிலுமோடி
வாஜ்பாய்
திண்டாடும் அரசியல்



நவீன வாமனன்!
சுகாதியா
தி.மு.க. ஆட்சி தந்த நகர்ப்புற நிலவரிச் சுமை
கடுமையான நகர்ப்புற நிலவரி
கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது!





'மரணம் என்பது ஆத்மாவைக் கொஞ்சம் கூடப் பாதிப்பதில்லை. உடம்புக்குத்தான் சாவு உண்டு. ஆத்மாவுக்குக் கிடையாது. ஒரு சட்டை கிழிந்தால் அதோடு சட்டை போட்டுக்கொள்கிறவனும் அழிந்து போய்விடுகிறானா என்ன? இல்லை. ஒரு சட்டை போனால் அவன் இன்னொரு சட்டையை எடுத்துப் போட்டுக் கொள்கிற மாதிரி ஒரு சரீரம் அழிந்து போனாலும், ஆத்மா அழியாமல் இன்னொரு சரீர சட்டைக்குள் புகுந்து கொள்கிறது' என்று பகவான் கீதையில் சொல்லியிருக்கிறார். 'இப்படி எத்தனை சட்டைகள் கிழிந்து கிழிந்து, இன்னொன்று; அதற்கப்புறம் இன்னும் ஒன்று என்று இந்த ஆத்மா புகுந்து புகுந்து அல்லாடிக் கொண்டிருக்க வேண்டும்? இதற்கு ஒரு முடிவு கிடையாதா?' என்று கேட்டால், 'ஞானியாகி விட்டால் பிரம்ம நிர்வாணம் அடைந்து விடலாம். என்னிடமே பக்தி பண்ணிக்கொண்டிருந்தால் என்னை அடைந்து விடலாம். கடைசிக் காலத்தில் என்னை நினைத்துக் கொண்டே உயிரை விட்டால் கூடப் போதும். அப்புறம் இன்னொரு சட்டை போட்டுக் கொள்ள வேண்டாம்' என்கிறார்.

'சாவு என்றும் பெரிய விஷயமில்லை; சட்டை கிழிகிற மாதிரிதான்' என்று சொல்லிவிட்டு, 'சாகிற சமயத்தில் என்னை நினைத்தால் என்னிடமே வந்து அடுத்த ஜன்மாவே இல்லாமல் ஆக்கிக்கொள்ளலாம்' என்று சொன்னால், சாவு ஒரு பெரிய விஷயம் மாதிரி தானே இருக்கிறது? அந்தச் சமயத்தில் நினைப்பதற்கு என்ன இத்தனை முக்கியத்வம்?

ஆத்மா என்ற மாறாத ஸத்தியத்தின் நிலையிலிருந்து பார்க்கிறபோது சரீரமும் சாவும் துச்சம்தான்; அவை ஒன்றுமே இல்லை. ஆனால் நாம் ஆத்மா என்பதைத் தெரிந்து கொள்ளாதவர்களாகத்தானே இருக்கிறோம்? நமக்குத் தெரிந்தது மாறிக்கொண்டே இருக்கிற இந்த மனசும், மாறிக்கொண்டே இருக்கிற இந்தப் பிரபஞ்சமும்தானே? சாவு உண்டாகி அடுத்த ஜன்மா ஏற்படுகிறபோது இந்த ஜன்மாவிலே இந்தப் பிரபஞ்சத்திலே நமக்கு இருந்த தொடர்புகளெல்லாம் துண்டித்துப் போய், வேறு புதுத் தொடர்புகள் உண்டாகின்றன. இதே இடத்தில், இதே குடும்பத்தில் நாம் மறுபடியும் பிறந்தால்கூட நமக்கு அது தெரியப்போவதில்லை. ஆனால் இப்படி இங்கேயேதான் பிறப்போம் என்று சொல்ல முடியாது. வேறே சூழ்நிலையில், வேறு தினுசான மதத்தில், நாகரிகத்தில், சம்பிரதாயத்தில் போய்ப் பிறந்தாலும் பிறப்போம். ஆத்மா மாறாதது என்றாலும் நமக்கு அது தெரியாத விஷயம். மனஸின் லோகந்தான், மனஸின் ஆட்டங்கள்தான் நமக்குத்தெரிந்ததெல்லாம். இந்த மனஸின் வளர்ச்சி — அது நல்ல வளர்ச்சியாக இருந்தாலும் சரி, கெட்ட வளர்ச்சியாக இருந்தாலும் சரி — பெரிய அளவுக்குச் சூழ்நிலையினால்தான் உருவாக்கப்படுகிறது. இந்த ஆயுஸ் பூராவும் நாம் ஒரு மாதிரி சூழ்நிலையில் பழகி வளர்ந்துவிட்டோம். சம்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டு விட்டோம். சம்பிரதாயங்களை அநுசரித்து அவற்றில் ஒட்டிக் கொண்டு விட்டோம். இதெல்லாம் சாவோடு கத்தரித்துப் போகிறது என்று பார்க்கிறபோது, (சாவு ஆத்மாவைக் கொஞ்சம்கூடப் பாதிப்பதில்லை என்றாலும்) ஆத்மாவாக இருக்கத் தெரியாத நம்மை ரொம்பவும் பாதிக்கத்தானே செய்கிறது? 'அடுத்த ஜன்மாவில் எந்த மாதிரிப் பிறவி ஏற்படுமோ? எந்த மாதிரி சூழ்நிலையில் பிறப்போமோ?' என்று பெரிய கேள்வியாகத்தானே இருக்கிறது? 'எப்பிறவி வாய்த்திடுமோ?' என்று பெரிய பெரிய அறிஞர்களே பயப்பட்டிருக்கிறார்களே!

இதனால்தான் பகவான் ஒரு ஜீவனுடைய தொடர்புகள் அடியோடு மாறிப்போய்விடுகிற அந்த மரண சமயத்தில், ''ஐயோ, பாவம்! இந்த ஜீவன் மறுபடியும் ஜன்மா இல்லாமல் பண்ணிக் கொள்ளாமலே உயிரை விடுகிறது. இப்போது முழுக்க வேறு தினுசான சூழ்நிலையில் பிறந்து, 'அடியைப் பிடிடா பாரத பட்டா' என்று ஆத்மாபிவிருத்திக்கான காரியத்தை இது ஆரம்பித்தாக வேண்டும். இந்த ஜன்மாவின் கர்மாதான் அடுத்த ஜன்மாவிலும் துரத்திக் கொண்டு வரும் என்பது வாஸ்தவமானாலும், அடுத்த ஜன்மாவில் சூழ்நிலை வேறுதானே? அதிலே இது பழைய கர்மாவைக் கழித்துக்கொண்டு மேலே போகுமோ அல்லது இன்னும் கெட்ட கர்மாவைப் பண்ணி வீணாகுமோ?'' என்று பகவானே இரக்கப்பட்டுத்தான் ரொம்பவும் பெரிய மனஸோடு, ''சரி, இந்தச் சாகிற சமயத்தில் இது நம்மை நினைத்துவிடட்டும். அது போதும். இதற்கு மறுபடியும் ஜன்மா இல்லாமல் நாமே எடுத்துக் கொண்டு விடலாம்'' என்று பெரிய 'கன்ஸெஷன்' தந்திருக்கிறார். இப்படித் தோன்றுகிறது.

அவரே எடுத்துக் கொண்டு விடுவார்; அல்லது அடுத்த ஜன்மாவில் அவரையே

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

சரித்திர சிப்ஸ்!

ராபர்ட் கிளைவின் இறுதிக்காலமும் அமைதியாக அமையவில்லை. இங்கிலாந்து பாராளுமன்றத்தில் அவர்மீது பல குற்றங்கள் சுமத்தப்பட்டது. ''ஆடு திருடிய கள்ளனைப்போன்று நான் விசாரிக்கப்பட்டேன்'' என்று மனம் நொந்து கூறிய கிளைவ் கி. பி. 1774ல் தற்கொலை செய்து கொண்டார்.



○ கி. மு. 280ல் செலுகஸ் நிகேடார் கொலை செய்யப்பட்ட பிறகு அவரது பதவிக்கு வந்த ஆண்டியோகஸ் I என்ற மன்னன் பிந்துசாரனுக்கு இனிய திராட்சை ரசத்தையும் (மது), உலர்த்தப்பட்ட பன்றி இறைச்சியையும் அனுப்பித் தன் உறவை உறுதி செய்து கொண்டான்.

○ அத்யாவசியமான பண்டங்களின் விலை ஏற்றத்தை முதன் முதலில் கட்டுப்படுத்தி, வியாபாரிகள் சரியான அளவையும், எடைக் கற்களையும் பயன்படுத்த வேண்டும் என்று சட்டம் போட்டு, கடுமையாக நிறைவேற்றிய முதல் மன்னன் அலாவுதீன் கில்ஜி.


○ குதிரை வியாபாரி ஒருவரின் பேரனாகப் பிறந்தவர் ஷேர்ஷா. மாற்றாந்தாயின் கொடுமை தாங்காமல் தந்தையின் ஜாகிரை விட்டுப் பிரிந்து தம் சொந்த முயற்சியால் அரேபியா மற்றும் பாரசீக மொழிகளைக் கற்றுப் படிப்படியாக டெல்லி மன்னரானார். இவர் தாம் முதன் முதலாகத் தம் ஆட்சிக் காலத்தில் அரசாங்க அலுவலர்களை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வேறு ஊர்களுக்கு மாற்றும் முறையை ஏற்படுத்தினார்.

-- லலிதா நாராயணன்

நினைக்கும்படியான சூழ்நிலையில் பிறக்க வைத்துப் படிப்படியாக மேலே கொண்டு போவார் — என்று வைத்துக் கொள்ளலாம். எப்படிப் பார்த்தாலும் இதற்கு நாம் செய்கிற உபகாரம் மிகவும் விசேஷமானது. ஆனபடியால்தான் ஒரு ஜீவனின் மரண சமயத்தில் செய்ய வேண்டிய பணியைப் பற்றி இவ்வளவு சொன்னேன்.

● ● ●

ஒரு ஜீவன் இருக்கும்போதும் இறக்கும்போதும், இறந்த பின்பும் செய்ய வேண்டிய தொண்டுகளை நிறையச் சொல்லிக்கொண்டே போயிருக்கிறேன். 'இறக்கும்போது நாம் செய்கிற பணியினால் அந்த ஜீவன் பகவத் ஸ்மரணையோடு உயிரை விட்டால் அது பகவானை அடைந்து விடுமல்லவா? இதற்கப்புறம், அதற்கு இறந்த பின் செய்ய வேண்டிய ஸம்ஸ்காரம், திவஸம், திங்கள் எல்லாம் எதற்குச் செய்ய வேண்டும்?' என்று கேட்டு விடக் கூடாது. ஏனென்றால் நமக்குத் தெரிவது அந்த ஜீவனின் அந்திம காலத்தில் அது பகவானை நினைக்கும்படியான **முயற்சியை நாம் பண்ணுகிறோம் என்பதுதான்**. அந்த முயற்சி எவ்வளவு பலித்தது என்பது நமக்குத் தீர்மானமாகத் தெரியாதது. நாம் கங்கா தீர்த்தம், விபூதி, துளஸி கொடுத்து நாமோச்சாரணம் பண்ணுவதை அந்த ஜீவன் எந்த அளவுக்கு மனஸுக்குள் வாங்கிக் கொண்டது என்பது நமக்குத் தெரியாது. அது பகவத் ஸ்மரணையோடுதான் உயிரை விட்டதா என்பது நமக்குத் தெரியாத விஷயம். ஆனதால், அது பகவானிடம்தான் போய் விட்டது என்று நாமாகத் தீர்மானம் பண்ணிக் கொண்டு, அபரகாரியம், சிராத்தம் முதலானவைகளை நிறுத்தி விடக்கூடாது. (தொடரும்)



சதாபிஷேகம் கண்ட சமூகப் பணியாளர்!

சிறந்த சமூகப் பணியாளரும் ஹரிகதை காலட்சேபத்துறை வித்பன்னருமான 'கீர்த்தன காண்டீரவ' ஸ்ரீ ஆர். ரகுநாத பட்டாச்சாரியாரின் சதாபிஷேக வைபவத்தை பம்பாய் பிரமுகர்கள் விமரிசையாகக் கொண்டாடினர். டிசம்பர் 5ந் தேதி ஷண்முகானந்த சபை ஹாலில் நடைபெற்ற கோலாகல விழாவுக்கு பம்பாய் முன்னாள் ஷெரீப் ஸ்ரீ டி. வி. ராமானுஜம் தலைமை வகித்தார். பண்டிட் கோபாலாச்சார், ஏ. வி. ராமலிங்கம், எம். சுந்தரம், கே. எஸ். என். சர்மா, முன்னாள் மேயர் எம். மாதவன், சங்கீத கலாநிதி ஆலத்தூர் சீனிவாச அய்யர், கே. வேங்கடாச்சாரி போன்ற பிரமுகர்கள் 'சதாபிஷேகம்' கண்டவரின் பெருமைகளை எடுத்துரைத்தார்கள். விழாக் கமிட்டிச் செயலாளர் திரு சேஷாத்ரி நன்றி நவில, சதாபிஷேக விழா நிறைவுற்றது.





ட்ராக்டர்—இந்தியாவின் அதிகமாக விற்பனையாகும் ஸிந்தெடிக் வாஷபிள் டிஸ்டெம்பர்


● ஒவ்வொரு முறையும் தரப் பரிசோதனை—ஒவ்வொரு முறையும் அதன் தரம் 50 முறைகள் ஆராய்ச்சிக் கூடத்தில் கடுமையாகப் பரிசோதிக்கப்படுகிறது.



கண்கூடான நன்மைகளைப் பெற, ட்ராக்டர் வண்ணம் பிரயோகிக்குமுன் டெகோப்ரைம் சிமெண்ட் ப்ரைமரை உபயோகியுங்கள்.

ஏஷியன் பெயிண்ட்ஸ்

CMAP-3-183 tam


பி.வி.ஆர் எழுதும்
மதுர நாயகி
அடுத்த இதழில் ஆரம்பம்

ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய ஊது உலையன் இயக்கத்தினை ஒரு கம்ப்யூட்டர் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது! மாதத்துக்கு ஒன்றரை லட்சம் டன் இரும்பை உற்பத்தி செய்ய கம்ப்யூட்டர் பெரிதும் உதவி வருகின்றது. உலையினுள் கரியைப் போடும் அளவினை கம்ப்யூட்டர் கட்டுப்படுத்துகின்றது. இதனால் இரும்பினுள் இருக்கும் கார்பனின் விகிதத்தை மாற்றி அமைத்துக் கொள்ள முடிகின்றது. மூன்று ஊது உலைகளை ஒரே கம்ப்யூட்டரைக் கொண்டு கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். உலையினுள் வெப்பம், அழுத்தம், வாயுக்களின் தன்மை ஆகியன கம்ப்யூட்டரின் உதவியால் ஆராயப்பட்டு நிமிடத்துக்கு நிமிடம் உலையின் நிலைமையினைத் தெரிந்து கொள்ள முடிகின்றது. தரமுள்ள இரும்பு உற்பத்திக்குக் கம்ப்யூட்டர் இன்றியமையாததாகி விட்டது. இது ஒன்று மட்டுமா? இன்னும் எத்தனையோ துறைகளில் கம்ப்யூட்டர் உதவுகிறது.

மனிதனின் வேகத்துக்கும், விவேகத்துக்கும் சவால் விடும் எலெக்ட்ரானிக் கம்ப்யூட்டர்கள் அசுர சக்தி படைத்தவை. பத்து 'கணக்கிட்டுப் பொறி' (Calculators)களின் உதவியோடு நாற்பது ஆண்டுகளில் செய்து முடிக்கும் கணக்குகளை ஓர் எலெக்ட்ரானிக் கம்ப்யூட்டர் இருபது மணி நேரத்தில் செய்து முடிக்கும் என்றால் கம்ப்யூட்டர்களின் திறமையை உணரலாம். செவ்வாய் கிரகத்தை நோக்கிச் செல்லும் ராக்கெட்டின் வேகத்தைக் கட்டுப்படுத்தவும், அதன் பாதையை, தூரத்தைக் கணக்கிடவும் கம்ப்யூட்டர்கள் பயன்படுகின்றன.


கம்ப்யூட்டரின் ஒரு முக்கியப் பகுதி நினைவு அல்லது சேமிப்புப் பகுதி (memory or Storage unit) இப்பகுதி கட்டளைகளையும், நாம் கொடுக்கும் புள்ளி விவரங்களையும், அவைகளை அடுத்து உருவாகும் இடைப்பட்ட கணக்குகளையும், இறுதியில், கணக்குகளின் சரியான விடைகளையும் நினைவில் பதிந்து வைக்கிறது; அல்லது சேமித்து வைக்கிறது. நாம் விரும்பியபோது அவைகளை நமக்கு அளிக்கிறது. ஓர் இயந்திரம் எப்படி நாம் கூறுவதை நினைவில் வைத்துக் கொள்ளும் என்பது புதிதல்ல. நாம் புரொஜெக்டரில் சினிமா பிலிமை ஓட விடும்போது அன்று படப் பிடிப்பில் பார்த்ததை அந்தப் பிலிம் நினைவில் வைத்திருந்து நமக்குத் திரையில் அளிப்பதுபோல் எலெக்ட்ரானிக் கம்ப்யூட்டர்களும் நினைவில் வைத்திருந்து நமக்கு அளிக்கின்றன.

கம்ப்யூட்டரின் மற்றொரு முக்கிய பகுதி ''கண்ட்ரோல் டிவைஸ்'' என்பதாகும். இந்த கண்ட்ரோல் டிவைஸ் நாம் கம்ப்யூட்டரிடம் அளிக்கும் கட்டளைகளின்படி இயங்குவதாகும். இக்கட்டளைகள் நாடா மூலமாக நினைவுப் பிரிவுக்கு (memory unit) அனுப்பப்படுகின்றன. இதில் ஏற்படும் ஏனைய சோதனைகளையும் கம்ப்யூட்டரே செய்து கொண்டு இறுதியில் விடையை நமக்கு அளிக்கிறது.

பூமியின் அமைப்பு, கோள்களின் தூரம் போன்ற மிகப் பெரிய சிக்கலான விவரங்களை அறியக் கோடிக் கணக்கான கட்டளைகளை எப்படி விவரமாகத் தயாரிக்க இயலும் என்ற வினா எழும். அது போன்ற சமயங்களில் அக்கட்டளைகளை, கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்று பல பிரிவுகளாகப் பிரித்து ஒரு குறிப்பிட்ட வரிசைப்படி கம்ப்யூட்டரில் அளிக்க வேண்டும். இம்முறைப்படி பாலம் கட்டுதல், விமானம் கட்டுதல் போன்றவற்றுக்கான மிகக் கடினமான கணக்கு முறையும் செய்யலாம்.

அடுத்தது இக் கணக்குகளின் இறுதி முடிவுகளை வெளியிடும் முறை. இம் முடிவுகளைப் போட்டோகிராபிக் படங்களில் பதிவு செய்யலாம். அல்லது காகித நாடாக்களிலும் பதிவு செய்யலாம். கம்ப்யூட்டர் இயக்கத்தில் மிகவும் மெதுவாக வேலை செய்யும் பகுதி இதுதான்.

கம்ப்யூட்டரின் உதவியால் வேகம் பெறும் இன்னொரு துறையைக் காண்போம்.



கார்ட்டூன் சினிமாப் படம் தயாரிக்க வேண்டுமானால் ஆயிரக் கணக்கான படங்களை முதலில் தனித் தனியே வரைந்து வைத்துக் கொள்ள வேண்டும். இதற்குப் பல ஓவியர்கள் பல நாட்கள் உழைக்க வேண்டியிருக்கும். ரஷ்யர்கள் கண்டுபிடித்துள்ள கம்ப்யூட்டரின் உதவியால் இரண்டாயிரம் கார்ட்டூன்களை நான்கு மணி நேரத்தில் வரைந்துவிட முடிகிறது. கார்ட்டூன் சினிமாவில் குறிப்பிட்ட கதா பாத்திரத்தினுடைய இயக்கத்தின் ஆரம்ப இறுதிக் கட்டங்களை மட்டும் ஓவியர்கள் வரைகிறார்கள். பின்னர் மின்காந்த முறையில் இவற்றைக் கம்ப்யூட்டரில் செலுத்துகின்றனர். ஆரம்பம், இறுதிக் கட்டங்கள் நீங்கலாக இடைப்பட்ட பல்வேறு கட்டங்களுக்கும்தேவையான கார்ட்

லட்சியவாதி கதாநாயகனை அவன் மேற்கொண்ட லட்சியமே அதிக 'சான்ஸ்' இல்லாமல் செய்து பழி வாங்கி விட்டது. படத்தின் கடைசியில் வெளியாகும் 'சஸ்பென்ஸ்' காட்சிக்காகக் காத்திருக்கும் கதாநாயகன் வெறும் மக்காகப் போய்விடுகிறான்! முத்துராமன் இதில் நடிக்க ஒப்புக் கொண்டிருக்கக் கூடாது.

லக்ஷ்மிக்கு இரட்டை வேடம். ஒன்று ஊமை, இன்னொன்று, தைரியம் உள்ள புத்திசாலிப் பெண். இவர்கள் இரட்டைப் பிறவிகளாம்! புத்திசாலிப் பெண் கையில் சவுக்கை எடுத்துக் கொண்டு திமிர் பிடித்தவர்களை அடக்கி, ஒடுக்கித் தன் ஊமைச் சகோதரிக்கு வாழ்வு அளிக்கிறாளாம்!

இது லட்சியவாதிக் கணவனுக்குத் துளிக்கூடச் சந்தேகத்தை எழுப்பாதது ஆச்சரியம்தான்! ரயில் விபத்தின் அதிர்ச்சியில் தன் ஊமை மனைவிக்குப் பேசும் சக்தி வந்து விட்டதாகக் கணவன் நம்பலாம். ஆனால் அந்த அப்பாவிப் பெண்ணுக்கு இத்துணை துணிச்சலும், சாகசமும் எங்கிருந்து வந்தன என்றுகூடவா சந்தேகப்படமாட்டான்?

லக்ஷ்மி இரு வேடங்களிலும் நன்றாய் நடித்திருக்கிறார். அப்பாவித்தனமும் துணிவும் மாறி மாறி வெளிப்பட்டு அவருக்குப் பாராட்டைத் தேடித் தருகின்றன. பார்வையினாலேயே நடிக்கிறார்.

மனோரமா, கருணிராஜன், வெ. ஆ. மூர்த்தி ஆகியவர்கள் என்னென்னவோ செய்து பார்த்தும் நகைச்சுவைக் காட்சிகள் வலிவிழந்து தள்ளாடி விழுந்து விட்டன. எஸ். வரலட்சுமி பணத் திமிர் பிடித்த குடும்பத் தலைவியாக வந்து ஆட்டம் போடுவது ஏற்கனவே அவருக்குப் பழகிப் போனதுதான்.

கதையைச் சரியாய்த் தயாரித்துக் கொள்ளாமல் படம் என்று தயாரித்து ஏன்தான் இப்படி அறுக்கிறார்களோ, தெரியவில்லை. இப்படத்தில் புதியது என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ள ஒரு காட்சிகூட இல்லை. இதில் பார்த்து மகிழவோ, உணர்ந்து நெகிழவோ ஒரு காட்சிகூட இல்லாதது நடிகர்களின் குற்றம் அல்ல; திரைக் கதை என்ற திமிங்கிலத்தின் குற்றம்தான். அது எல்லா உணர்ச்சிகளையும் விழுங்கி ஏப்பம் விட்டு விட்டது.



நல்ல பெயர் பெற்றிருக்கும் கிருஷ்ணன்–பஞ்சு இப்படத்தையும் டைரக்ட் செய்திருக்கிறார்களே!

''வாழ்வு என் பக்கம்'' – வெற்றி இதன் பக்கம் தலை காட்டும் என்று தோன்றவில்லையே!

– காந்தன்

டுன் படங்களைக் கம்ப்யூட்டர் விரைவில் வரைந்து விடுகின்றது. அதன் ஆற்றலுக்கு இப்படி எத்தனையோ உதாரணங்கள்.


கடமை தவறாமல் இயங்கும் கம்ப்யூட்டர் எப்போதாவது கண்ணியம் இழக்குமா? அது கம்ப்யூட்டரை இயக்குபவரைப் பொறுத்திருக்கிறது. அவர் மோசடிக்காரராய் இருந்தால் கம்ப்யூட்டரின் உதவியுடன் அவர் ஆயிரக் கணக்கிலோ லட்சக் கணக்கிலோ வாய்ப்புக்கு ஏற்றபடி மோசடி பண்ணலாம். ஆனால் இதற்கு அசாதாரண கூர்மதி வேண்டும்.

கம்ப்யூட்டர்கள் அதிகரிக்கும்போது வேலை வாய்ப்புக்கள் குறைந்து போகும் என்று பலர் கருதுகிறார்கள்.

இது பெருமளவுக்கு உண்மைதான் என்றாலும் புது ரகமான வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கவும் செய்கின்றன என்பது மேல் நாடுகளின் அனுபவம். கம்ப்யூட்டர்களைக் கையாளத் தக்க அறிவாற்றல் மிக்கவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன.

நன்றி: தொழில் இந்தியா, கோவை 641-037: நவம்பர் 1976 இதழ். தனிப் பிரதி விலை ரூ. 1.00.

கேர்ஃப்ரீ* பாதுகாப்பு



அதாவது இது முழுமையான பாதுகாப்பு அளிக்கிறது. இதற்காக நீங்கள் கொடுக்கும் பணத்தைவிட மிக அதிக மதிப்பு வாய்ந்தது.

மாதத்தில் அந்த ஐந்து நாட்கள், பெண்களின் உடலுக்கு முழுவதும் நம்பகமான, தனிப்பட்ட பாதுகாப்பு தேவைப்படுகிறது. அதாவது கேர்:ப்ரீ பாதுகாப்பு. சானிடரி பாதுகாப்பு சாதனங்களை உருவாக்கும் உலகின் தலையாய நிறுவனமான ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன் இதைத் தயாரிக்கிறார்கள். ஒரு பெண்மணி பாதுகாப்பையும் காப்புறுதியையும் உணருவதற்குத் தேவையான சிறந்த அம்சங்களைக் கொண்டுள்ளது கேர்:ப்ரீ.

விசேஷ ஒண்டர்ராப் மேலுறை
கேர்:ப்ரீ தன் வடிவத்தை சீராகவைக்க உதவுகிறது...சாதாரண நேப்கின்களைப் போல் இது வளையவோ, நீளவோ செய்யாது. இது உட்புற அடுக்குகளில் ஈரத்தை உறிஞ்சிக் கொள்கிறது. எனவே உங்கள் சருமம் உலர்ந்து இருக்கும், உங்களுக்கு சௌகரியமாக இருக்கும்.

நீலநிற பிளாஸ்டி-ஷீல்ட் தடுப்பு
கேர்:ப்ரீயின் அடிப்பாகம் மற்றும் பக்கங்களைப் பராமரிக்கிறது பாதுகாப்பான பாலித்தீன். ஆகையால், அது இடம் விட்டு நகரும் வாய்ப்பில்லை; கறை படியும் பயம் இல்லை.

அதிக உறிஞ்சும் தன்மையுள்ள விசேஷ பொருள்
மிக நன்றாக உறிஞ்சுகிறது; உறுதியுடன் பாதுகாப்பளிக்கிறது.

கச்சிதமாகப் பொருந்த முனைப்பாகம்
கேர்:ப்ரீ மட்டுமே விரும்பியபடி சரிசெய்து கொள்ளும் நீளத்தில் வருவதால், அது உங்களுடைய உடலில் கச்சிதமாகப் பொருந்துகிறது. ஒவ்வொரு பேக்கிலும், இலவச கேர்:ப்ரீ பெல்ட் ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

எளிதில் ஒதுக்கிவிடலாம்
கேர்:ப்ரீ ஒரு ஆபத்தற்ற, எளிதில் ஒதுக்கித் தள்ளக்கூடிய நேப்கின்; இதை ஃப்ளஷில் தள்ளிவிடலாம்...வெளியில் செல்லும் போதோ, பயணத்தின்போதோ இது ஒரு வரப்பிரசாதம்—
கேர்:ப்ரீ பாதுகாப்பு;முழுமையான பாதுகாப்பினை விரும்பும் பெண்மணிக்கு இது மிகவும் முக்கியமானது.
கேர்:ப்ரீ: உங்களுக்கு முழுமையான உறுதி தரும் பாதுகாப்பு.





கேர்ஃப்ரீ:
உங்களுக்கு முழுமையான உறுதி தரும் பாதுகாப்பு.

*சானிடரி நேப்கின்களின் வர்த்தகப் பெயர். கேர்:ப்ரீ மற்றும் ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன், ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன், யு. எஸ்.ஏ-வின் டிரேட்மார்க்குகள்.

Johnson & Johnson*

குவாலியர் ரேயானின் மகத்தான 26 ஆண்டு காலப் பணி

Sobhagya GR 74-2-Tam.



தன்வலிமை பெறும் கனவை நனவாக்கி வரும் பணி.

ரேயான் துணிகள், ஸ்டேபிள் இழை, ரேயான்-கிரேடு பல்ப் (கூழ்), ரேயான் ஸ்டேபிள் நூலிழைத் தொழிற்சாலைகளுக்-கான எந்திர சாதனங்கள் ஆகிய எல்லா-வற்றையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கென குவாலியர் ரேயான் செய்துவரும் முயற்சிகள், நாடு சுதந்திரம் எய்திய நாளிலேயே தொடங்கிவிட்டன.

மூங்கில் மற்றும் இதர கெட்டி மரங்களிலிருந்து கரை திறனுள்ள ரேயான்-ரகக் கூழ் தயாரிப்பு, மற்றும் ரேயான், பல்ப், இவை சார்ந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான நுட்பமிக்கமான எந்திர சாதனங்களின் உற்பத்தி முதலியவற்றிலே குவாலியர் ரேயான் முன்னோடியாக விளங்குவதனால், ரேயான் தொழிலிலே நம் நாடு தன்வலிமை பெற வழியமைந்துள்ளது.

இன்று, குவாலியர் ரேயானின் ஸ்டேபிள் நூலிழை உற்பத்தியளவு, 520 லட்சம் பேருக்கு ஆடை வழங்கப் போதுமானதாக உள்ளது. மரக் கூழ் உற்பத்தியோ, ஆண்டு தோறும் ஒரு லட்சம் டன்களுக்கு மேல்; இது செல்லுலோஸ் இழையளவிலே கணக்கிட்டால், 5.2 லட்சம் பருத்தி பேல்களுக்கு ஈடாகும்.

கடந்த பத்தாண்டுகளில், குவாலியர் ரேயான் நம் நாட்டின் பொக்கிஷத்திற்கு, வரிகளும் தீர்வைகளுமாக ரு. 90 கோடி செலுத்தியுள்ள-தோடு, அதே காலத்தில் ரு. 360 கோடி அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தியுள்ளது. இதை நோக்கும்போது, தன்வலிமை வாய்ந்த பொருளாதார அமைப்புக்கு குவாலியர் ரேயான் செலுத்திவரும் மகத்தான பணியின் பெருமை தெளிவாக விளங்கும்.

குவாலியர் ரேயான்—

தேச முன்னேற்றமே முதன்மை எனக் கருதுவோர்.

தி குவாலியர் ரேயான் ஸில்க் மானுபாக் (வீவிங்.) கோ. லிட்., பிர்லாகிராம், நாக்தா (ம.பி.)

பார்த்திபன் கனவு

அத்தியாயம் 23

நள்ளிரவில்

அன்றிரவு ஏறக்குறைய ஒன்றரை ஜாமம் ஆனபோது உறையூர் நகரில் நிசப்தம் குடிகொண்டது. வீதி முனைகளில் கல் தூண்களின் மேல் எரிந்து கொண்டிருந்த அகல் விளக்குகள் ஒவ்வொன்றாக மங்கி அணையத் தொடங்கின.

உறையூருக்கும் ஸ்ரீரங்கத்துக்கும் இடையில் சென்ற காவேரி நதியின் மேல் காரிருள் படர்ந்திருந்தது. அன்று சுக்கிலபட்சத்துச் சதுர்த்தி. போதாததற்கு வானத்தைக் கருமேகங்கள் மூடியிருந்தன. இரண்டொரு மழைத் தூற்றலும் விழுந்தது.

அத்தகைய காரிருளில் காவேரி நதியின் ஓரமாக ஜலத்தைக் கிழித்துக் கொண்டு படகு செல்லும் சலசலப்புச் சத்தம் கேட்டது. கொஞ்சம் உற்றுப் பார்த்தோமானால், ஒரு சிறு படகு கிழக்கேயிருந்து மேற்கே கரை ஓரமாகப் போவதைக் காணலாம். படகில் யாரோ ஒருவர் உட்கார்ந்திருப்பதும் மங்கலாகத் தெரிகிறது. கரையில் நின்ற வண்ணம் ஒருவர், படகைக் கயிற்றினால் இழுத்துக் கொண்டு போவதும் புலப்படுகிறது.

இன்னும் கொஞ்சம் நெருங்கிப் பார்த்தோமானால், அவர்கள் இருவரும் நமக்குத் தெரிந்த புள்ளிகள்தான் என்பதைக் காண்கிறோம். வேறு யாரும் இல்லை; கரையிலிருந்து படகை இழுத்துக் கொண்டு போகிறவன் படகோட்டி பொன்னன்; படகில் உட்கார்ந்திருப்பது வள்ளிதான். வள்ளியின் கையில் ஒரு சிறு கூடை இருக்கிறது. அதற்குள்ளே அகல் விளக்கு ஒன்று மினுக்கு மினுக்கென்று எரிகிறது. அது அணைந்து விடாமல் வள்ளி தன்னுடைய சேலைத் தலைப்பால் மறைத்துக் கொண்டு ஜாக்கிரதையாக எடுத்து வருகிறாள்.

அந்தக் கும்மிருட்டில் பிரவாகத்துக்கு எதிராகப் படகை மேற்கு நோக்கி இழுத்துக் கொண்டு போவது இலேசான காரியம் இல்லை. வழியில் படித்துறைகளும், நதிக் கரை மண்டபங்களும், ஓங்கி வளர்ந்து ஆற்றில் கவிந்திருந்த விருட்சங்களும் குறுக்கிட்டன. ஆனாலும், பொன்னன் சிறிதும் தளர்ச்சி அடையாமல் மேற்படி தடங்கல்களை யெல்லாம் தாண்டிப் படகை இழுத்துக் கொண்டு போனான்.

படகுக்குப் பின்னால் சுமார் முந்நூறு அடி தூரத்தில் ஒரு நெடிய உருவம் வந்து கொண்டிருந்தது. படகு நின்ற போது எல்லாம் அதுவும் நின்றது. படகு மேலே சென்றால் அதுவும் தொடர்ந்து வந்தது. கொஞ்சம் நெருங்கிப் பார்த்தால் இந்த உருவம் நமக்குத் தெரிந்த மனிதனின் உருவந்தான் என்பதைக் காண்கிறோம். ஆமாம்; மாரப்ப பூபதிதான் அப்படிப் பொன்னனுடைய படகை நள்ளிரவில் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான்.

அவனுக்குப் பின்னால் இன்னும் கொஞ்ச தூரத்தில் அதே நதிக் கரை ஓரமாக இன்னோர் உருவம் சத்தம் செய்யாமல் வந்து கொண்டிருந்தது. ஜடா மகுடம் தரித்த சந்நியாசியின் உருவம் அது. ஆம்; போர்க்களத்தில் பார்த்திபனுக்கு வரம் அளித்தவரும் பொன்னன் குடிசையில் நாம் சந்தித்தவருமான அதே சிவனடியார்தான்!

ஏறக்குறைய நள்ளிரவு ஆன சமயத்தில், பொன்னன் படகை நிறுத்தி மிகவும் மெல்லிய குரலில், ''வள்ளி! இறங்கு, வந்துவிட்டோம்'' என்றான்.

அந்தச் சமயத்தில் ஸ்ரீ ரங்கநாதரின் ஆலயத்தில் அர்த்தஜாம பூஜைக்குரிய மணிச் சத்தம் 'ஓம் ஓம்' என்று கிளம்பி நள்ளிரவின் நிசப்தத்தைப் பீறிக் கொண்டு வானவெளியெங்கும் வியாபித்து எதிரொலி செய்தது.

பொன்னனுக்கும் வள்ளிக்கும் உடம்பு நடுங்கிற்று. ''நல்ல சகுனம், வள்ளி! காரியம் ஜெயந்தான்! சீக்கிரம் இறங்கு!'' என்றான் பொன்னன்.

வள்ளி விளக்குக் கூடையை ஜாக்கிரதையாக எடுத்துக் கொண்டு படகிலிருந்து இறங்கினாள்.

அமரர் கல்கி

பொன்னன் படகை அங்கிருந்த மரத்தின் வேரில் கட்டினான்.

பிறகு இருவரும் கரை மேல் ஏறினார்கள். அங்கே ஒரு நீண்ட மதிற் சுவர் இருந்தது. அந்தச் சுவரில் ஒரு வாசற்படி காணப்பட்டது. அதன் கதவு பூட்டியிருந்தது. பொன்னன் தன் மடியிலிருந்து ஒரு கொத்துச் சாவியை எடுத்து ஒரு சாவியினால் பூட்டைத் திறந்தான்.

இருவரும் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே பிரவேசித்தார்கள்.

'கம்'மென்று செண்பகப் பூவின் நறுமணம் வந்தது.

''பார்த்தாயா, வள்ளி! செண்பகப் பூவின் வாசனையை! இந்த அரண்மனைத் தோட்டத்துக்குள் இதற்குமுன் நீ வந்தது கிடையாதே?'' என்றான்.

''இரையாதே!'' என்றாள் வள்ளி.

பொன்னன் மறுபடியும் கதவைச் சாத்தி உட்புறம் தாளிட்டான்.

''பயப்படாதே! என் பின்னோடுவா!''

''நீ சத்தம் போடுவதில்தான் எனக்குப் பயம்!''

இருவரும் அந்தச் செண்பகத் தோட்டத்துக்குள் புகுந்து சென்றார்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் அதே மதில் வாசற்படியண்டை மாரப்பபூபதி வந்தான். கதவின் வெளிப்புற நாதாங்கியை இழுத்து மாட்டினான்.

பிறகு அவன் நதியில் இறங்கிப் பொன்னன் மரத்தின் வேரில் கட்டியிருந்த படகை அவிழ்த்து ஆற்றோடு மிதந்து போகும்படி இழுத்து விட்டான்.

பின்னர் மதிற்சுவர் ஓரமாக மிக விரைவாய் நடந்து சென்றான்.

படகு கரையோரமாக மிதந்து கொண்டு சிறிது தூரம் போயிற்று. அங்கே வந்து கொண்டிருந்த சிவனடியார் அதைப் பிடித்து நிறுத்தினார். நிறுத்திய இடத்துக்கு அருகிலிருந்த ஒரு பெரிய விருட்சத்தின் வேரில் அதை இழுத்துக் கட்டினார்.

மறுபடியும் மேல் நோக்கிச் சென்று அதே மதிற்சுவரின் வாசற்படிக்கு வந்தார். மாரப்ப பூபதி இழுத்துப் போட்ட நாதாங்கியைக் கழற்றி விட்டார்.

மீண்டும் திரும்பிச் சென்று படகு கட்டியிருந்த மரத்துக்குப் பின்னால் அமர்ந்தார்.

அச்சமயம் நதியின் அக்கரையில் அநேக தீவர்த்திகளுடன் ஒரு கும்பல் காணப்பட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் அந்தத் தீவர்த்திகள் நதியின் நடு மத்திக்கு வந்துவிட்டன. பல படகுகள் நதியைக் கடந்து வந்து கொண்டிருந்தன என்று தெரிந்தது.

சிவனடியார் மறைந்திருந்த மரத்துக்குச் சிறிது கிழக்கே படகுகள் கரைக்கு வந்து சேர்ந்தன. படகுகளிலிருந்து பலர் இறங்குகிறது தீவர்த்திகளின் ஜோதியில் தெரிந்தது. அவர்களில் சிறுத்தொண்டரும் அவர் மனைவியாரும் குந்தவி தேவியும் காணப்பட்டனர். சக்கரவர்த்தியின் பிரதிநிதியாக உறையூரை ஆண்டு வந்த தளபதி அச்சுதவர்மர் அவர்கள் எல்லோருக்கும் முன்னால் சென்றார். மற்றப் பரிவாரங்களும் ஏவலாளர்களும் பின்னால் வந்தார்கள்.

ஸ்ரீ ரங்கநாதரின் அர்த்தஜாம ஆராதனையைத் தரிசித்துவிட்டுத் திரும்பிய அந்தப் பக்தர் குழாத்தில் சக்கரவர்த்தி நரசிம்மவர்மரை மட்டும் காணவில்லை.

காவேரிக் கரையை ஒளிமயமாக்கிய தீவர்த்திகளுடன் அந்தக் கும்பல் படகிலிருந்து கரையில் இறங்கியபோது சிவனடியார் தாம் இருந்த மரத்தின் மறைவில் இன்னும் நன்றாய் மறைந்து கொண்டு அசையாமல் நின்றார். அவர் மூச்சுவிடும் சத்தம்கூட அப்போது கேட்கவில்லை.

தீவர்த்திகளுடனேயே அந்தக் கும்பல் நகருக்குள் புகுந்து மறைந்த பிறகு காவேரி நதி தீரத்தில் முன்னால் இருந்ததைவிட அதிகமான கனாந்தகாரம் குடி கொண்டது.

சிவனடியார் மரத்தின் மறைவிலிருந்து மறுபடியும் வெளி வந்து நதிக்





கரையில் படகின் அருகில் அமர்ந்தார். அந்தக் காரிருளிலுங்கூட மேற்கூறிய மதில் வாசலின் பக்கம் அவருடைய கண்கள் கூர்மையாய்ப் பார்த்தன. அவருடைய செவிகளும் கதவு திறக்கப்படும் சத்தத்தை எதிர்நோக்கிக் கூர்மையாய்க் கேட்கலாயின.

அத்தியாயம் 24

மாரப்பனின் மனக் கலக்கம்

பொன்னனையும் வள்ளியையும் நள்ளிரவில் மாரப்ப பூபதி தொடர்ந்து போன காரணம் என்ன? இதை அறிந்து கொள்வதற்கு நாம் மறுபடியும் அன்று சாயங்கால நிகழ்ச்சிகளுக்குப் போக வேண்டும்.

சக்கரவர்த்தியின் சந்நிதியிலிருந்து வெளியேறிய போது மாரப்பன் அளவிலாத மனச் சோர்வு கொண்டிருந்தான். சாம்ராஜ்யத்துக்காகத் தான் செய்த சேவையெல்லாம் இவ்விதம் பிரதிபலன் இல்லாமற் போகும் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை. பார்த்



பாஸ்போர்ட்

நமது நாட்டைச் சேர்ந்த அந்தமானுக்கு விமானத்தில் போக வேண்டுமானால் பாஸ்போர்ட் எடுக்க வேண்டும், காரணம் நமது விமானங்கள் பர்மா தலைநகர் ரங்கூன் வழியாகத்தான் அந்தமான் போகின்றன. கப்பலில் போக பாஸ்போர்ட் வேண்டாம்.

- பாபு — இந்தியன் எக்ஸ்பிரஸ்

திபன் போர்க்களத்தில் மாண்டு ஏறக்குறைய ஏழு வருஷமாயிற்று. அந்தப் போரில் தான் கலந்து கொள்ள மறுத்ததற்காகவே உறையூர்ச் சிம்மாசனம் தனக்குக் கிடைக்கும் என்று மாரப்பன் எதிர்பார்த்தான். அந்த ஆசை நிறைவேறவேயில்லை. அதனால் அதிருப்தியோ வெறுப்போ கொண்டதாக அவன் காட்டிக் கொள்ளவில்லை. பல்லவ சாம்ராஜ்யத்தில் அவனுடைய பக்தி குன்றியதாகவும் தெரியப்படுத்தவில்லை. தன்னுடைய உண்மையான சாம்ராஜ்ய சேவைக்கு ஒரு நாள் நிச்சயம் பலன் கிட்டும் என்ற நம்பிக்கையுடன் அவன் வருஷக்கணக்காகக் காத்திருந்தான். கடைசியாக, விக்கிரமனுடைய சதியாலோசனையைப் பற்றி அவனுக்குச் செய்தி தெரிந்தபோது, தளபதி அச்சுதவர்மரிடம் உடனே சென்று தெரியப்படுத்தினான். அதன் பலனாக, அச்சதியாலோசனையை முளையிலேயே கிள்ளி எறிவது சாத்தியமாயிற்று. இதன் பிறகாவது, தன்னுடைய சேவைக்குத் தகுந்த சன்மானம் கிடைக்கும் என்று அவன் நிச்சயமாக நம்பியிருந்தான். அவன் ஆசைப்பட்டது, பல்லவ சக்கரவர்த்திக்குக் கப்பம் செலுத்திக் கொண்டு உறையூரை ஆளும் பதவிதான். இது உடனே கிடைக்காவிட்டாலும், தான் முன்னர் வகித்து வந்த சேனாதிபதி பதவியாவது கிடைக்கும் என்று நினைத்தான். ஆனால், நடந்தது என்ன? சக்கரவர்த்தி தன் பேரிலேயே சந்தேகம் கொள்ளலாயிற்று. கேவலம் ஓர் ஓடக்காரன் — அவன் பெண்டாட்டி இவர்கள் முன்னிலையில் சோழ நாட்டுப் பட்டத்துக்கு உரியவனான தான் அவமானப்பட நேர்ந்தது.

இதை நினைத்தபோது, மாரப்பனுடைய நெஞ்சு வெடித்துவிடும்போல் இருந்தது. ''இது என்ன உலகம்? இது என்ன வாழ்வு?'' என்று உலகத்தையே வெறுக்கும் வழியில் மனம் திரும்பிற்று. எங்கே போகிறோம் என்ற சிந்தனையே இல்லாதவனாய்க் குதிரை போன வழியே போக விட்டுக்கொண்டிருந்தான். அறிவுமிக்க பிராணியான குதிரை தன் எஜமானனுடைய மனநிலையை உணர்ந்து மந்த நடையுடன் யதேச்சையாகப் போய்க் கொண்டிருந்தது. உறையூரின் வீதிகளில் அங்குமிங்குமாக அது சிறிது நேரம் சுற்றி விட்டுக் கடைசியில் காவேரிக் கரையை அடைந்தது. பிறகு காவேரிக் கரைச் சாலையோடு கிழக்குத் திக்கை நோக்கிச் செல்லலாயிற்று.

சூரியன் அஸ்தமித்தது. அன்று சுக்கிலபட்சத்துச் சதுர்த்தி ஆதலால் மேற்குத் திசையில் நாலாம் பிறை தோன்றிற்று. வானத்தில் நட்சத்திரங்கள் ஒவ்வொன்றாய்த் தோன்றி மினுக்கத் தொடங்கின. சற்று நேரத்துக்கெல்லாம் வானவெளி முழுவதிலும் கோடிக்கணக்கான வைரங்களை வாரி இறைத்தது போல் நட்சத்திரங்கள் பொறிந்து கிடந்தன. மாரப்பன் இந்த வான விசித்திரம் ஒன்றையும் கவனியாமல் ஏதேதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். அரைக் காத வழி இவ்விதம் போன பிறகு அவன் திடுக்கிட்டுச் சுய நினைவு வந்தவனாய் எங்கே போகிறோம் என்று ஆராய்ந்தான். இதற்குள் நாலாம் பிறைச் சந்திரன் மேற்கு வானத்தின் அடிப் பாகத்துக்கு வந்துவிட்டது. குதிரையைத் திருப்பி உறையூர்ப் பக்கம் செலுத்தினான்.

உறையூர்க் கோட்டை வாசலைத் தாண்டி உள்ளே சிறிது தூரம் அவன் சென்றபோது, எதிரே அநேக தீவர்த்திகளுடனும், சங்கம் முதலிய வாத்திய முழக்கங்களுடனும் ஒரு கூட்டம் வருவதைக் கண்டான். கூட்டத்தின் மத்தியில் சிங்கக் கொடி பறந்ததைப் பார்த்தபோது, ஒரு வேளை சக்கரவர்த்திதான் தம் பரிவாரங்களுடன் ஸ்ரீ ரங்கநாதர் ஆலயத்துக்குப் போகிறாரோ என்று நினைத்துச் சட்டென்று குதிரையிலிருந்து இறங்கிச் சாலை ஓரமாக அடக்க ஒடுக்கத்துடன் நின்றான். கூட்டம் அருகில் வந்தபோது, அதில் சக்கரவர்த்தி இல்லை என்பது தெரிந்தது. தளபதி அச்சுதவர்மரும், அவருக்குப் பக்கத்தில் தலை மொட்டை அடித்த ஒரு சாமியாரும் வந்துகொண்டிருந்தார்கள். அந்தச் சாமியார் திடகாத்திர தேகம் உடையவராயும், முகத்தில் நல்ல தேஜஸ் உடையவராயும் இருந்தார். மாரப்பனுடைய மனத்தில் மின்னலைப் போல் ஓர் எண்ணம் உதித்தது. ''ஒரு வேளை இவர்தான் அந்த ஜடாமகுடதாரியான கபட சந்நியாசியோ?'' என்று நினைத்தான். அதே சமயத்தில் தளபதி அச்சுதவர்மரின் பார்வை மாரப்ப பூபதியின் மீது விழுந்தது. அவர் பூபதியைச் சமிக்ஞையினால் அரு


தேர்ந்தெடுங்கள் இதோ, புதுமையாக மலரும்
கோலாகல டிசைன்களின் வரிசை.
கட்டாவ்
டெரிகோஸா சேலைகள்
'டெரீன்'

கில் அழைத்து, பக்கத்திலிருந்த சிறுத் தொண்டரை நோக்கி, ''அடிகளே! இவர் யார் தெரிகிறதா? பார்த்திப மகாராஜாவின் சகோதரன் மாரப்ப பூபதி'' என்றார்.

சிறுத் தொண்டர் மாரப்பனை ஏற இறங்கப் பார்த்தவண்ணம், ''அப்படியா? வெகு காலத்துக்கு முன்னால், மகேந்திர சக்கரவர்த்தியின் காலத்தில் இவனைப் பார்த்திருக்கிறேன். இப்போது அடையாளம் தெரியவில்லை'' என்றார்.

''விக்கிரமனுடைய சதியாலோசனையைக் கண்டுபிடித்துச் சொன்னது பூபதிதான். ஆனாலும் சக்கரவர்த்திக்கு ஏனோ இவன் பேரில் தயவு பிறக்கவில்லை!'' என்றார் அச்சுதவர்மர்.

சிறுத்தொண்டர் இதற்கு ஒன்றும் சொல்லாமல் மறுபடியும் ஒரு தடவை மாரப்பனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு மேலே போகத் தொடங்கினார்.

அவர்கள் இருவரும் அப்பால் சென்றதும், சேடிகள் சூழ்ந்த பல்லக்கு பின்னால் வருவதைப் பார்த்து, சக்கரவர்த்தியின் திருமகளாயிருக்கலாம் என்று மாரப்பன் ஊகித்துக் கொண்டு அவசரமாய் விலகிச் செல்லத் தொடங்கினான். ஆனால் என்ன ஆச்சரியம்? அதே இடத்தில் பல்லக்கு நின்றது. ''பூபதி!'' என்று மதுரமான பெண் குரலில் அழைப்பது கேட்டது. மாரப்பன் திரும்பிப் பார்த்தபோது, பல்லக்கில் பூரண சந்திரனை ஒத்த முக காந்தியுடைய குந்தவி தேவியும், அவளருகே சிவபக்தியே உருவம் கொண்டது போன்ற மூதாட்டி ஒருவரும் இருக்கக் கண்டான். குந்தவி தேவிதான் தன்னை அழைக்கிறாள் என்று அறிந்ததும், மாரப்பனுடைய உள்ளத்தில் வியப்பும் மகிழ்ச்சியும் சேர்ந்தாற்போல் பொங்கின. ஒரு பக்கம் சங்கோசம் பிடுங்கித் தின்றது. பல்லக்கின் அருகில் சென்று, குந்தவியைப் பார்க்க விரும்பினானாயினும் கூச்சத்தினால் நிமிர்ந்து பார்க்க முடியாதவனாய்த் தரையைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

''பூபதி! இன்று என் தந்தை உன்னிடம் ரொம்பக் கடுமையாக இருந்துவிட்டார். அதற்காக நீ வருத்தப்பட வேண்டாம். உன் பேச்சில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. எப்படியாவது அந்தப் போலி வேஷதாரிச் சிவனடியாரை மட்டும் நீ கண்டுபிடித்துவிடு. அப்புறம் உன்னுடைய கட்சியில் நான் இருப்பேன்!'' என்று குந்தவி தேவி அனுதாபம் நிறைந்த குரலில் கூறிய போது, மாரப்பனுக்கு ஏற்பட்ட மனக் கிளர்ச்சியை வர்ணிக்கத் தரமன்று. அதல பாதாளத்திலிருந்து ஒரே அடியாகச் சொர்க்கத்துக்கு வந்துவிட்டதாகவே அவனுக்குத் தோன்றியது. சிறிது தலை நிமிர்ந்து, ''அம்மணி! தங்களுடைய சித்தம் என்னுடைய பாக்கியம். அந்தப் போலிச் சிவனடியாரைக் கண்டு பிடிக்காமல் இனி மேல் நான் ஊணுறக்கம் கொள்ளமாட்டேன்'' என்றான்.

''சந்தோஷம்; கண்டு பிடித்ததும் எனக்கு உடனே தெரியப்படுத்து'' என்று சொல்லிவிட்டு, குந்தவி தேவி பல்லக்கை மேலே செல்லும்படி கட்டளை இட்டாள்.

■ ■ ■

பல்லக்கும் பரிவாரங்களும் போன பிறகு, மாரப்பன் சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்றான். தான் இப்போது கண்டதும் கேட்டதும் கனவல்ல என்று நிச்சயம் செய்து கொண்டபின், பக்கத்தில் வந்து நின்ற புரவியின் மீது மறுபடியும் ஏறிக் கொண்டான். அச்சுதவர்மருடன் சென்ற மொட்டைச் சாமியார் நினைவு வந்தது. வாதாபிப் போரில் வென்ற தளபதி பரஞ்சோதியைப் பற்றியும் மாரப்பன் கேள்விப்பட்டதுண்டு. அந்நாளில் அவர் பார்த்திப மகாராஜாவுக்கு மிகவும் வேண்டியவர் என்றும் கேட்டிருந்தான். எனவே, அவர்தான் அவ்வப்போது ஜடா மகுட வேஷம் பூண்ட சிவனடியாராய்த் தோன்றி நடித்து வந்தாரோ, என்னவோ? ஏன் இருக்கக் கூடாது? — இதன் உண்மையை எப்படியாவது கண்டு

மர்மச் சிறுகதைப் போட்டி

பிரசுரத்துக்கு ஏற்ற கதைகள்:

முதல் வழக்கு
— வெ. துரைக்கிருட்டிணன்

நாழிகைக் கணக்கு
— ஸ்ரீமதி பிரகதா சங்கரன்

பழி வாங்கும் பாவை
— வி. ரகுநாதன்

புள்ளியில் பிறந்த வட்டம்
— மங்கை சோமசுந்தரம்

செய்யாத குற்றம்
— ஆர். ஆதித்யன்

எண்ணும் எழுத்தும்
— த. முரளி



1940. பம்பாயில் ஒரு பொதுக் கூட்டத்தில் நேருஜி கொட்டும் மழையில் சொற்பொழிவாற்றினார். நேருஜி மழையில் நனைவதைப் பார்த்த ஒருவர் சட்டென்று ஒரு குடையை விரித்து நேருஜியின் தலைக்கு மேல் தூக்கிப் பிடித்தார். நேருஜிக்கு அளவில்லாத கோபம் வந்துவிட்டது. ''ஆயிரக் கணக்கான மக்கள் மழையில் நனையும் போது எனக்கு மட்டும் குடை எதற்கு'' என்று காட்டமாகக் கூச்சலிட்டார். சற்றைக்கெல்லாம் கோபம் தணிந்து குடையை வாங்கிக்கொண்டார். ''குடை எனக்காக அல்ல; இந்த மைக்கைப் பாதுகாக்கத்தான்'' என்று சிரித்தபடியே கூறினார் நேருஜி! எப்படிக் கோபமும் சாந்தமும்! -கோ.தீபா

பிடித்தாக வேண்டும். ஆனால், எப்படி? பொன்னனையும் வள்ளியையும் சிநேகம் செய்து கொண்டு அவர்கள் மூலமாகத்தான் இதை நிறைவேற்ற வேண்டும். உடனே மாரப்ப பூபதிக்கு ஒரு விஷயம் ஞாபகம் வந்தது. தான் அன்று தோணித் துறைக்குப் போகும் காவேரிக் கரைச் சாலையில் வெகுதூரம் போய் விட்டுத் திரும்பியிருந்தும், போகும் போதோ, வரும்போதோ பொன்னனையும் வள்ளியையும் சந்திக்க வில்லை. ஆகவே, அவர்கள் இன்றிரவு உறையூரில்தான் இருப்பார்கள். எங்கே தங்கியிருப்பார்கள்? வள்ளியின் பாட்டன் வீட்டில் ஒரு வேளை இருக்கலாம் அல்லவா ?.....

உடனே மாரப்பன் விரைவாகக் குதிரையை விட்டுக் கொண்டு சென்று தன் மாளிகையை அடைந்தான். வாசலில் நின்ற ஏவலாளர்களிடம் குதிரையைக் கொடுத்து விட்டு அங்கிருந்து கால் நடையாகக் கிளம்பினான். இரவு சாப்பாட்டைப் பற்றிய நினைவே அவனுக்கு இல்லை. பசி தாகமெல்லாம் மறந்து போய்விட்டது. பொன்னனையும் வள்ளியையும் இன்றிரவு சந்திக்க வேண்டும் என்னும் ஆவலினால் உறையூர்க் கம்மாளத் தெருவை நோக்கி நடக்கலானான்.


அப்போது அஸ்தமித்து ஒரு ஜாமத்துக்கு மேல் இருக்கும். உறையூரில் ஜனங்களின் நடமாட்டம் பெரிதும் குறைந்திருந்தது. சந்தடி அநேகமாக அடங்கி விட்டது. ஆலயங்களுக்குப் போய்விட்டுத் திரும்புவோர், தெருக் கூத்துப் பார்க்கச் செல்வோர், இராப் பிச்சைக்காரர் ஆகியவர்கள் அங்கொருவர் இங்கொருவராகக் காணப்பட்டார்கள். எங்கேயோ வெகுதூரத்தில், ''அகோ வாரும் பிள்ளாய்! அரிச்சந்திர மகாராஜனே !'' என்று விசுவாமித்திர முனிவர் அலறிக் கொண்டிருந்தார் !

மாரப்பன் வீதிகளின் ஓரமாகத் தன்னை யாரும் கவனிக்காதபடி விரைந்து நடந்து போய்க் கொண்டிருந்தான். அவன் கம்மாளத் தெருவை நெருங்கிய போது, திடீரென்று பேய் பிசாசைக் கண்டவன் போல் ஒரு கணம் திகைத்து நின்று விட்டான். ஏனென்றால் கம்மாளத் தெரு திரும்பும் முனையில் அப்போதுதான் அணைந்து கொண்டிருந்த அகல் விளக்கின் வெளிச்சத்தில் அவன் ஓர் உருவத்தைக் கண்டான். அது, அவனுடைய உள்ளத்தில் நிலைபெற்றிருந்த சிவனடியாரின் உருவம்தான். அந்த உருவத்தை அவன் பார்த்த அதே சமயத்தில் விளக்கு அணைந்து போய் விட்டது. திகைத்து நின்ற மாரப்ப பூபதி மறு கணம் அந்த உருவம் நின்ற இடத்தை நோக்கி விரைந்து ஓடினான். ஆகா ! அந்தப் பொல்லாத வஞ்சக வேஷதாரியை அன்றிரவு கையும் மெய்யுமாய்ப் பிடித்துக் கொண்டு போய்ச் சக்கரவர்த்தித் திருமகளின் முன்னால் நிறுத்தினால் எவ்வளவு நன்றாய் இருக்கும்? அந்த ஆவலுடனே அவன் ஓடினான். ஆனால், விளக்குத் தூணின் அருகில் சென்று பார்த்த போது அங்கு ஒருவரையும் காணவில்லை. அந்த இடத்திலிருந்து நான்கு திசைகளிலும் நான்கு வீதிகள் போய்க் கொண்டிருந்தன. அவற்றுள் எந்த வீதி வழியாகச் சிவனடியார் போயிருக்கக்கூடும் என்று தீர்மானிக்க முடியவில்லை.

மாரப்ப பூபதியின் உள்ளத்தில் சட்டென்று ஒரு யோசனை உதித்தது. ஆம்; தான் பார்த்த உருவம் அந்தச் சிவனடியாராயிருக்கும் பட்சத்தில், அவர் பொன்னனையும் வள்ளியையும் பார்ப்பதற்குத்தான் அங்கு வந்திருக்க வேண்டும். வீரபத்திர ஆச்சாரியின் வீட்டுக்குத்தான் போயிருப்பார். இன்னும் என்ன சதியாலோசனைக்காக அவர்கள் கூடுகிறார்களோ, என்னவோ தெரியவில்லை. நரசிம்மச் சக்கரவர்த்தி உறையூருக்கு வந்திருக்கும் சமயத்தில் இந்தச் சதியாலோசனை நடக்கிறது! ஆகா! குற்றம் செய்வதில் ஈடுபட்டிருக்கும் போதே மூன்று பேரையும் கையும் மெய்யுமாய்ப் பிடித்துவிட முடியுமானால்? — சக்கரவர்த்திக்குத் தன்பேரில் அகாரணமாய் ஏற்பட்டிருக்கும் சந்தே


பாரதப் பெருமை பேசும்
சுகபோக சோப்புகள்
மைசூர்
ஸாண்டல்
GOVT. SOAP FACTORY
BANGALORE
கவர்மெண்ட் சோப் ஃபாக்டரி, பெங்களூர் அளிக்கும் தரமிக்க தயாரிப்பு
விற்பனை செய்பவர்கள்: மைசூர் சேல்ஸ் இண்டர்நேஷனல் லிட்., பெங்களூர்

MCA-SS-60 Tam



ஜெமினி டீ

தேயிலைச் சுவையிலே ராஜ திலகம்



இதோ, செழுமைத் தேயிலை ஜெமினி.
நாவிலே நறுமண 'தர்பார்'—
கெட்டித் தேநீர் தந்திடும் ராசி—எனவே
கோப்பைகள் அதிகம் அளித்திடும்.
கொண்டாடத் தக்க சிக்கனம் இது.
ஜமாய்த்துப் பருகுவீர் இனி—

ஜெமினி டீ

டாடா-ஃபின்லே படைப்பு

dCA/TFGT/2e Tam.

சுத்தை நிவர்த்தி செய்து விடலாம் அல்லவா? பிறகு...

இப்படிச் சிந்தித்துக் கொண்டே மாரப்பன் வீரபத்திர ஆச்சாரியின் வீட்டை நெருங்கியபோது, இன்னோர் அதிசயம் அங்கே அவனுக்குக் காத்திருந்தது. அந்த வீட்டின் கதவைத் திறந்து கொண்டு இருவர் வெளிவந்தார்கள். மாரப்பன் ஒரு வீட்டுத் திண்ணை ஓரத்தில் தூண் மறைவில் நின்றபடி உற்றுக் கவனித்தான். வெளியே வந்தவர்கள் பொன்னனும் வள்ளியும்தான். வள்ளி கூடையில் வைத்திருந்த விளக்கைச் சேலைத் தலைப்பினால் மறைத்து எடுத்துக் கொண்டு வந்ததும் தெரிந்தது. அவர்கள் இருவரும் வீரபத்திர ஆச்சாரி வீட்டுக்குப் பக்கத்திலிருந்த சந்தின் வழியாக வடக்கு நோக்கிச் சென்றார்கள்.

"இதில் ஏதோ மர்மம் இருக்கிறது; இவர்கள் இன்று ஏதோ பெரிய சதித் தொழில் செய்யப் போகிறார்கள். இதில் அந்தச் சிவனடியாரும் சேர்ந்திருக்கிறார். அவர் முன்னால் போயிருக்கும் இடத்துக்கு இவர்கள் பின்தொடர்ந்து போகிறார்கள்" என்று மாரப்பன் தீர்மானித்துக் கொண்டான். சொல்ல முடியாத பரபரப்பும் உற்சாகமும் அவனை ஒரு புது மனிதனாகச் செய்து விட்டன. பொன்னனும் வள்ளியும் போன வழியே, அவர்கள் கண்ணுக்கு மறையாத தூரத்தில் மாரப்பன் சிறிதும் ஓசை கேட்காதபடி நடந்து போனான்.

அந்தச் சந்து வழியே பொன்னனும் வள்ளியும் சென்று காவேரிக் கரையை அடைந்தார்கள். அங்கே ஒரு மரத்தின் வேரில் கட்டிப் போட்டிருந்த படகில் வள்ளி ஏறி உட்கார்ந்து கொண்டாள். கூடையைப் படகின் அடியில் வைத்துப் பத்திரமாய் மூடிக் கொண்டாள். சென்ற அத்தியாயத்தில் நாம் பார்த்தபடியே பொன்னன் படகை இழுத்துக்கொண்டு போய், அரண்மனைத் தோட்டத்தின் மதிலை அடைந்ததும் படகை அங்கேயே கட்டிப் போட்டு விட்டு, வள்ளியையும் அழைத்துக் கொண்டு தோட்டத்துக்குள்ளே பிரவேசித்தான்.

அந்தத் தோட்டம் பார்த்திப மகாராஜா வாழ்ந்த பழைய சோழ வம்சத்து அரண்மனைத் தோட்டம் என்பதை மாரப்பன் அறிந்திருந்தான். அந்த அரண்மனையில் அச்சமயம் யாருமில்லை. —அது சக்கரவர்த்தியின் கட்டளையினால் பூட்டிக் கிடந்தது — என்பதும் அவனுக்குத் தெரிந்ததுதான். ஆகவே, பொன்னனும் வள்ளியும் அந்த அரண்மனைக்குள் கொல்லைப்புரத்தின் வழியாக நுழைவது ஏதோ ஒரு கெட்ட காரியத்துக்காகத்தான் என்றும், அநேகமாக அந்த அரண்மனைக்குள் அச்சமயம் சிவனடியார் இருக்கலாமென்றும் மாரப்ப பூபதி ஊகித்தான். இன்னும் ஒரு பயங்கரமான — விபரீதமான சந்தேகம் அச்சமயத்தில் அவனுடைய உள்ளத்தில் உதித்தது. பார்த்திப மகாராஜா போர்க்களத்தில் இறந்த செய்தியே ஒரு சமயம் பொய்யாயிருக்குமோ? அவர்தான் போர்க்களத்திலிருந்து தப்பி ஓடி, பிறகு இப்படிச் சிவனடியாரின் வேஷத்தில் வந்து விபரீதமான காரியங்களையெல்லாம் செய்து வருகிறாரோ? — என்று நினைத்தான். எப்படி இருந்தாலும் இன்று இரவு எல்லா மர்மங்களும் வெளியாகிவிடப் போகின்றன! இந்த நம்பிக்கையுடன் அவன் மதிற் கதவின் வெளிப்புற நாதாங்கியைப் போட்டுவிட்டு, பொன்னன் திரும்பி வருவதற்குள் தன்னுடைய ஆட்களை உதவிக்கு அழைத்துக்கொண்டு அங்கே வந்து விடுவது என்ற தீர்மானத்துடன் விரைந்து சென்றான். (தொடரும்)

மகளிர் பகுதி

மாலா: வர வர இந்த ஆண்களைக் கண்டாலே எரிச்சலாக இருக்குது.

ஷீலா: ஏண்டி, என்ன காரணம்?

மாலா: பின் என்ன, கொஞ்சம்கூடக் கூச்சம் இல்லாமல் நம்மைப் போலவே பேண்ட், பெல்ஸ், ஜீன்ஸ், சர்ட் எல்லாம் போட்டுக்கிறேங்க.

- எஸ். சம்பத் குமாரி





இப்படியும் செய்யலாம்!

பிளாஸ்டிக் ஒயரில் கூடைகள் போட்டு முடித்த பின் வெட்டி எறியும் சிறு சிறு துண்டு ஒயர்கள் இருக்கும் அல்லவா? இனி இத்துண்டுகளை எறிந்துவிடாமல் சேகரித்து, அவற்றையும் பயன்படுத்தலாம். இத்துண்டுகளை முதலில் நீளப்போக்கில் நான்கு அல்லது ஐந்து துண்டுகளாக வெட்டிக்கொள்ளுங்கள். பிறகு ஒவ்வொரு துண்டையும் சிறு சிறு துண்டுகளாகக் கூடியவரையில் சின்னஞ் சிறு சதுரங்களாக விழும் படி வெட்டி வைத்துக்கொள்ளுங்கள்.

இப்பொழுது உங்களுக்கு விருப்பமான உருவத்தை அட்டையில் ஒட்டிய கறுப்புத் துணியில் வரைந்து கொள்ளுங்கள். இவ்வுருவத்தின் மேல் கோந்தைத் தடவிவிடுங்கள். வெட்டிவைத்த துண்டுகளை உருவத்துக்கு ஏற்ற வண்ணத்தில் அதன்மேல் பொறுமையுடன் சீராக விழும்படி தூவுங்கள். இதை அப்படியே இரண்டு நாட்களுக்குப் படுத்த வசத்தில் வைத்துக் காயவிடவேண்டும். நன்கு 'செட்' ஆன பிறகு நிமிர்த்திஞல் பசையில் ஒட்டாத துகள்கள் கீழே விழுந்துவிடும். அவற்றை நீக்கிவிட்டுக் கண்ணாடி போட்டு உங்கள் கலைப் படைப்புக்களில் ஒன்றாக்கிக் கொள்ளலாம்.

- குமாரி ஜி. நாகராஜம்

குளிர்காலத்தில் சமையலுக்குக் கல்லுரலில் தேங்காயை அரைக்கும்போது குளிர்ந்த ஜலத்துக்குப் பதில் வெந்நீர் ஊற்றிக் கொள்ளவும். அப்படிச் செய்தால் தேங்காய் உரலில் ஒட்டிக் கொள்ளாது. உரலில் எண்ணெய் பிசுக்கும் ஆகாது. -''ஸரோ''

தூசி, தும்பு படர்ந்திருக்கும் நான்பட்டவெல்லத்தை தூர எறிந்து விட வேண்டாம். அந்த வெல்லத்தில் பாகு தயாரிக்கும் போது கொஞ்சம் பாலையும் அதில் விடுங்கள். பால் அதிலுள்ள அழுக்கை யெல்லாம் திரட்டித் தனியாக மேலே கொண்டு வந்து விடும். அதை எடுத்தெறிந்து விடலாம்!

-சரோஜா ராமச்சந்திரன்



அலையின் ஆசை

வசந்தாராமன்


டண்! டண்! ஆலய மணியின் ஓசை எங்கும் பரவி ஒலிக்கிறது.


பொங்குகின்ற சமுத்திரத்தின் கரையில் ஓங்கி உயர்ந்த மலை உச்சியில் அமைந்திருந்த அந்த முருகன் கோவில் அந்தப் பிராந்திய மக்களின் கண்கண்ட தெய்வம். தினமும் மலை ஏறும் மக்களின் கூட்டமோ சொல்லில் அடங்காது. சமுத்திரத்தின் அலைகள் நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு மலைமீது வீற்றிருக்கும் முருகனைத் தரிசிக்கத் துடிப்போடு உயர்ந்து உயர்ந்து எழும்பி எழும்பி அடங்கின.

மிகப் பெரிய அலை ஒன்று தன் சக்தியை எல்லாம் ஒன்று திரட்டி மேலெழுந்து கீழிறங்கியது. அப்போது அதனருகில் வந்த குட்டி அலை ஒன்று, ''அம்மா, நானும் உன்னோடு முருக சாமியைப் பார்க்க வரேம்மா. என்னையும் எடுத்துக் கொண்டு போம்மா'' என்று கெஞ்சியவாறே கேட்டது.

''ஐயோ! போதுமே! எவ்வளவு வருஷமா நானும் முயற்சி பண்றேன். என்னாலேயே முடியலையே. உன்னையும் கூட்டிக்கொண்டால் இந்த அளவு உயரம் கூட என்னாலே எழும்ப முடியாது. நீயும் என்னைப்போல் பெரியவனாக வளர்ந்த பிறகு முருகனைப் பார்க்க முயற்சி செய்வாயாம். இப்ப என்னைத் தொந்தரவு செய்யாமல் கரையோரமாகப் போய் விளையாடு!'' சிடுசிடுத்துவிட்டு அகன்றது தாய் அலை. சேய் அலை தன் அதிர்ஷ்டமின்மையை நொந்தபடியே கரையோரமாய்ச் சென்று கவலைகொண்டதாய், அமைதியாய்த் தவழ்ந்து கொண்டிருந்தது. அப்போது கரையோரமாக வந்த வயதான தம்பதிகளின் பேச்சு அதனைக் கவர்ந்ததால் அருகில் நகர்ந்து சென்று கூர்ந்து கேட்டது. மகிழ்ச்சியால் உள்ளம் துள்ளப் பரபரப்புடன் தன் தாயைத் தேடி ஓடியது.

''அம்மா! அம்மா! என்னுடன் வந்து மனிதர்கள் பேசுவதைக் கேட்டாயானல் உன்னைவிட நான் உயர்ந்தவனாகி விட்டதை உணர்ந்து கொள்வாய். ஆரவாரமில்லாமல் அமைதியாக வா'' என்று கூறித் தாய் அலையை அழைத்துச் சென்றது சேய் அலை.






முதலில்: 21 புள்ளி வரை நேராக வைக்க வேண்டும். பின் மேலும் கீழும் ஒரொரு புள்ளிவிட்டு அகலவாக்கில் 1 புள்ளி வரும் வரை இரு பக்கமும் வைத்துக் கொள்ள வேண்டும். முதலில் நான்கு புறமும் படத்தில் காட்டியுள்ளது போல் யானைகளைப் போட்டுவிட வேண்டும். பின் நடுவில் நான்கு தாமரைப் பூக்களையும் போட்டுப் பூக்களுக்கு ரோஸ் நிறமும், யானைகளுக்குக் கறுப்பு நிறமும் போட்டு நிரப்பினால் பார்ப்பதற்குக் கோலம் அழகாக இருக்கும். மார்கழி மாதத்தில் ஒரு நாளைக்குத் தெருவை இக் கோலத்தால் அலங்கரித்துப் பாருங்களேன். — ருக்மிணி மனோகரன்

போஸ்டாபீஸில் ஒரு பெண்மணி ஒரு பாரத்தைப் பூர்த்தி செய்து கொண்டிருந்தாள். 'வயது' என்று குறிப்பிட்டிருந்த இடத்தில் 'என்ன எழுதுவது' என்று அவள் யோசித்துக் கொண்டிருந்தாள். அப்போது அங்கிருந்த கிளார்க் கூறினார்: ''அம்மணி! சீக்கிரம் எழுதுங்கள். தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும் உங்கள் வயது அதிகமாகிறது!''

-அனிதா ராமச்சந்திரன்



''மறுபடியும் என் முயற்சியைக் கெடுக்க வந்து விட்டாயா! வந்து தொலைக்கிறேன், வா'' என்று கடுகடுத்தபடி வந்த தாய், சேயுடன் அமைதி நிறைந்ததாகக் கரையோரம் நின்றது.

''என்ன! அந்தப் பக்கம் போகாதீங்கோ. பயங்கரமா அலை அடிக்கிறது.''

''ஏண்டி மங்களம் பயப்படறே? இப்படி என் கையைப் பிடிச்சுண்டு வா'' அழைக்கிறார் முதியவர்.

''ஹூஹும். நாம் மாட்டேன். இந்தச் சின்ன அலைகிட்ட நின்னுத்தான் நல்லாக் காலை வருடிண்டு தண்ணி போறது சுகமா இருக்கு. வாங்கோ சீக்கிரம். இன்னிக்கு நம் வகையாகச் செய்யற அபிஷேகத்துக்கு இந்தச் சின்ன அலைக்கு நேரே குடத்தைக் காட்டி நானே இங்கிருந்து நீர் எடுத்திண்டு போகப் போறேன்.''

பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டிருந்த சின்ன அலை தன் தாயைப் பெருமிதத்துடனும் மகிழ்வுடனும் நோக்கிவிட்டு அசைந்து அசைந்து அழகாகக் குடத்தினுள் நிறைந்தது.

'அமைதி, அன்பு, ஆரவாரமற்ற அடக்கம் இவைகளைக் கொண்டு வாழ்ந்தால் நீயும் விரைவில் முருகனைத் தரிசிப்பாய்' என்று சிறிய அலையின் பார்வை தனக்கு உணர்த்திவிட்டுச் சென்றதைப் போல உணர்ந்த பெரிய அலை, ஹூம் என்று பெருமூச்சு ஒன்றினை உதிர்த்தபடி, பழக்க தோஷம் காரணமாகச் சீறிப் பாய்ந்து பாலமுருகனைக் காண எழும்பி எழும்பிச் சென்றது.



குருநானக் வரலாறு

வாழும் வழியைக் காட்டுபவையே இப் பரந்த உலகில் தோன்றியுள்ள மதங்கள் அனைத்தும். அவற்றுக்குள் மாற்சரியங்கள் ஏற்பட நேரவில்லை. மனித சமுதாயம் அறநெறியில் நின்று வாழ்வாங்கு வாழ்ந்து கடைத்தேற வேண்டும் என்பதே குறிக்கோள்.

இந்தக் குறிக்கோளைப் பாமரர்களுக்குப் புரியவைக்க எத்தனையோ மகான்கள் தோன்றியுள்ளனர். விரிந்த உலகில், வலியவர்களாகிச் சிலர் தலையெடுக்கும்பொழுது, அறவழி தவறுவதும், ஆட்சிமுறை காரணமாக மக்கள் உள்ளம் கொந்தளிப்பதும், அப்பொழுது சில மகான்கள் தோன்றி நல்வழி காட்டுவதும் கண்கூடு.

இஸ்லாமியர்களின் ஆட்சி நீடித்தபோது தோன்றியவர் குருநானக். தமது நல்லுரைகளால் மக்களைச் சிறப்பாக வாழ உற்சாகப்படுத்த அவர் கையாண்ட முறை இரண்டு.

பாமர மக்களின் உள்ளத்தை ஈர்த்துத் தெய்வத்துக்கு அஞ்சி நடக்க அற்புத வழியைக் கையாண்டார். அறிஞர்களை வசப்படுத்தி அவர்களைத் தெய்வ நெறியில் திளைக்கச் செய்ய அறிவு நெறியைப் பரப்பினார்.

ஸ்ரீ அ. லெ. நடராஜன் அவர்கள் குருநானக்கின் வாழ்வையும் வாக்கையும் இணைத்து அற்புதமாகக் கதை போல் இந்நூலை எழுதி வெற்றி கண்டிருக்கிறார். அது மட்டும் அல்ல; நானக்கின் வழி வந்த அங்கதர் முதல் குரு கோவிந்த் சிங் வரையுள்ள ஒன்பது குருமார்களையும் சுருக்கமாக அறிமுகப்படுத்தி வைக்கிறார். பத்தாவது குருவாகவும் சீக்கிய மத வேதமாகவும் திகழும் 'குரு கிரந்த சாஹிப்'பைப் பற்றியும் கூறுகிறார்.

எல்லாப் பாதைகளும் ரோமுக்குச் செல்கின்றன என்பது போல, எந்த மதமும் அருவமான பரம்பொருளையே காண முயல்கிறது என்பதைத் தெளிந்த நீரோடையில் விழும் நிழலாக இந்நூலில் காணலாம். -ரா.வீ.

வெளியீட்டோர்: பாரி நிலையம், பிராட்வே, சென்னை-1. விலை ரூ. 12.00.

உறவுகள்

இந்த நவீனத்தைப் படிப்பதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. செக்கு மாடு எவ்வளவு நேரம் நடந்தாலும், ஏதாகிலும் ஒரு தூரத்தைக் கடந்தது என்று சொல்ல முடியுமா? அம்மாதிரிதான் உறவுகள்! ஆரம்பத்தில் எந்த கட்டத்தில் இருக்கிறோமோ, அதே கட்டத்தில்தான் அறுபத்தியொரு அத்தியாயங்கள்—440 பக்கங்கள் -- படிக்க மாட்டாமல் படித்த பின்பும்—இருக்கிறோம். ஒரு வித்தியாசம். ஆரம்பத்தில் நோயாளியாக ஆஸ்பத்திரியில் பார்க்கிறோம். முடிவில் நோயாளி ஆஸ்பத்திரியில் உயிரை விட்டுவிட்டுச் சவமாக வீட்டுக்குத் திரும்புகிறார்.

இந்த நோயாளியின் புதல்வர்கள், நெருங்கிய உறவினர்கள், தூரத்து உறவினர்கள், அறிமுகமானவர்கள் ஆகியவர்களைப் பற்றி ஒவ்வோர் அத்தியாயமும் கூறுகிறது. அப்படி வரும் உறவினர்கள், எல்லாருமே பாரதி சொன்ன 'வேடிக்கை மனிதர்களாக' இருக்கிறார்கள். ஆகவே, கதை முழுதும் சப்புச் சளசளவென்றிருக்கிறது. என்றாலும் ஆசிரியர் நீலா பத்மநாபனின் பாத்திரப் படைப்பு பல இடங்களில் பளிச்சிடுவதைப் பார்க்கும் பொழுதும், உயிருள்ள உரையாடல்களை உள்ளத்தைத் தொடும்பொழுதும் கட்டுக்கோப்பான கதை அமைப்பும் இருந்து விட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று எண்ணவே தோன்றுகிறது.

இத்தனை அத்தியாயங்களையும் பின்னிப் பிணைத்து நிற்கும் வகையில் ஆதார சுருதியாக ஒரு கதையுண்டா என்றால் இல்லை. ஆகவே வாசகனை எதுவுமே ஈர்த்து நிற்கவில்லை. நடை உத்தி நன்றாக இருந்தும், பாலைவனத்தில் காய்ந்த நிலாவாக இருக்கிறது.

விற்பனை: ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், கோர்ட் ரோடு, நாகர்கோவில்-629001: விலை: ரூ. 20

படித்தோம்

முருக கானம்

கோவை "சுப்ரி" என்று அழைக்கப்படும் தேசபக்தர் திரு சுப்பிரமணியம் மகாத்மா காந்தியின் தலைமையில் நடந்த விடுதலைப் போராட்ட காலத்தில் ஐந்து ஆண்டுகள் சிறைவாசம் செய்தவர். அப்பொழுது சுப்ரி தமது குலதெய்வமான சென்னிமலை முருகப்பெருமானைத் தியானம் செய்து கொண்டு தமிழ்த் தெய்வமான முருகப் பெருமானை அநேகம் கீர்த்தனைகளாகப் பாடினார். அவைகளில் முதல் பாகம் 36 கீர்த்தனைகளும், இரண்டாம் பாகம் 36 கீர்த்தனைகளும் "முருக கானம்" என்ற பெயருடன் தற்போது நூல் வடிவம் பெற்றுள்ளன. ஸ்வரதாள அமைப்புடன் உள்ள இப்புத்தகங்களைச் சமீபத்தில் பாரத நிதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் கோவையில் வெளியிட்டார்.

முதல் பாகக் கீர்த்தனைகளுக்கு ஸங்கீத வித்வான் கோவை திரு கே. வி. நடராஜ அய்யரும், இரண்டாம் பாக கீர்த்தனைகளுக்கு ஸங்கீத ஸாஹித்ய வித்வான் திரு கே.பி.எஸ். மணி பாகவதரும் அழகாக வர்ண மெட்டுக்கள் அமைத்துள்ளனர். பெரும்பாலும் வழக்கத்தில் உள்ள ரக்தி ராகங்களிலேயே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஸாகித்யங்கள் சொற்சுவையும் பொருட்சுவையும் உடையன. பக்திச் செறிவுடன் நன்றாக இயற்றப்பட்டுள்ளன.

இந்தக் கீர்த்தனைகள் எல்லாவற்றையும் நன்கு பரிசோதித்துப் பார்த்ததில் பாடுவதற்குச் சுலபமாகவும் சுவையாகவும் அமைந்திருப்பதை உணர்கிறேன்.

இப்புத்தகங்களுக்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அருள் ஆசி வழங்கியுள்ளார்கள். திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் அணிந்









சொல்கிறோம்!

× 'முருக கானம்' நூலை வெளியிடும்படி நிதி மந்திரியைக் கோருகிறார் திரு சுப்ரி.

துறையில் முருகனின் தத்துவத்தை வெகு அழகாக விளக்கியுள்ளார்கள்.

''முருக கான''த்தை இசை உலகத்தினர் வரவேற்று முருகனைப் பாடிப் பயன்பெறுவார்களாக. —செம்மங்குடி ரா. ஸ்ரீநிவாஸய்யர்

கிடைக்குமிடம்: ஹிக்கின் பாதம்ஸ், சென்னை-2; கல்கி ஏஜண்ட்கள், கோவை, மதுரை, திருச்சி, சேலம். விலை ரூ. 3.00.

சுடர்

தில்லி தமிழ்ச் சங்கம் தமிழ் - தமிழ் இலக்கியம் பற்றி ஆண்டுதோறும் மலர் வெளியிட்டுச் சிறப்பான பணியாற்றி வருகிறது. இருபத்திரண்டாவது மலராக, 'இந்திய இலக்கிய மலர்' ஒன்றை வெகு நேர்த்தியான முறையில் கொண்டு வந்திருக்கிறது.

இந்திய மொழிகளில் இலக்கியம் எப்படியெல்லாம் வளர்ந்திருக்கிறது என்பதை ரத்தினச் சுருக்கமாகவும், அதே நேரத்தில் எத்துறையையும் விடாமலும், அந்தந்த மொழிகளில் சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு எழுத வைத்துத் தமிழாக்கம் செய்து வெளியிட்டுள்ளது. பெரும்பான்மை மக்கள் பேசும் மொழிகள் மட்டுமின்றிச் சிறுபான்மை மக்கள் பேசும் மொழிகளிலும், அவற்றின் இலக்கியங்கள் பற்றிய குறிப்புகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

இந்திய ஒருமைப்பாட்டுக்கு இலக்கியத் துறை ஆற்றும் பணிக்கு ஈடாக அந்த நாள் தொட்டு இந்த நாள் வரையில் வேறு எதையுமே கூற முடியவில்லை.


தொன்மையான மொழிகளான சம்ஸ்கிருதமும் தமிழும் தொன்றுதொட்டே கூட்டுப் பணி புரிந்து ஒருமைப்பாட்டுக்கு அடிகோலியுள்ளன என்றாலும், இன்றைக்கு அவற்றினின்று கிளைத்துவிட்ட மொழிகளும் தங்கள் பாரம்பரியத்தைக் காப்பாற்றி வருகின்றன.

தலைநகரிலிருந்து தில்லி தமிழ்ச் சங்கம் செய்துள்ள இந்தப் பாராட்டுக்குரிய பணியில், பொன்னுக்குப் பூ வைக்கும் கதையாக இன்னுமொரு காரியம் செய்திருந்தால் எடுப்பாக இருந்திருக்கும். பிற மொழிகளிலிருந்து தமிழுக்கும், தமிழிலிருந்து பிற மொழிகளுக்கும் நடந்துள்ள இலக்கியப் பரிவர்த்தனை பற்றிய குறிப்புக்களையும் கட்டுரையாக வடித்திருந்தால், அது ஒருமைப்பாட்டின் சின்னத்தை அடையாளம் காட்டியதாக அமைந்திருக்கும். —ரா. வீ.

வெளியீடு: தில்லித் தமிழ்ச் சங்கம், ராமகிருஷ்ணபுரம், புதுதில்லி. விலை: ரூ. 10.00.


''கான்டீன்லே போண்டாவையும், பஜ்ஜியையும் ஒரு பிடி பிடிக்காதீங்கன்னு இதுக்குத்தான் சொன்னேன். கிண்ணங்களிலே இருந்த ஜலத்தையெல்லாம் எடுத்துக் குடிச்சிட்டீரே...! இப்போ நான் எதை வச்சிண்டு கச்சேரி பண்றதாம்...?''
''பெரிசா புல்லாங்குழல் வச்சுக்காதேய்யான்னு சொன்னேனே, கேட்டீரா? கச்சேரிக்கு ரொம்ப அவசரத்திலே புல்லாங்குழலுக்குப் பதிலா வாக்கிங் ஸ்டிக்கை எடுத்துண்டு வந்து நிக்கிறீரே!''
''மேடைமேலே ஏணியை எதுக்காகக் கொண்டு வந்து வச்சிருக்கு...?''
''பாகவதராலே பஞ்சமத்தைத் தொட முடியாதாம். ஏணியிலே ஏறி ஸீலிங்கையாவது தொடட்டுமேன்னு தான்...!''
''கர்நாடக சங்கீதத்துக்கு எங்க குருநாதர் பண்ணியிருக்கிற மாதிரி வேறு யாரும் சேவை பண்ணவே முடியாது!''
''அப்படி என்ன பண்ணினார்?''
''பாடறதையே நிறுத்திட்டார்!''
''மணி பத்துதானே ஆகுது? இன்னும் கொஞ்ச நேரம் இருந்து கச்சேரி கேட்டுட்டுப் போங்க சார்...''
''வேண்டாம் சார், அப்புறம் அங்கே வேறே கச்சேரி கேட்க வேண்டியிருக்கும்.''
''எங்கே?''
''வீட்டிலேதான்! லேட்டா போனா மனைவி கச்சேரி பண்ண ஆரம்பிச்சுடுவாளே!''
''என்ன பாகவதர் பாட்டிலே மாத்திப் பாடறார்?''
''அமெரிக்காவிலிருந்து காலம்பரதான் ஜம்போ ஜெட்லே வந்தாராம். அதனாலே இருக்கலாம்!''
ஜம்போ மகா தேவா...
இசை விழா இனிப்புகள்!
எஸ்.வி.ஆர்.
''தம்பூரா போடறது யாரு...? பார்த்தால் நம்மூர்க்காரர் மாதிரி தெரியல்லியே...!''
''அவர்தான் சட்டிக்கார ஹீராசந்த்... பாகவதருக்குக் கடன் கொடுத்திருக்காராம்... அதை வசூல் பண்றதுக்காக இப்படி பாகவதர் கூடவே அலையறாராம்...!''

இறைவன் வேண்டும் வரம்





மரியம் அடுப்பிலிருந்து ''கேக்கை'' எடுத்துத் தட்டில் வைத்தாள். நடுநடுவே— முந்திரிப் பருப்பு — திராட்சைப் பழம்; விழித்துக் கொண்டிருக்கச் செம்பொன் நிறத்தில் அந்தக் 'கேக்கு' வெகுஅழகாக இருந்தது. கேக்கின் மேல் ரோஸ் நிறத்தால் சர்க்கரையால் ''சிலுவை'' போடப்பட்டிருந்தது. குழந்தைகளும், கணவர் ஜேம்சும் கேக்கைச் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தார்கள். கேக்கு நன்றாக வந்ததால் எல்லோருக்கும் மகிழ்ச்சி. ''வாசனை மூக்கைத் துளைக்கிறது. இப்பவே சாப்பிடணும் போலிருக்கிறது'' என்றார் ஜேம்ஸ் குழந்தை போல.

''ரொம்ப அழகாக இருக்கிறது. சின்னக் குழந்தைகள் கூடப் பொறுமையாக இருக்கின்றனர். ஆறு கேக்குகள் பண்ணி விட்டேன். இன்னும் ஆறு கேக்குகள் பண்ண வேண்டும். நீங்கள் எல்லோரும் இப்படிச் சமையற்கட்டைச் சுற்றிக் கொண்டிருந்தால் எப்படி? இன்னும் எத்தனை வேலை இருக்கிறது? விடிந்தால் கிறிஸ்துமஸ் பண்டிகை. கிறிஸ்துமஸ் மரத்தில் பலூனைக் கட்ட வேண்டும். கடைத்தெருவுக்குப் போய் — கோழி முட்டை; பிஸ்கட்டு, கலர் மெழுகுவர்த்தி — எல்லாம் வாங்கி வர வேண்டும்; தையற்கார சாயபுவிடமிருந்து தைத்த துணிகளை வாங்கி வர வேண்டும். இந்த வீட்டிலே யாருக்குமே பொறுப்பு கிடையாது. மேரியும், ஜானியும் ரிக்கார்டு பிளேயரை விட்டு நகருவது கிடையாது. சதா பாட்டு. என்னதான் அப்படி ஒரு பாப்மியூசிக் ஆசையோ? கலர் காகிதத்தில் கொடிகள் — செய்து வைத்ததைச் சுவரில் ஆணி அடித்து மாட்டக் கூடவா நான் வரணும்?'' என்று எரிந்து விழுந்தாள் மரியம்.


''குழந்தைகளா, உங்கம்மாவுக்குக் கோபம் வருகிறது. ஜாக்கிரதை. எல்லோரும் ஒவ்வொரு வேலையாகச் செய்து முடியுங்கள். இல்லாட்டி யாருக்கும் இந்த மணக்கும் இனிய கேக்குக் கிடையாது. மரியம் எனக்கும் ஒரு வேலை சொல்லி விடு. எனக்கு நீ பண்ணும் கேக்கைத் தின்பதைத் தவிர வேறு ஒன்றும் தெரியாது. நான் வேணும்னு இந்தப் பணியாரத்தை ருசி பார்த்துச் சொல்லட்டுமா?'' என்று சிரித்தார் ஜேம்ஸ்.

''போதுமே. விளையாட்டு! நான் சீக்கிரம் இந்த வேலையை முடித்து விட்டு, ஒரு கேக்கும் கொஞ்சம் பணியாரமும் எடுத்துப் போய் மாதாகோயில் சைமன் பாதிரியாருக்குக் கொடுத்து விட்டு வருகிறேன். நீங்களும் வெளியே போவதானால் போய் விட்டு வந்து விடுங்கள்'' என்றாள் மரியம்.

குழந்தைகளும் ஜேம்ஸும் சமையற்கட்டிலிருந்து ஒவ்வொரு வேலைக்காகப் போய் விட்டார்கள். மரியம், எத்தனை தடுத்தும் கண்ணிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் அவளையறியாமல் கேக்கில் விழுந்தது. முன் இரவு நடந்த நிகழ்ச்சிகள் அவள் கண்முன்னால் நின்றன.

கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக மரியத்தின் பெண்களும் மாப்பிள்ளைகளும் பேரக்குழந்தைகளுமாக வீடு நிறைய வந்திருந்தார்கள். எல்லோரும் அவரவர்கள் வாங்கி வந்த உடைகள், நகைகள், எல்லாவற்றையும் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தார்கள். சமையற்கட்டில் சமையற்கார அந்தோணி வறுவல், பொரியல் என்று சமைத்துக் கொண்டிருந்தான். அந்தோணி செய்யும் மீன் வறுவலும், காரக் குழம்பும், எல்லோருக்கும் ரொம்பப் பிடிக்கும். பெரிய மாப்பிள்ளை ஜார்ஜ், பிளாஸ்க் நிறைய ஐஸ்கிரீம் கொண்டு வந்திருந்தான். மரியத்துக்கு ஐந்து குழந்தைகள். மூன்று பெண்கள், இரண்டு பிள்ளைகள். இரண்டு பெண்களை நல்ல இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்து விட்டாள். இரு பிள்ளைகளும் நல்ல வேலையில் பெங்களூரிலும் ஊட்டியிலுமாக இருந்தார்கள். எல்லோருக்

கும் குழந்தை குட்டிகள், இருந்தன. ஆக எத்தக் குறைவுமில்லாத குடும்பம். கடைசிப் பெண் லில்லிதான் குடும்பத்தாருக்கு வேண்டாதவளாகி விட்டாள். அவள் கல்லூரியில் படிக்கும் போதே — மாதாகோயிலில் மணி



ஜி.கே.தங்கம்

அடிக்கும் லேமின் மகன் பேபியைக் காதலித்து விட்டாள்; வீட்டாரின் சம்மதமில்லாமலே அவனுடன் வாழப் போய் விட்டாள்.

பேபி ஒரு ஸ்கூட்டர் மெக்கானிக். இந்த ஏழைப் பிள்ளையிடம் — லில்லி காதல் கொண்டதைக் கேள்விப்பட்டதும் வீட்டில் ஒரே ரகளை ஏற்பட்டது. ஜேம்ஸ் குதியாய்க் குதித்தார். ''நம் அந்தஸ்து என்ன? நம் இரண்டு மாப்பிள்ளைகளும் நல்ல உத்தியோகத்தில் இருக்கிறார்கள். இவன் கரியும் எண்ணெயும் படிந்த சட்டையோடு ஸ்கூட்டரைத் தள்ளிக்கொண்டு அலைகிறான். லில்லியை வசதியாக வைத்துக் கொள்ள முடியுமா? இந்தக் கல்யாணத்துக்கு நான் ஒத்துக் கொள்ள மாட்டேன்'' என்றார்.

மரியமும் அதையேதான் சொன்னாள். ''போயும் போயும் மாதம் முப்பது ரூபாய் சம்பளத்துக்கு மாதாகோயிலில் மணி அடிக்கும்ஒருவன் பிள்ளைக்கா என் மகளைக் கொடுப்பேன்? ஒருநாளும் முடியாது'' என்றாள். இரண்டு பிள்ளைகளும் ''அந்தப் பயலுக்கு என்ன தைரியமிருந்தால் நம் லில்லியிடம் காதல் கடிதம் கொடுத்து உறவாடுவான்? அவனை உதைத்துக் காலை ஒடித்து விடுகிறோம். அந்தப் பயலை ஊரை விட்டே விரட்டுகிறோம்'' என்றார்கள்.

இரு பெண்களும், தங்கைக்கு எத்தனையோ புத்திமதி சொன்னார்கள். ''உன் அழகுக்கும் படிப்புக்கும் இன்னும் எத்தனையோ நல்ல இடத்திலிருந்து மாப்பிள்ளை கிடைப்பான். இந்தப் பேபியை மறந்துவிடு'' என்று மன்றாடினார்கள்.

லில்லி யார் பேச்சையும் கேட்கவில்லை. வீட்டில் சண்டையும் அழுகையுமாக இருந்தது. கடைசியில் ஒருநாள் இரவு ஒரு துண்டுக் காகிதம் எழுதி வைத்து விட்டு லில்லி பேபியுடன் ஓடி விட்டாள். சகோதரிகள் ''அந்தப் பெண் தலையெழுத்து — தொலையட்டும்'' என்றார்கள். ஜேம்ஸ், ''அவள் எனக்குப் பெண்ணே இல்லை. இனிமேல் அவள் இந்த வீட்டுக்குள் காலடி வைக்கக் கூடாது'' என்று கத்தினார். அண்



பதினெட்டாம் நூற்றாண்டில் பிரஞ்சு அரசரின் மந்திரியாக இருந்தவர் ரிஷிலு. அவர் மிகவும் கண்டிப்பானவர். அவரிடம் ஒருமுறை ஒரு பிரெஞ்சு எழுத்தாளர் (பெளலன்) தர்ம நிலையத்துக்காக நன்கொடை கேட்டார். நன்கொடையளிக்க மறுத்தார் ரிஷிலு. ஒரு நாள் இருவரும் ஓர் ஓவியக் காட்சியில் சந்தித்துக் கொண்டனர்.

''அந்தந்த அறையில் தங்களது படத்தைப் பார்த்துவிட்டுத்தான் வருகிறேன்'' என்றார் பெளலன் ரிஷிலுவை நோக்கி.

''அதனிடமும் ஏதாவது நன்கொடை கேட்டிருப்பீரே!'' என்று கிண்டல் செய்தார் ரிஷிலு.

''எனக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா? அதுவும் உங்களைப் போலவேதானே இருந்தது? கேட்டாலும் பயன் இருக்காது என்பதுதான் தெரிந்த விஷயமாயிற்றே!'' என்றார் பெளலன். ரிஷிலுவின் முகத்தில் ஈயாடவில்லை.

-கோ.தீபா

ணன்மார்கள், ''இந்த உலகத்தில் எங்கே இருந்தாலும் அவளைப் பிடித்துக் கொண்டு வருகிறோம்! அப்படி விட்டுவிட மாட்டோம். அவளைக் கொலை செய்து விட்டு நாங்கள் சிறைக்குப் போகிறோம்'' என்று குதித்தார்கள்.

எல்லோருக்கும் சமாதானம் சொன்னவர் சைமன் பாதிரியார்தான். ''இப்போ அப்படி என்ன நடந்து விட்டது? எல்லோரும் அமைதியாக இருங்கள். லில்லி அவளுக்கு இஷ்டமானவனைக் கல்யாணம் செய்து கொண்டாள். அவ்வளவுதானே. காதலும், கல்யாணமும் இறைவனால், சுவர்க்கத்தால் நிச்சயிக்கப்படுகின்றன. பேபியும் நல்ல பிள்ளைதான். நல்ல உழைப்பாளி. நாளைக்கு அவன் நல்ல நிலைமைக்கு வர இடமிருக்கிறது. இறைவனுக்குப் பணக்காரனும், ஏழையும் ஒன்றுதான். தன் காதலைப் பற்றி லில்லி சொன்னவுடனே நீங்கள் கல்யாணத்துக்குச் சம்மதம் கொடுத்திருந்தால் நல்லபடியாக மாதாகோயிலில் அவர்கள் திருமணம் நடந்திருக்கும். இப்போது உங்கள் ஆத்திரத்தினால் அந்த வாய்ப்பை இழந்து விட்டீர்கள். இனிமேலாவது கோபத்தை விடுங்கள். ஒரு மாமரத்திலிருந்து ஒரு கிளையைக் கழித்து விட்டால் அந்தக் கிளையை மாங்கிளை என்றுதான் சொல்லுவார்கள். அதே போல் எங்கே போனாலும், எப்படியிருந்தாலும் அவள் உங்கள் குழந்தைதான். ஆகையினால் அவர்களுக்கு எந்த தொந்தரவும் கொடுக்க மாட்டேன் என்று கர்த்தர் முன்னாலே சொல்லுங்கள்'' என்று வாதாடினார். சைமன் பாதிரியார் பேச்சுக்கு எதிராக யாரும் ஒன்றும் செய்ய முடியவில்லை. இருந்தாலும் ''இனிமேல் அவள் எங்கள் வீட்டுக்கு வரக்கூடாது. - நாங்களும் அங்கே போக மாட்டோம். அவள் உறவு விட்டுப்போச்சு. இதுக்கு மேல் எங்களை வற்புறுத்தக் கூடாது'' என்றார்கள்.

''சரி, உங்கள் விருப்பம். காலம்தான் உங்கள் பிடிவாதத்தை மாற்ற வேண்டும். கர்த்தர் உங்களுக்கு நல்ல புத்தியைக் கொடுக்கட்டும்'' என்றார்.

அதற்குப் பின் வீட்டில் யாரும் லில்லி பேச்சை எடுப்பதில்லை. மாதாகோயிலுக்குப் போகும் போது, பாதிரியார் ரகசியமாக மரியத்திடம் மட்டும் ''உன் மகள் லில்லி தாயாகப் போகிறாள். பேபி சொந்தமாக ஒரு வொர்க் ஷாப் ஆரம்பித்திருக்கிறான்'' என்பது போன்ற செய்திகளைச் சொல்லுவார். மரியத்துக்கு ஒரு பக்கம் சந்தோஷமாகஇருக்கும். மறுபக்கம் கோபம் கோபமாக வரும்.

அன்று இரவு எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். பேச்சுவாக்கில் கிறிஸ்துமஸ் பண்டிகைக்குக் கொஞ்சம் பரிசுப் பொருள்களும், பணியாரமும் அந்தப் பெண்ணுக்குக் கொடுத்தனுப்பினால் என்ன? பிள்ளைத் தாய்ச்சியாக இருக்கிறதாம்'' என்று பேச்சை ஆரம்பித்தாள் மரியம்.

ஜேம்ஸ் கையிலெடுத்த கட்லெட்டைக் கீழே போட்டு விட்டு எரிந்து விழுந்தார். ''இதோ பார், உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன், அவள் பேச்சை எடுக்காதே என்று!''

''அம்மா. நல்ல சாப்பாட்டு வேளையில் அந்தச் சனியன் பேச்சை எடுக்காதே'' என்றான் பிள்ளை.


''உனக்கு இருக்கும் அன்பு அவளுக்கு இல்லையே — நீதான் இப்படி மாஞ்சுபோறே. ஒரு தடவையாவது அவள் இங்கே உன்னைப் பார்க்க வந்தாளா?'' என்றாள் பெண்.

மரியத்துக்கு முன் தட்டு நிறைய உருளைக் கிழங்குக் கறி வைத்திருந்தது. லில்லிக்குப் பிடித்த கறி! — இந்த நினைவில் அவளுக்கு உணவு செல்லவில்லை.

''மரியம் இரண்டு கேக்கைக் கட்டிக் கொடு. நான் மாதாகோயிலுக்குப் போய் சைமன் பாதிரியாருக்குக் கொடுத்து வருகிறேன்'' என்றார் ஜேம்ஸ்.

'என்ன மனிதர் இவர்? பிற மனிதர்களிடம் இருக்கும் அன்பும் பரிவும் கூடப் பெற்ற மகளிடம் இல்லாமல் போய் விட்டதே. பாதிரியார்கூட எத்தனையோ முறை சொல்லியிருக்கிறார். நேற்றுகூடச் சொன்னார். ''உள்ளத்தால் பகை உணர்ச்சியே கூடாதம்மா! மன்னிக்கும் தன்மை வேண்டும். அந்தக் குணத்தை வலியுறுத்தத்தானே ஏகபிரான் இப்படி ரத்தம் சொட்டச் சொட்ட நமக்குக் காட்சி தருகிறார்'' என்று ஏகபிரானின் சிலையைக் காட்டினார். ''பகைவனுக்கே இணங்க வேண்டும் என்று சொல்லாமல் சொல்லுகிறார். எல்லோரிடமும் அன்பு காட்டுங்கள். குற்றவாளிகளைக் கூட மன்னித்து விடுங்கள்— விரோதம் பாராட்டாதீர்கள் — என்பது ஒன்றுதான் இறைவன் நம்மிடம் கேட்கும் வரம் என்றே வைத்துக் கொள்ளலாம். அன்புதான் தெய்வம் என்றால் நாம் அன்பைப் புறக்கணித்துத் தெய்வத்தையும் புறக்கணிக்கிறோம். நாளைக் கிறிஸ்துமஸ் நாள். எல்லோரும் ஒற்றுமையுடன் இறைவனைப் பிரார்த்திக்க வேண்டிய நாள். அந்த நாளில் கோபம், குரோதம் எல்லாவற்றையும் தள்ளி

ஒவ்வொரு நாளும் உங்கள் சருமம் சிறிது ஈரப்பசை-யையும், சிறிது இளமையையும் இழக்கின்றது.



புதிய ஜான்ஸன்ஸ்* பேபி லோஷன் ஒவ்வொரு நாளும் ஏற்படுகின்ற அந்த இழப்பை ஈடுசெய்கின்றது.

ஒரு பெண்மணியின் விலை யில்லாப் பொக்கிஷம் அவளது சருமம். எனினும், வயதாக ஆக, அதை அழகாகவே வைப்பது கடினமாகும். வருங் காலத்தில் உங்கள் சருமத்தை அழகாக வைக்கவேண்டு மானல், அதை இன்று முதலே நன்று பராமரிக்கவேண்டும். ஆகையால்தான் உங்களுக் குத் தேவை புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன். இந்த விசேஷ அழகு லோஷன் சருமத்திற்கு இன்றியமையாத ஈரப் பசையை நிலை நிறுத்துகிறது.

அதோடு, கடுமையான குளிர் மாதங்களில் உங்கள் சருமத்தை மிருதுவாகவும், இளமையுடனும், அழகொளி வீசும்படியும் வைக்கிறது—ஆண்டு முழுவதும் கூட. எனவே, ஒவ்வொரு காலையிலும் இரவிலும் புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன் உபயோகியுங்கள். உங்கள் முகம், கழுத்து மற்றும் கைகளில் உபயோகித்து, உங்கள் சருமத்திற்குப் பனிபோன்ற புதுமையை அளித்திடுங்கள்.



புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன்

உங்கள் சருமத்தை மிருதுவாக, இளமை தவழ, அழகொளி வீச வைக்கின்றது.

விட வேண்டும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு நல்ல காரியம் செய்ய வேண்டும். நீங்கள் ஏன் லில்லியை மன்னித்துவிடக் கூடாது?'' என்று ஒரு மணி நேரம் புத்திமதி புகட்டினர். அத்தனையும் உதறிவிட்டு இவர் இன்னும் லில்லியிடம் கோபமாகவே இருக்கிறார். இவரிடம் இனி மேல் பேசிப் பயன் இல்லை. நாம்தான் ஏதாவது செய்ய வேண்டும்.. கொஞ்சம் பலகாரம், புதுத் துணிகளுடன் லில்லியைப் போய்ப் பார்த்து வர வேண்டும்' என்ற முடிவுக்கு வந்தவளாக, ''நானே பாதிரியாருக்குப் பணியாரம் எடுத்துப் போகிறேன். மழை வரும் போலிருக்கிறது. நீங்கள் இங்கேயே இருங்கள். ராத்திரியெல்லாம் இருமிக் கொண்டிருந்தீர்கள். மழையில் அலைய வேண்டாம்'' என்றாள்.

மரியம் சாலையில் நடந்து கொண்டிருந்தாள். மழையும் இடியும் மின்னலும் வானைப் பிளப்பது போலிருந்தன. மனத்தில் ஒரே சங்கடம், லில்லியும் பேபியும் தம்மை எப்படி வரவேற்பார்களோ என்ற எண்ணம் ஒரு புறம்; அவருக்குத் தெரிந்தால் என்ன ரகளை யாகுமோ என்ற அச்சம் மறுபுறம். என்றாலும் லில்லியைப் பார்த்தே தீர வேண்டும் என்ற உறுதி 'அவளுக்கு நான் செய்யும் கேக்கு என்றால் ரொம்ப பிடிக்கும். அவள் குழந்தைதானே? பண்டிகைக்குப் பணியாரம் செய்யக்கூடத் தெரியாது!' இப்படியெல்லாம் எண்ணிக்கொண்டே வேகமாக நடந்தாள்.

''கதவைத் திறந்தவன் பேபிதான். மரியத்தைப் பார்த்ததும் அவன் கண்கள் மகிழ்ச்சியால் பளபளந்தன. ''வாருங்கள், அம்மா. வாருங்கள். அந்த மேரி மாதாவே நேரில் வந்ததுபோல் இருக்கிறது. லில்லி! இதோ யார் வந்திருக்கிறார்கள் என்று பார்'' என்று கூவினன். சமையற்கட்டிலிருந்து வந்த லில்லி தாயைப் பார்த்ததும் ஒருகணம் ஒன்றுமே பேசவில்லை. ''அம்மா!'' என்று அழுதுகொண்டே மரியத்தைக் கட்டிக் கொண்டாள்.

மகிழ்ச்சியில் மரியத்துக்கு ஒன்றுமே பேசத் தோன்றவில்லை. ஆசை நீர்க் கண்ணீர் மல்க, மகளையும் மருமகனையும் பார்த்தாள். என்ன பேச வேண்டும் என்று தெரியாமல் ''நல்ல மழை, நல்ல மழை'' என்றாள்.

''அம்மா, நீ வந்து விட்டாயே அம்மா. நாங்கள் இரவெல்லாம் கர்த்தரிடம் வேண்டிக் கொண்டோம். 'இறைவா, இந்தக் கிறிஸ்துமஸ் நாளில் எங்களைக் குடும்பத்தாருடன் சேர்த்து விடு' என்று. எங்கள் பிரார்த்தனை பலித்து விட்டது. பண்டிகைக்கு நீ செய்யும் கேக்கைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். எங்கே அம்மா, கேக்கு'' என்று குழந்தை போல் கேட்டாள் லில்லி.

வெளியே யாரோ படபடவென்று கதவைத் தட்டினார்கள். ''யாரது?'' என்று பதறினாள் மரியம். பேபி கதவைத் திறந்தான். சொட்டச்சொட்ட மழையில் நனைந்து கையில் ஒரு பொட்டலத்துடன் ஜேம்ஸ் வந்தார். மரியம் பயத்தினால் மயக்கமடையும் நிலையில் கதவுக்குப் பின் மறைந்து கொண்டாள். கணவர் கோபம் எத்தனை பொல்லாதது என்று அவளுக்குத் தெரியும். 'கர்த்தரே! என்னை இந்த இக்கட்டிலிருந்து காப்பாற்றும்' என்று கண் மூடி வேண்டிக் கொண்டாள். லில்லியும் தகப்பனைப் பார்த்துப் பயந்து விட்டாள். என்ன நடக்குமோ என்று நினைத்து நடுங்கினாள். ''லில்லி இப்படி வா அம்மா. இதை வாங்கிக் கொள். உன் அம்மா செய்யும் கேக்கு. உனக்கு ரொம்பப் பிடிக்குமே. யாருக்கும் தெரியாமல் எடுத்து வந்தேன். நேற்றெல்லாம் உன் அம்மா தூங்கவே இல்லை. அழுது கொண்டிருந்தாள், உன்னை நினைத்து'' என்றார் ஜேம்ஸ்.

லில்லி பொட்டலத்தை வாங்கிக்கொண்டு ''அப்பா! என்னை மன்னித்து விடுங்கள். ஒரு பெண்ணுக்கு என்னதான் அன்புக் கணவன் இருந்தாலும், அந்தக் கணவனின் அன்பு மட்டும் போதாது. தாய் தந்தையரின் அன்பும் தேவை என்பதை இந்த ஒரு வருட வாழ்க்கையில் நான் தெரிந்து கொண்டேன். தாய் — தகப்பன் அன்புக்காக ஏங்கினேன். அந்தக் கர்த்தர்தான் எனக்கு அருள் புரிந்தார்'' என்றாள்.

''என்னையும் மன்னித்து விடுங்கள். உங்கள் உள்ளத்தைத் தெரிந்து கொள்ளாமல், உங்களுக்குத் தெரியாமல் நான் இங்கே வந்தது தவறுதான்'' என்றாள் மரியம்.

''அட, எழுந்திருங்கள். இரண்டு பேரும் அழக் கூடாது. பண்டிகை நாளில் மகிழ்ச்சியாகத்தான் இருக்கணும். என்ன மாப்பிள்ளை அப்படியே நிற்கறீங்க. வீட்டுக்கு வந்தவங்களுக்கு ஒரு டீ கூட கொடுக்காமெ? குளிர் நடுக்குகிறது. சீக்கிரம் டீ கொண்டு வாருங்கள்'' என்றார் ஜேம்ஸ் தமாஷாக.

பேபியும் லில்லியும் ஓடி ஓடி உபசாரம் செய்தார்கள். முதியவர்கள் ஜேம்ஸூம் மரியமும் ஒருவரை மன்னித்து விடும்பொழுது எழும் அந்த மகிழ்ச்சி எத்தனை உயர்வானது என்பதை உணர்ந்தார்கள். ''சரி இரண்டு பேரும் வீட்டுக்குக் கிளம்புங்க, பண்டிகைக்கு! என் எல்லாக் குழந்தைகளும் என்னுடன் இருக்கணும்'' என்றார் ஜேம்ஸ் கண்டிப்பாக. மரியமும் லில்லியும் கர்த்தர் படத்தின் முன் மண்டியிட்டு வணங்கினார்கள்.

வீரனின் லட்சணம்



பிரெஞ்சு நாட்டின் மாவீரராக விளங்கிய கார்டினல் ரிஷிலு என்பவர் சிறந்த வீரர்களைத் தேர்ந்தெடுக்கக் கையாண்ட முறை விநோதமானது; ஆனால் சிந்தனைக்குரியது. தமது அறையில் வீர சாகஸங்கள் நிரம்பிய படங்களை ஒரு பக்கமும், அமைதியும், இயற்கை அழகும் நிறைந்த படங்களை ஒரு பக்கமும் தொங்க விட்டார். அதைக் காண உள்ளே வருபவர்கள் வீர சாகஸப் படங்களைக் கண்டு மலைத்துப் போய் நின்றால், ''அவர்கள் கோழைகள்'' என்று ஒதுக்கி விடுவாராம். அமைதியான படங்களைக் கண்டு வியந்து ரசிப்பவர்களே ''சிறந்த வீரர்கள்'' என்று நிர்மானித்து அவர்களிடம் முக்கிய பொறுப்புக்களை அளிப்பாராம். -கோ. நீபா

வந்த விருந்தினர்
விரும்பி ரசித்திட
நீங்கள் பெருமையோடு
அளிக்கத்தகுந்த ஒரே ஒரு
இன்ஸ்டன்ட் காப்பி

இதுதான்.



நெஸ்க:பே— உங்கள்
உபசரிப்பைப்
பண்பாட்டின் சிகரமாக
கொடியில உயர்த்திக்
காட்டும் தரம் மிகுந்த
ஒரே இன்ஸ்டன்ட்
காப்பி. 100%
சுத்தமான காப்பி.
மிகச்சிறந்த
தென்னிந்தியக் காப்பிக்
கொட்டையிலிருந்து
தயாராகிறது.
இந்தியாவிலேயே அகில
உலகப் பிரியமான காப்பி
இது ஒன்றே.

நெஸ்க:பே

—100% சுத்தமான காப்பியிலிருந்து தயாராகும்
இன்ஸ்டன்ட் காப்பி இது ஒன்றே.

உலகெங்கும்
அதிகமாய்
விற்பனையாகும்
இன்ஸ்டன்ட் காப்பி

A NESTLÉ product

NNCM-24 TAM

காட்சி 4

(ஏழுமலை வீடு, மாலை நேரம், சர்மாவின் மகன் ஆனந்தன் பெட்டியுடன் உள்ளே வருகிறான். 'அப்பா' என்று கூப்பிடுகிறான். மாடியிலிருந்து ஏழுமலை நாயுடு இறங்கி வருகிறார்.)

ஆனந்தன்: சர்மா இல்லே?

ஏழுமலை: நீ யாருப்பா?

ஆனந்: அவரு மகன்.

ஏழு: ஐயாரு மகனா? அய்யரே! அய்யரே! உன் பையன் வந்திட்டாம்பா.

(உள்ளேயிருந்து சர்மா பஞ்ச பாத்திர உத்தரணியுடன் வருகிறார்.)

சர்மா: ஆனந்த்!

(ஆனந்தன் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்கிறான். அவனைச் சர்மா கட்டி அணைக்கிறார்.)

சர்மா (பெருமையுடன்): நாயுடுகாரு! நம்ப பையன்.

ஏழு: அப்படியா? நான் ஏழுமலை நாயுடு. மேவீட்டுல இருக்கேன்.

சர்மா: ஆனந்த், என்னப்பா திடீர்னு புறப்பட்டு வந்திருக்கே?

சர்மா: போதாக் குறைக்குச் சிவராமனும் நித்யானந்தமும் பெத்த புள்ளைகளை விட அதிகமா என்னைக் கவனிக்கறாங்க.

ஏழு: இருப்பா, இவளையும் கூட்டி வரேன்.

(ஏழுமலை மாடிக்குப் போகிறார். இதற்குள் ஆனந்த் பெட்டியைத் திறந்து ஒரு சால்வையை எடுக்கிறான்.)



அவன் பார்த்துப்பான்

கோமல் சுவாமிநாதன்

''மவராசா போறா என்னுடி? நான் இல்லே! சைக்கிள் ரிக்ஷாவிலே ஊர்வலம் வந்து அம்பு போடறேன்!''

ஆனந்த்: அப்பா, எவசாக்கிலிருந்து என்னை மாத்திட்டாங்க. உடனடியாக இங்கேவந்து 'ஜாயின்' பண்ணணும்னு ஆர்டர் வந்தது.

ஏழு: அப்ப தம்பி மெட்ராகலேதான் இருக்கப் போகுதா?

ஆனந்த்: ஆமா. சென்னைதான் ஹெட் ஆபீஸ். ஆனால் அடிக்கடி 'டூர்' போயிட்டு வரணும். அப்பா, இந்த வயசான காலத்திலே நீங்க என்னை விட்டுப் பிரிஞ்சு இருக்கிறது ஆண்டவனுக்கே பிடிக்கல்லே! என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்துட்டார்! — அப்பா நீங்க எப்படி இருக்கீங்க?

சர்மா: எனக்கு இங்கே என்னடா குறைவு? இதோ ஏழுமலை நாயுடு, அவர் சம்சாரம் இரண்டு பேரும் இருக்காங்க. எனக்கு ஏதாவது ஒண்ணுன்னா உயிரைக் கொடுப்பாங்க. இல்லையா, நாயுடுகாரு?

ஏழு: அதெல்லாம் சும்மா சொல்லாதேப்பா. நாங்க என்ன பெரிசாச் செய்துட்டோம்?

ஆனந்த்: அப்பா, இது உங்களுக்கு.

சர்மா: என்ன விலை?

ஆனந்த்: விலையா? எதுக்கு விலை கேக்கிறீங்க?

சர்மா: என்ன விலை சொல்லேன்!

ஆனந்த்: வியாபார முறையிலே இதனுடைய விலை ஐம்பது ரூபாய்தான். ஆனால் வருஷமெல்லாம் அடுப்புப் புகையிலே வேர்த்து விறுவிறுத்து வெந்து கருகித் தன்னை அழிச்சுக்கிட்டு என்னை ஆளாக்கின உங்களுக்கு நான் கொடுக்கிற அன்பளிப்பு இது. இதுக்கு விலையே கிடையாது. ஏதோ ஐம்பது ரூபாய்க்கு ஒரு சால்வையை வாங்கிக் கொடுத்துவிட்டு இவன் கடமையைத் தீர்த்துக்கிட்டான்னு மட்டும் நினைக்காதீங்க.

சர்மா: மடையா, அதுக்குச் சொல்லலேடா! பெருமையோட இதை நான் ஏத்துக்கிறேன். ஆனா உன் அன்பைத் தெரியப் படுத்தப் பணத்தை வீணாக்க வேண்டாம்

என்று சொல்ல வந்தேன். இல்லாதபோது சிக்கனமா இருந்தேன்னு சொல்றதிலே அர்த்தம் இல்லே. இருக்கிறபோது சிக்கனமா இருக்கிறதுதான் நல்ல வாழ்க்கை முறை.

ஆனந்த்: இன்னும் நீங்க சமையல்காரனு உடல் வெந்து போகணுமா? இந்த வேலையை விட்டுட்டு என் கூடவே இருக்கலாமே!

சர்மா: இந்த உடலை விட்டு ஜீவன் போற போதுதான் பிறருடைய உதவி தேவைப் படணும். அதுவரைக்கும் உழைக்கிறது தான் நம் கடமை. வா, குளிச்சுட்டுச் சாப் பிட வா.

(சர்மா உள்ளே போகிறார். தீபா வருகிறாள்.)

தீபா: ஸார் !

ஆனந்த்: யார் நீங்க? யாரைப் பார்க்கணும்?

தீபா: நித்யானந்தத்தைப் பார்க்கணும்.

ஆனந்த்: நித்யானந்தமா? அந்தக் கிழவனாரா?

தீபா: கிழவரா? என்ன சார் கிண்டலா?

ஆனந்த்: ஸாரி! நித்யானந்தம் யாரென்று எனக்குத் தெரியாது.

தீபா: நித்யா! நித்யா! (கூப்பிடுகிறாள்.)

(உள்ளேயிருந்து நித்யானந்தத்தின் குரல்)

நித்யா: கம்மிங். தீபா...

தீபா: நீங்க யாரு?

ஆனந்த்: எட்டை மூணாலே பெருக்கி, இருபத்தி நாலைக் கழிச்சா என்ன வரும்?

தீபா: எட்டை மூணால பெருக்கி (கணக்குப் போடுகிறாள்) சைபர்.

ஆனந்த்: ஐ ஆம் ஜஸ்ட் தட். நான் ஒரு சாதாரண சைபர். விசேஷமாச் சொல்ல ஒண்ணுமில்லே! (நித்யானந்தம் வருகிறான்.)

நித்: ஹலோ தீபா (ஆனந்தனைப் பார்த்து) நீங்க...

ஆனந்த்: நான் சர்மாவோட ஸன். ஆனந்த். டில்லிலேருந்து வந்திருக்கேன்.

நித்யா: ஓ! பைசாக்கிலிருந்தீங்க, இல்லே!

ஆனந்த்: ஆமா. நான் ஒரு மெடலர்ஜிஸ்ட். இங்கு டிரான்ஸ்ஃபர் ஆயிட்டுது.

நித்யா: அப்படியா? சந்தோஷம்.

(இருவரும் கைகுலுக்கிக் கொள்கிறார்கள்.)

தீபா: போகலாமா?

(இருவரும் போக முற்படுகின்றனர்.)

ஆனந்த்: ஹலோ நீங்க யாருன்னு சொல் லவே யில்லையே!

தீபா: எட்டை மூணாலே பெருக்கி இரு பத்தி நாலைக் கழிச்சா என்ன வரும்?

ஆனந்த்: நீங்களும் சைபர்தானா?

தீபா: நோ. அந்த சைபருக்கு முன்னாலே ஆறு சைபரைப் போட்டு ஒண்ணையும் போட் டால் என்ன வரும்?

ஆனந்த்: கோடி....


தீபா: நான் கோடியில் ஒருத்தி!

நித்யா: என்ன தீபா! இரண்டு பேரும் பள்ளிக்கூடத்துப் பசங்க மாதிரி கணக்குப் போட்டுக்கிட்டிருக்கீங்க!

தீபா: வாங்க விளக்கமாச் சொல்றேன்.

(இருவரும் வெளியே போகிறார்கள், சர்மா வருகிறார்.)

சர்மா: என்னடா! இன்னும் என்ன பண் ணிண்டிருக்கே!



''ஏதோ ஐம்பது ரூபாய்க்கு ஒரு சால்வையை வாங்கிக் கொடுத்து விட்டு இவன் கடமையைத் தீர்த்துக்கிட்டான்னு மட்டும் நினைக்காதீங்க.''

ஆனந்த்: அப்பா, நித்யானந்தமும் இன்னொரு பெண்ணும் வெளியே போனாங்களே, என்ன விஷயம்?

சர்மா: என்னவா இருக்கும்? உனக்குப் புரிஞ்சுக்கக் கூடிய வயசுதானே?

ஆனந்த்: அதுதானே! நான் சந்தேகப்பட்டேன். ஜோடிப் பொருத்தம் ரொம்பப் பிரமாதம்.

சர்மா: என்ன ஆனந்த்! ஜோடிப் பொருத்தம் எல்லாம் பார்க்கறே! உன் கண்கள் இப்படி அலை பாயறதைப் பார்த்தா எனக்குச் சந்தேகமா இருக்கே!

ஆனந்த்: அப்பா! அப்படி யெல்லாம் சந்தேகப்படாதீங்க! நான் உங்களை மீறிப் போக மாட்டேன். நீங்க 'டே ஆனந்த்! இப்ப ஒண்ணும் உனக்கு அவசரம் இல்லே. கல்யாணத்துக்கு ஒரு ஆறு மாசம் பொறுத்துக்கோ'ன்னு சொன்னால் கண்டிப்பா நான் ஆறு மாசம் பொறுத்துப்பேன்.

சர்மா: ஆறு மாசம்! ஆறு மாசத்துக்கு மேலே டிலே பண்ணாதேன்னு ஒரு வார்னிங் கொடுத்திட்டே! இப்பவே ஏற்பாடு பண்ண ஆரம்பிச்சுடறேன்.

ஆனந்த்: இப்ப ஒண்ணும் அவசரமில்லேப்பா. நானெக்கு அந்த ஏற்பாட்டை ஆரம்பிச்சாப் போதும்!

(ரங்கநாயகி வருகிறாள்.)

ரங்கநாயகி: சாமி... பையன் வந்திருக்குதாமில்லே! ராசா நல்லா இருக்கியா?

ஆனந்த்: இருக்கேம்மா!

(சிவராமன் வருகிறான்.)

சர்மா: சிவராமன், இவன்தாம்பா என் பையன்.

சிவராமன்: அப்படியா? எப்ப வந்தாரு?

சர்மா: இப்பத்தான்.

ஆனந்த்: அப்பா, நான் குளிச்சுட்டு வந்திடறேன்.

(ஆனந்த் பெட்டியை எடுத்துக் கொண்டு உள்ளே போகிறான்.)

சிவ: சர்மாஜி, நாம இன்னிக்கு இரவே நந்தி ஹில்ஸ் போகிறோம்.

சர்மா: உன் சவாலை நெறைவேத்த ரொம்ப வேகமா இருக்கே போல் இருக்கு.

ரங்க: நந்தி ஹில்க, அது எங்கேப்பா இருக்கு?

சர்மா: மைசூருக்குப் பக்கத்திலே.

ரங்க: யப்பா, எல்லா இடத்துக்கும் கூட்டிக்கிட்டுப் போனியே, இந்த மைசூருக்கு என்னைக் கூட்டிக்கிட்டுப் போனியா? நவராத்திரி நேரத்திலே மவராசா பட்டத்து யானை மேலே பவனி வந்து அம்பு போடுவாராம். அது கண் கொள்ளாக் காட்சியா இருக்குமாம். கூட்டிக்கிட்டுப் போங்கன்னு எத்தினி வாட்டி சொல்லி யிருக்கேன்? இப்ப மவராசாவே போயிட்டாரு!

ஏழு: மவராசா போனா என்னடி? நான் இல்லே! சைக்கிள் ரிக்ஷாவிலே ஊர்வலம் வந்து அம்பு போடறேன்; பார்த்துடு. சிவராமப்பா, மைசூரு நானும் பார்த்ததில்லே. சாமுண்டீஸ்வரி மலையில ஒரு நாள் முழுக்க உட்கார்ந்து தரிசனம் பண்ணணும்.

ரங்க: ஆமாப்பா, சாமி. நாங்களும் வரோம், சாமி.

"என்ன தீபா! இரண்டு பேரும் பள்ளிக்கூடத்துப் பசங்க மாதிரி கணக்குப் போட்டுக்கிட்டிருக்கீங்க!"



சர்மா: நாங்க க்ஷேத்திராடனம் பண்ணப் போகல்லே; ஓர் உண்மையைக் கண்டு பிடிக்கப் போறோம்.

ரங்க: நீங்க பாட்டுக்கு உண்மையைக் கண்டு பிடிங்க. நாங்க இப்படிக் கோயில் குளம் இதெல்லாம் தரிசனம் பண்ணிக்கிட்டு இருக்கோம்.

ஏழு: இந்தா, போன தடவை காஞ்சிபுரத்துக்குப் போகும்போது முக்கியமான ஒண்ணு மறந்திட்டீல்ல அது மாதிரி இந்தத் தடவை மறந்துடாதே.

ரங்க: என்னப்பா மறந்தேன்?

ஏழு: ஞாபகமில்லே? ஆண்டவன் ஜெகஜ்ஜோதியா கருட வாகனத்திலே வராரு. தீவட்டி புகைஞ்சுக்கிட்டே இருக்கு... ஆனா என் மனசு அதிலே லயிக்கலே...

சர்மா: ஏன் லயிக்கல்லே?

ஏழு: சுருட்டை மறந்துட்டு வந்திட்டேன்!

சிவ: கருட வாகனத்துக்கும் சுருட்டுக்கும் என்ன சம்பந்தம்?

ஏழு: நான் குடிக்கிறதே கருடன் மார்க் சுருட்டுத்தானே?

(எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

சர்மா: சிவராமன்! நிச்சயமா நாம மைசூர் புறப்பட்டுப் போகணுமா?

சிவ: என்ன சர்மாஜி பின்வாங்கறீங்க?

சர்மா: நான் பின்வாங்கலேப்பா. சில தேவ ரகசியங்களை நாம சோதனை பண்ணக் கூடாது. அதற்கான சக்தி நமக்கில்லே!

சிவ: என்னுடைய அறிவுக்குப் புரியாத ரகசியங்கள் எதுவுமே இருக்க முடியாது.

சர்மா: அப்போ சரி. இன்னிக்கு ராத்திரியே மைசூர் புறப்படுவோம்.

காட்சி - 5

(நந்தி ஹில்ஸ் பகுதியில் ஒரு சிறிய வீடு. இருபத்திரண்டு வயது மதிக்கத்தக்க ஒரு பெண் முழங்காலைக் கட்டிக் கொண்டு உச்சி முகட்டைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருக்கிறாள். அவள் முகத்தில் சோகம் ததும்புகிறது. ஒரு கிழவர் உள்ளே வருகிறார்.)

கிழவர் (வெளியே பார்த்து): ஐயா! உள்ள வாங்கய்யா, உள்ள வாங்க!

(வீட்டுக்குள் சர்மா, சிவராமன், ஏழுமலை நாயுடு, ரங்கநாயகி முதலானோர் வருகின்றனர்.)

இந்தப் பொண்ணுதாங்க இறந்துபோன சபாபதியினுடைய மகள்.

ரங்க: அட பாவமே, இந்தப் பொண்ணுக்கு இப்படி ஒரு கஷ்டமா? அப்பா அது முகத்தைப் பாருப்பா!

(அவள் அருகில் நெருங்கி வந்து)

அம்மா, அம்மா!

(அந்தப் பெண் அசைவற்று இருக்கிறாள்.)

கிழவர்: கல்யாணி! கல்யாணி! உன்னைப் பார்க்க யாரோ வந்திருக்காங்கம்மா.

சிவ: ஏன் இவங்க இப்படிப் பிரமை பிடிச்ச மாதிரி இருக்காங்க?

கிழவர்: அவங்க அப்பா இறந்த அன்னியிலிருந்து இது இப்படித்தாங்க இருக்குது. பேச்சு வார்த்தையே இல்லீங்க!

சர்மா: அம்மா குழந்தை... இங்க கொஞ்சம் பாரும்மா. (கல்யாணி மௌனம்)

எதனாலே இவுங்க அப்பா மண்ணெண்ணெய் ஊத்திக்கிட்டுத் தீக்குளிச்சு இறந்தாரு?

கிழவர்: அதுதாங்க காரணமே புரியலே!

சிவ: ஏதாவது கடன் தொல்லையோ?

கிழவர்: அவருக்கு ஏதுப்பா கடன்? ரொம்ப சிக்கன வாழ்க்கை நடத்தறவங்க. பள்ளிக்கூடத்திலே வாத்தியார் வேலை. அதோட பக்கத்திலே ஓர் அருவி. ஒரு சின்னக் கோவில் இருக்குது. அதைப் பார்க்க ஜனங்க வரும். அவங்களுக்குக் காப்பி பலகாரம் ஏதாவது வேணும்னு செய்து கொடுப்பார். அதுல கொஞ்சம் வருமானம் வரும். கடன் வாங்கியதாகவே தெரியல்லீங்க.

சர்மா: இந்தப் பொண்ணு படிச்சிருக்குதா?

கிழவர்: காலேஜிலேகூடப் படிச்சிருக்குதுங்க. வேலைக்கெல்லாம் கூட ஏதோ அப்ளிகேஷன் போட்டிருக்குது. ரொம்ப நல்ல பொண்ணுங்க.

சிவ: இந்தப் பொண்ணுக்கு வேற உறவுக்காரங்க யாராவது இருக்காங்களா?

கிழவர்: யாருமே இல்லீங்க.

ரங்க: கல்யாணி! என் வயத்துல பொறந்த மக மாதிரி நெனைச்சுச் சொல்றேன். கொஞ்சம் எங்களைப் பாரும்மா, பேசும்மா.

ஏழு: மாதிரி என்ன, இந்தக் குழந்தையை நம்ப வயித்திலே பொறந்த பொண்ணு எடுத்துக்கிட்டா என்ன?

ரங்க: யப்பா! யப்பா! என்னப்பா சொல்றே?

ஏழு: ராமேசுவரம் போனோம், காசிக்குப் போனோம்; சுத்தாத இடமில்லே. இனிமே நமக்குக் குழந்தை பொறக்கும்னு நம்பிக்கையும் இல்லே. அந்த ஆத்தா சாமுண்டீசுவரி கருணையிலே இது கிடைச்சதுன்னு நெனைச்சுக்குவோமே!

ரங்க: சொல்லுப்பா... போய்ச் சீக்கிரம் சொல்லுப்பா.

ஏழு: என்ன சொல்லச் சொல்றே?

ரங்க: அந்தப் புள்ளையைத் தத்து எடுத்துக் கிடறோம்னு சொல்லுப்பா!

ஏழு: சிவராமப்பா! நாங்க ஒரு முடிவு பண்ணிட்டம்பா. இந்தக் கல்யாணி இனிமே எங்க மகளப்பா. அவளை மகளா நாங்க ஏகமனதாக ஏத்துக்கிட்டோம்.

சர்மா: நாயுடுகாரு...

ஏழு: ஐயரே! இதில் ஒண்ணும் மறுத்துச் சொல்லிடாதிங்க. ஜனகருக்கு வயக்காட்டுல சீதை கிடைச்ச மாதிரி எங்களுக்கு மலையில இந்தப் பொண்ணு கிடைச்சிருக்கா.

சிவ: சர்மாஜி... இந்தப் பெண்ணிருக்கிற நிலைமையிலே நடந்த சம்பவத்தைப் பத்தி நாம ஏதும் தெரிஞ்சுக்க முடியாது. அதனாலே இவளைச் சென்னைக்கு அழைச்சுக்கிட்டுப் போய் உண்மையைத் தெரிஞ்சுக்கலாம்...

சர்மா: ஆட்சேபணை இல்லே... சவாலுக்காக நீ அழைச்சுண்டு போகணும்கறே? ஆதரவு இல்லாத இந்தப் பொண்ணுக்கு ஆதரவு கிடைக்கிறது... குழந்தைப் பேறு இல்லாத இவங்களுக்கு அந்தப் பாக்யம் கிடைக்கிறது... அதனாலே அழைச்சுண்டு போகலாம்னு நான் சொல்றேன்.


(தொடரும்)


















காப்டன் கிரெய்க்!

ஆஜானுபாகு: ஆறடி எட்டங்குல உயரம்; டோனி கிரெய்க் என்ற 'உயர்ந்த' ஆட்டக்காரர் குணத்திலும் உயர்ந்தவர். ஆல்ரௌண்டர் டோனி கிரெய்க்கைப் பிரிட்டிஷ் கிரிக்கெட் எழுத்தாளர் கழகம் 1967ல் தலை சிறந்த இளம் கிரிக்கெட் ஆட்டக்காரராகத் தேர்ந்தெடுத்தது.

இன்று முப்பது வயதான ஆண்டோனி வில்லியம் கிரெய்க் தென் ஆப்பிரிக்காவில் பிறந்தார். கல்லூரி வாழ்க்கையின்போது டோனி படிப்பா, கிரிக்கெட்டா இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயம் எழுந்தது! படிப்பில் கவனம் செலுத்தாததற்காக அவரது தந்தையிடம் செம்மையாக உதை வாங்கினார். லங்காஷயர் கிரிக்கெட் கோஷ்டிக்கெதிராக இங்கிலாந்துக்கு வந்து டோனி கிரெய்க் நன்றாக ஆடியதும் சர்வகலாசாலைப் படிப்புக்கு 'குட் பை' சொல்லிவிட்டார்!

ஒரு தடவை இளம் டோனி கிரெய்க் தன் அருமை அன்னையுடன் கிழக்கு லண்டனில் கடற்கரையில் நீச்சல் அடித்துக் கொண்டிருந்தான். ஒரு பெரிய சுறா மீன் வந்து காலைக் கடித்து அன்னையைக் கடலுக்கு இழுத்துச் செல்ல முயன்றது. கிரெய்க் அன்னையைப் பிடித்துக் கொண்டு கதறினான். அலறிக் கொண்டே சுறாமீனைக் கைகளால் அவன் அன்னை தாக்கினாள். அதிர்ஷ்டவசமாகச் சுறாமீன் அவளது காலை விட்டு விட்டது! அங்கிருந்து நகர்ந்தும் சென்று விட்டது. அன்னையும் மகனும் கிலியோடு கரை திரும்பினர். கிழக்கு லண்டனுக்கு விசேஷ மருந்து பறந்து

மேலிருந்து கீழ்: 1. டோனி கிரெய்க் 2. அண்டர்வுட் 3. பிரியர்லே 4. லீவர் 5. டோல்சார்டு 6. அமிஸ் 7. ராண்டால் 8. கிரைஸ் ஓல்ட்

அடுத்த பக்கம்: 9. வில்லிஸ் 10. கோப் 11. ஆலன் நாட் 12. பார்லோ 13. வுல்மர் 14. செல்வே 15. பிளெச்சர் 16. மில்லர்.








வந்ததால் அவன் காலை அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் தவிர்க்கப்பட்டது! அதன் பிறகு கடல் என்றாலே அன்னைக்கு அலர்ஜி. கடல் நீர் என்றால் டோனிக்கு வெறுப்பு!

டோனி கிரெய்க் இங்கிலாந்து நாட்டை விரும்புகிறார்; தென் ஆப்பிரிக்காவிடமும் அவரது பிரியம் குறையவில்லை. 'எனக்கு இரு தேசங்கள் கிடைத்திருப்பதே அதிர்ஷ்டம்' என்கிறார்.

காப்டன் டோனி கிரெய்க் தமாஷ் பேர்வழி. பம்பாய் கடைசி டெஸ்டில் வாமன உருவ விசுவநாத் 'சதம்' தாண்டினார். அதைக் கண்டதும் இந்த ஆஜானுபாகு விசுவநாத்தைக் குழந்தையைப் போல் தூக்கி வைத்துக் கொண்டு 'தாலாட்டி'ப் பாராட்டினார். ஸ்டேடியம் முழுக்க இந்த அருமையான 'தமாஷ்' காட்சியைக் கண்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தது!


டோனி கிரெய்க் எம். ஸி. ஸி. குழுவில் ஆடுவதற்கு ஒரு சிலர் சட்ட நுணுக்கங்களைக் காட்டித் 'தடை' எழுப்பினர்! டோனியின் தந்தை ஸ்காட்டிஷ்காரர்; அன்னை ஆங்கிலப் பெண்; ஆனால் கிரெய்க் தென் ஆப்பிரிக்க மண்ணில் பிறந்தவர்!


கிரிக்கெட் மன்னருக்கு இந்த ஆட்சேபணை யெல்லாம் தடையாக முடியுமா? உலக கிரிக்கெட் மன்னர் டோனி கிரெய்க் இந்திய மண்ணில் தம் ஆட்டக் குழுவோடு அடியெடுத்து வைத்து விட்டார்!

நியூஸிலாந்து டெஸ்ட், தொடர்ந்து எம். ஸி. ஸி. டெஸ்ட்! இந்தியர்களுக்கு இந்த வருஷம் இரட்டை அதிர்ஷ்டம்!

ஆதாரம்: ''விஸ்டன்''

குண்டுமணி





வாலிப - வயோதிக அன்பர்களே,

வாலிப வயதில் செய்கிற தவறுதல்களே இப்போது உடல் கெட்டு பலவீனமடைந்து ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி, உஷ்ணம், சோம்பல், கைகால் அசதி, பலவீனம், உடல்வலி, தூக்கக் குறைவு, ஆயாசம், களைப்பு, பீதி, வெட்கம், பயம், வெறுப்பு உண்டாகி மன வேதனையும் கஷ்டமும் அடைந்து வாழ்கிறார்கள். 80 வருட அனுபவம் பெற்ற நமது மருந்துகள் சாப்பிட்டுவர புத்துணர்ச்சி பெற்று நிம்மதியான வாழ்க்கை வாழலாம். வி. பி. பி.யில் பெற உடன் எழுதுக.

ஒரு மாத மருந்துகள்

மிக உயர்தரம் செட் ரூ. 90. தங்க பஸ்பம், சிட்டுக்குருவி லேகியம் 60 வேளை – ரூ. 120
30 வேளை ரூ. 60. போஸ்டேஜ் இலவசம். நேரில் ஆலோசனை பெற.

1ந் தேதி நெல்லை : நெல்லை லாட்ஜ், காலை 8 மணி முதல் 12 வரை
1ந் தேதி நாகர்கோவில் : ஸ்ரீ உடுப்பி கிருஷ்ணா பவன், பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை
2ந் தேதி மதுரை : மணீஸ் கபே, காலை 8 மணி முதல் 2 மணி வரை
2ந் தேதி புதுக்கோட்டை : வஸந்தா லாட்ஜ், மாலை 4 மணி முதல் 5-30 மணி வரை
3ந் தேதி காரைக்குடி : A. V. M. P. L. ரெஸ்ட் ஹவுஸ், காலை 9 மணி முதல் 11 மணி வரை
3ந் தேதி பட்டுக்கோட்டை : ஆரியபவன் லாட்ஜ், பிற்பகல் 2 முதல் 3-30 மணி வரை
3ந் தேதி மன்னார்குடி : மன்னை லாட்ஜ், மாலை 4-30 முதல் 6 மணி வரை
4ந் தேதி திருச்சி : ஹோட்டல் அஜந்தா, காலை 8 முதல் 2 மணி வரை
4ந் தேதி கரூர் : பெரியார் லாட்ஜ், மாலை 4 மணி முதல் 5-30 வரை
5ந் தேதி தஞ்சாவூர் : ராஜா ரெஸ்ட் ஹவுஸ், காலை 10 மணி முதல் 12 மணி வரை
5ந் தேதி திருவாரூர் : அபூபக்கர் பில்டிங், மாலை 2 முதல் 4 மணி வரை
5ந் தேதி நாகப்பட்டினம் : தினகர் விலாஸ், மாலை 5 முதல் 6 மணி வரை
6ந் தேதி காரைக்கால் : அசோக் லாட்ஜ், காலை 8 முதல் 10 மணி வரை
6ந் தேதி கும்பகோணம் : தாஜ்மஹால் லாட்ஜ், பகல் 12 மணி முதல் 2 மணி வரை
6ந் தேதி மாயவரம் : காளியாகுடி லாட்ஜ், மாலை 3 மணி முதல் 4-30 மணி வரை
6ந் தேதி சிதம்பரம் : ஜெயராம் லாட்ஜ், மாலை 5-30 மணி முதல் 7 மணி வரை
7ந் தேதி பாண்டிச்சேரி : அருணா லாட்ஜ், காலை 8 மணி முதல் 9-30 மணி வரை
7ந் தேதி கடலூர் N. T. : ஹோட்டல் பிருந்தாவனம், காலை 10-30 மணி முதல் 12 மணி வரை

தியாகராயநகர் விற்பனை நிலையம் : 10/23, பாண்டி பஜார், ராஜகுமாரி தியேட்டர் எதிர்புரம், சென்னை-17

கிளை : **41, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை - 1** போன் : **21448**

வைத்திய திலகம், வைத்தியராஜ் : **டாக்டர் எஸ். காளிமுத்து** R. M. P. (Ind.) V. V. C., A. M. I. H.

பழனி சித்தர் வைத்தியசாலை (Regd.) பழனி - 624 601

போன் : 316, 316A. வீடு : 420. பழைய தாராபுரம் ரோடு, பழனி. தந்தி : "சித்தர்"

சேரமான் காதலி

அத்தியாயம் 5

தியான யோகம்

மனிதர்களின் ஆறாவது அறிவு யானையின் ஐந்தாவது அறிவைவிடக் குறைவானதே. மதம் பிடித்த நிலையில் கூட யானை சில சத்தியங்களுக்குக் கட்டுப்படும். மதம் பிடிக்காத நிலையில் கூடச் சில மனிதர்கள் எதற்கும் கட்டுப்படுவதில்லையே! ''யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்'' என்பார்கள்.

ஆத்திரம் ஊட்டப் பட்டால் மகான்கள்கூட அந்த நிலைக்கு வருவதில்லையா?

ஆனால் திருவஞ்சைக்களத்தின் பட்டத்து யானை நன்றி மிக்கது; ராஜ விசுவாசம் மிக்கது. குலசேகர ஆழ்வார் காலத்திலிருந்து உள்ளது.

அது குட்டியாய் இருக்கும்போது ஆழ்வார் இட்ட பெயர், 'பத்மாவதி' என்பது.

அவ்வளவு பெரிய கூட்டத்தில் சலீமாவைத் தூக்க வேண்டும் போல் அதற்கு ஏன் தோன்றிற்றோ தெரியவில்லை.

ஆயினும் மூன்றும் சேரமான் பெருமானின் கரங்களுக்கு அது கட்டுப்பட்டது.

சலீமாவைக் கையில் தாங்கிய சேரமான் பெருமாள் மீண்டும் ஒரு மந்திரத்தை உச்சரித்தார்; யானை மண்டியிட்டு வணங்கிற்று.

கூட்டம் முழுவதும் ஓடிவிட்ட நிலையில் அது பாகனுக்குக் கட்டுப்பட்டு அவன் பின்னாலேயே சென்றது.

யானை சென்றதும் சலீமாவின் உறவினர்களைத் தேடினார் சேரமான் பெருமாள். ஜெபுன்னிஸா மட்டுமே அங்கு நின்றாள்.

''இந்தப் பெண்ணுக்கு நீங்கள் உறவா?'' என்று கேட்டார் சேரமான்.

வியர்க்க விறுவிறுக்க நின்ற ஜெபுன்னிஸா 'ஆம்' என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தாள்.

''என்னோடு அரண்மனைக்கு வாருங்கள்'' என்றார் அவர்.

அரண்மனை அந்தப்புரத்தில் ஓர் அழகான தனியறையில் சலீமாவைப் படுக்க வைத்தார் சேரமான். அதற்குள் அரண்மனை மருத்துவர்கள் அங்கே கூடினர்.

''நாடித் துடிப்பு தாறுமாறாக இருக்கிறது'' என்றார் ஒருவர்.

''இதயத் துடிப்பு அதிகரித்திருக்கிறது'' என்றார் மற்றொருவர்.

''உயிருக்கு ஒன்றும் ஆபத்தில்லையே?'' என்று கேட்டார் சேரமான்.

''நிச்சயமாக இல்லை'' என்றார் தலைமை மருத்துவர்.

நிம்மதிப் பெருமூச்சு விட்டார் சேரமான்.

ஜெபுன்னிஸாவின் நெஞ்சு ஒருமுறை விம்மித் தாழ்ந்தது.

பகவதி கோவில் திருவிழாவில் ஓர் அராபியப் பெண்ணுக்கு ஆபத்து என்றால், அது வேறு வகையான கசப்பை உண்டுபண்ணி விடுமே என்று கலங்கிய சேரமான் ஆறுதலடைந்து, ஜெபுன்னிஸாவைப் பார்த்து, ''நீங்களும் இங்கேயே இருங்கள். உடல்நிலை முழுக்கச் சீரடைந்ததும் போகலாம்'' என்றார்.

அதன்றியும் அவர்கள் இல்லம் இருக்கும் இடத்தையும் கேட்டு அகமதுவுக்கும், மகமதுவுக்கும் செய்தியனுப்பினார்.

யூஜியானா பிரிந்த நாளிலே இருந்து நிம்மதி இழந்திருந்த சேரமான் மெதுவாகத் தெளிந்த நிலைக்கு வந்து கொண்டிருந்தார். ஓவியம் வரைவதில் அதிகம் அக்கறை இல்லாத அவர், சில நாட்களாக ஓர் ஓவியத்தை வரைந்து கொண்டிருந்தார். அவர் கருத்தில் அது யூஜியானாவின் ஓவியம்.

தலையில் இருந்து தொடங்க வேண்டும் என்ற ஓவியக் கலைக்கு முற்றிலும் மாறாக, பாதத்தில் இருந்தே அவர் ஆரம்பித்திருந்தார். யூஜியானாவின் அங்கங்களில் அவரை மிகவும் கவர்ந்திருந்தது அந்த அழகான பாதங்களே!

ஒரு யூதப் பெண்ணின் ஆடையையே அவர் ஓவியத்தில் அணிந்திருந்தார்.

அன்று அந்த ஓவியத்தின் முகத்தை அவர் வரைய வேண்டும்.

எழுது கோலை அவர் கையில் எடுத்த போது சலீமாவின் அறையிலிருந்தபடி ஜெபுன்னிஸா பாடத் தொடங்கினாள்.

''கார் காலத்து மேகங்களே,
நீர் கொண்டு வாருங்கள்.
இந்தப் புல்லிதழ்கள் மீது அரும்பி இருக்கின்ற பனித்துளிகளைத் துடைத்துக் கொண்டு செல்லுங்கள்.

கண்ணதாசன்

புல்புல் பறவைகளே,

உங்களுக்குப் பொழுது போகவில்லை என்றால், இந்த ஜன்னல் பக்கம் வாருங்கள்.

இந்த இளைய மான் குட்டியைத் தாலாட்டுங்கள்.

ஏழாம் நாள் சந்திரனைப் போல் கறுப்புச் சல்லாத் துணியால் அவள் பாதி முகத்தை மூடிக் கொண்ட போது, வெட்கப்பட்டு மண்ணுக்குள் மறைந்து விட்ட தங்கக் கட்டிகளே,





கொஞ்சம் வெளியே வந்து இவள் கால்களைத் தடவுங்கள்.

அராபிக் கடலில் ஆழ்கடலில் பிடிக்கப் படும் வட்ட வடிவமான பொன் மீன்களே,

இவள் கண்களுக்குக் கண்ணேறு கழிக்கக் கூட்டம் கூட்டமாக வாருங்கள்.

சுவையானதும், தொடுவதற்கு மென்மையானதுமான காபூல் திராக்ஷைகளே,

இவளது வாய்மொழியிலிருந்து இன்னும் சுவைகளைப் பெற்றுக் கொள்ள, இவளைப் பேச வையுங்கள்.

பாரசீகப் பூந்தொட்டிகளில் பதுங்கிக் கிடக்கும் வண்ணப் பூக்களே,

உங்கள் துயரம் எனக்குப் புரிகிறது.

ஒரு கோடி புஷ்பங்களைப் படைத்த இறைவன், ஒரு சலீமாவைப் படைத்து நம்மைப் பழிவாங்கி விட்டானே என்று நீங்கள் எண்ணுவதை நான் அறிவேன்.

சுலைமான் தோட்டத்துக் கனிக் கொத்துகளைப் போல், இங்கே துயில்கொண்டு கிடக்கும் இளம் தளிரைப் பாருங்கள்.

மௌனம் என்ற பரிபாஷையின் மூலம் யார் யாரெல்லாம் இவளோடு பேச முடியுமோ, அவர்களெல்லாம் பேசுங்கள்.

சிதறிக் கிடக்கும் நக்ஷத்திரங்களை மாலையாக்கிக் கொண்டு வாருங்கள்.

செவ்வானத்தைச் சாறு பிழிந்து கண்ணாடிப் பாத்திரங்களில் நிரப்புங்கள்.

உங்கள் சீர்வரிசைகளுக்காகவே ஒரு சிற்பம் இங்கே மூச்சு வாங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த அற்புதப் புஷ்பத்திற்கு எவன் சொந்தக்காரனாகப் போகிறானோ.

அவன் இப்பொழுதே இவளுக்காகப் பிரார்த்திக்கட்டும்.

—ஜெபுன்னிஸா பாடப்பாட, சேரமான் வரைந்து கொண்டிருந்த ஓவியத்தின் முகம் மாறத் தொடங்கியது.

அவர் வரைந்து கொண்டிருந்தது யூஜியானுவை.

யூஜியானுவின் முகத்திற்குக் கறுப்புச் சல்லாத் துணி ஏது?

அவர் மனத்தில் நின்று கொண்ருந்த யூஜியானுவின் முகம் குழம்பத் தொடங்கிற்று.

அடையாளம் தெரியாத ஒரு முகமாக அவள் முகம் உருவெடுத்தது.

ஓவியத்தையே கூர்ந்து நோக்கிய சேரமான் அலுப்போடு தூரிகையைக் கீழே வைத்தார்.

யூஜியானுவை மறுபடியும் மறுபடியும் நினைவுபடுத்திப் பார்த்தார்.

அவளது முகம் வேறொரு முகமும் சேர்ந்து அவருக்குக் குழப்பத்தை ஏற்படுத்தின.

இது என்ன அர்த்தமற்ற குழப்பம்?

சில நேரங்களில் அப்படித்தான்.

நன்றாகப் பழக்கமாகி விட்ட முகங்களே குழப்பமடைந்து காணப்படும்.

மனோதத்துவத்தில் இதை 'உள்ளலை' என்பார்கள்.

கண்களுக்கும், மனத்துக்கும் தொடர்பாக உள்ள ஒரு நரம்பு காரணமில்லாத ஒரு சிறு அதிர்ச்சிக்கு ஆளாகும் போது, கண்களில் பதிந்திருந்த உருவம் தெளிவில்லாது ஆகிவிடும்.

'யூஜியானுவின் முகம் என் நெஞ்சை விட்டு நீங்கியது எப்படி?' என்று சேரமான் கலங்கினார்.

அப்போது பட்டத்து யானையின் பிளிறல் கேட்டது. ஆனால் அதற்கொரு புது அர்த்தத்தை அவர் கண்டுபிடிக்கவில்லை.

சலீமாவின் அறையில் அகமதுவும், மகமதுவும், பாத்திமாவும் நுழைந்து கலங்கி அழுது கொண்டிருந்தார்கள்.

சென்ற இதழ் — ஒரு திருத்தம்

சேரமான் காதலி தொடர்கதையில் ஐம்பத்தெட்டாவது பக்கம், பத்தாவது பாரா இப்படி இருக்க வேண்டும்

''இது எப்படி இருப்பினும் கொடுங்**கோளால்** மதுரை எரிந்தது என்னும் செய்தியைச் சிலப்பதிகாரத்தில் படித்து விட்டு, ''கொடுங்கோளூர்'' என்ற பெயரையும் அது மருவி ''கொடுங்களூர்'' என்றானதையும், பார்க்கும் போது செங்குட்டுவன் கட்டிய கோயில் இதுவே என்ற எண்ணம் வலுப்பெறுகிறது.

ஓவியத்தில் குழப்பம் அடைந்திருந்த சேரமானிடம் ஒரு காவலன் வந்து, ''அந்தப் பெண்ணின் உறவினர்கள் வந்திருக்கிறார்கள்'' என்றான்.

''நல்லது. பத்மாவதியும், சகோதரிகளும் அந்தப் பெண்ணைப் பார்த்தார்களா?'' என்று கேட்டார் சேரமான்.

''ஏற்கனவே பார்த்து விட்டார்கள். வேண்டியவற்றை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்'' என்றான் காவலன்.

சேரமான் சலீமாவின் அறைக்கு வந்தார்.

அகமது குடும்பத்தினர் அராபிய முறையில் அவருக்கு வணக்கம் செலுத்தினார்கள்.

''ஒன்றும் பயமில்லை, கவலை வேண்டாம்'' என்றார் சேரமான்.

''இந்தப் பெண் மயக்கம் தெளிந்து எழும் வரையில் நீங்களும் இங்கேயே தங்கலாம்'' என்றார்.

சலீமாவின் கையைப் பிடித்து நாடி பார்த்தார்.

காய்ச்சல் இருக்கிறதா என்று கழுத்தைத் தொட்டுப் பார்த்தார்.

'ஒன்றும் இல்லை' என்பது போல் தலையை ஆட்டினார்.

பிறகு அங்கிருந்து நேரே தம் பூஜை அறைக்குள் நுழைந்தார்.



பூஜியானுவின் நினைவில் ஏற்பட்ட குழப்பத்தை அவர் தியானத்தின் மூலம் தீர்க்க விரும்பினார்.

அந்தப் பூஜை அறையில் அஷ்ட லெட்சுமிகள் சிலை உண்டு. அதிலே தைரிய லெட்சுமியின் கழுத்தில் மட்டும் மாலை இல்லாமல் இருந்தது. மாலை சாத்துகிறவர் ஏனோ அதை மறந்து விட்டார்.

சேரமான் அதைக் கவனித்தார்.

பூஜை அறை மணியை ஓங்கி அடித்தார். வயதான திருமேனி ஒன்று சிவப் பழமாக வந்து நின்றது. மாலையை மறந்ததற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டது.

அப்போது பத்மாவதியின் அறையிலிருந்து பெருத்த சிரிப்புச் சத்தம் எழுந்தது.

''என்ன அது?'' என்று கேட்டார் சேரமான்.

''ஒன்றுமில்லை...'' என்று இழுத்தது திருமேனி.

''கேட்டு வா!'' என்றார் அவர்.

திருமேனி கேட்டுத் திரும்பியது.

''ஒன்றுமில்லை. மகாராணியாரின் சட்டிலுக்குக் கீழ் ஒரு பெரிய ஆமை இருக்கிறதாம். மகாராணியார் பயந்து விட்டார்களாம். தரங்கிணி தேவியாரும், சகோதரிகளும் அதைச் சொல்லிச் சிரிக்கிறார்கள். அவ்வளவு தான்!'' என்றது திருமேனி.

''நல்லது'' என்று சொன்ன சேரமான் தியானத்தில் ஆழ்ந்தார்.

தியானம் முடிந்து அவர் வெளியே வந்ததும், ''என் மகள் கண் விழித்து விட்டாள்; நாங்கள் விடைபெறுகிறோம்'' என்று எதிரே வந்தார் மகமது.

பின்னாலேயே அவரது குடும்பத்தினர் வந்தார்கள்.

''என்னம்மா பயம் தெளிந்து விட்டதா...?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார் சேரமான்.

''மிகவும் நன்றி'' என்றாள் சலீமா.

அவர்கள் வெளியேறிய போது, அவர்களையே பார்த்துக் கொண்டு உள்ளே நுழைந்தார் நாராயண நம்பூதிரி.

மரத்தினால் ஆன காலணியை அவர் அணிந்திருந்தார். அது தடுக்கிக் கீழே விழப்போன அவர், சுவரின் மேல் சாய்ந்து கொண்டார்.

''நான் கை கொடுக்கட்டுமா...?'' என்று கேட்டார் சேரமான்.

''ஒரு கட்டத்தில் நீங்கள், மறு கட்டத்தில் நான்!'' என்றார் நாராயண நம்பூதிரி.

(தொடரும்)


வாழ்த்துகிறோம்



உலக அரங்கமான ஐ. நா. சபையில் பாடுவதற்கு ஸ்ரீமதி எம். எஸ். அழைக்கப் பட்டபோது உலக அமைதியை வலியுறுத்தும் ஆங்கிலப் பாடல் ஒன்றை ராஜாஜி யாத்துத் தந்தார். அற்புதமான அந்தக் கவிதைக்கு மெய்சிலிர்க்கும் வகையில் இசை அமைத்தவர் திரு ஹான்டல் மான்யுவல். அதைப் பாடக் கேட்ட பின்னர் உலக மகாசபையில் கூடியிருந்த பேரறிஞர்கள் செய்த கரகோஷத்தில் அந்த அரங்கமே அதிர்ந்தது.

அகில இந்திய ரேடியோவில் மேற்கத்திய இசைத் தயாரிப்பாளராகச் சிறப்புப் பணியாற்றி வரும் திரு ஹான்டல் மான்யுவல் அவர்களுக்கு இந்தக் கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி ஒரு பெரிய கௌரவம் கிட்டியிருக்கிறது. பிரிட்டனில் கேம்பிரிட்ஜிலுள்ள சர்வ தேச வாழ்க்கை வரலாற்றுக் கேந்திரம், திரு ஹான்டல் மான்யுவலுக்கு டிப்ளோமா வழங்கிச் சிறப்பித்திருக்கிறது. பியானோ, ஆர்கன் ஆகியன வாசிப்பவராகவும் மேற்கத்திய இசை நடத்துனராகவும் அவர் ஆற்றியுள்ள சிறப்புப் பணிகளைப் பாராட்டி இந்த அரிய கௌரவம் அவருக்கு வழங்கப் பட்டுள்ளது. 'இசை உலகில் யார் எவர்' என்ற சர்வ தேச நூலிலும் இவரது பெயர் பதிவாகியுள்ளது.

இந்த அரிய பெருமைகளைப் பெற்றுள்ள திரு ஹான்டல் மான்யுவலுக்குப் புத்தாண்டில் மேலும் பல சிறப்புக்கள் வந்தடைய வேணுமென்று இந்தக் கிறிஸ்துமஸ் திருநாளில் வாழ்த்துகிறோம்.


படிப்படியாக உயர்ந்து
முன்னேற்றமடைந்த அவருக்குத் தெரியும்..



சம்பிரதாயமான ஆள் பலத்தால் கரி எடுப்பதும்....

சிரிமிரி சுரங்கம்; நிலக்கரி தரங்கம்!

"**எ**ன்ணெய் இடத்தை நிலக்கரி பிடித்துக் கொள்ளுமாம்!" என்றது நிலக்கரி என்ஜின்.

"அது நடக்கக் கூடிய காரியமா? எங்கள் வேகத்துக்கு உங்களால் ஈடு கொடுக்க முடியுமா?" கொக்கரித்தது டீஸல் என்ஜின்.

"உன்னுடைய வேகம் காரணமாக உனக்கு மவுசு அதிகம் இருக்கலாம். ஆனால் நீ குடிக்கும் எண்ணெய்க்கு ஆகும் அந்நியச் செலாவணியை நினைத்தால் குலைநடுக்கம் எடுக்கிறது" என்றது நிலக்கரி என்ஜின்.

"அதற்கென்ன பண்ணுவது? போக்குவரத்தைத் துரிதப்படுத்தித் தங்கு தடையின்றிப் பண்டங்கள் தேசத்தின் பல பாகங்களுக்குச் சென்று வரவும் உதவுகிறேனே, அது முக்கியமில்லையா?"

"முக்கியம்தான். ஆனால் வேறு பல துறைகளில் என்ணெயின் இடத்தை நிலக்கரி தாராளமாக எந்தவிதமான சிரமமும் ஏற்படுத்தாமல் பிடித்துக் கொள்ளலாம்" என்றது நிலக்கரி என்ஜின்.

"அங்கே போய்ப் பேசு" என்று டீஸல் என்ஜின் கூறிவிட்டு 'வொய்ய்' என்று கர்வத்துடன் ஹாரன் ஒலி எழுப்பி விரைந்தது.

பல்வேறு துறைகளிலும் என்ணெய்க்குப் பதில் நிலக்கரி இப்போது எரிபொருளாகப் பயன்படுகிறது. நிலக்கரிக்கு ஏற்பட்டுள்ள இந்தப் புதிய மவுசு காரணமாக நிலக்கரிச் சுரங்கம் ஒன்றுக்கு விஜயம் செய்து பார்க்க வேண்டும் என்று தோன்றியது. இச்சமயம் சிரிமிரி நிலக்கரிப் பிரிவு, பத்திரிகையாளருக்கு அழைப்பு அனுப்பவே மகிழ்ச்சியுடன் போய்ச் சேர்ந்தேன்.


இரண்டு மணிக்குப் பிலாஸ்பூரிலிருந்து ஒரு பஸ்ஸில் பத்திரிகைப் பிரதிநிதிகள் அலே வரும் சிரிமிரி நிலக்கரிச் சுரங்கத்துக்குப் புறப்பட்டனர். காட்டு வழியில் பஸ் முன்னேறிக் கொண்டிருந்தது. பயங்கரமான மேடுகளிலும் கிடுகிடு பள்ளங்களிலும் பல இடைஞ்சலான வளைவுகளிலும் பஸ் முன்னேறியது.

இரவு ஏழரை மணிக்குச் சிரிமிரி அடைய இன்னும் முப்பது மைல்தான் இருக்கும் என்று நினைத்து மகிழ்ந்தபோது, வழியில் ஒரு காட்டாறு குறுக்கிட்டது. முன்னே செல்வதா பின்வாங்க வேண்டுமா என்பது பிரச்னை.

"இந்தக் காட்டில் புலிகள், கரடிகள் வருவது சர்வ சாதாரணம்!" என்று பி.ஆர்.ஓ. கபூர் பயமுறுத்தினார்.

"ஸார்! அந்தக் காலத்தில் சிரிமிரி பக்கம் நிலக்கரிச் சுரங்கம் இருக்கிறதா என்று ஆராய டாட்டாவுக்கு பிரிட்டிஷார் லைசென்ஸ் வழங்கியிருந்தனர். டாட்டாதான் இந்தப்

■ சிரிமிரி சுரங்கங்களுக்குள் சென்று கரிச் சுமையுடன் வெளி வரும் ரயில் பெட்டிகள்.



...நவீன இயந்திரங்கள் உதவியால் கரி எடுப்பதும்.



பகுதி ஜாகிர்தார். டாட்டா பதினைந்து யானைகளில் ஆட்களை அனுப்பி வைத்தார். இந்தப் பகுதிகளை யானைகளில் வந்தடைந்து ஆராய அவர்களுக்கு எட்டு மாதங்களாயிற்று!'' என்றார் சிரிமிரி சுரங்க அதிகாரி ஒருவர். இதைக் கேட்டுப் பத்திரிகையாளர்களுக்கும் வீரம் பிறந்தது. பஸ்ஸை விட்டு இறங்கி நடந்து ஆற்றைக் கடந்தனர். பஸ் ஓரமாக நின்று இந்தக் காட்சியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது!

முட்டளவு தண்ணீரைக் கடந்து பத்திரிகைப் பிரதிநிதிகள் அக்கரையை அடைந்ததும் டிரைவர் சாமர்த்தியமாகப் பஸ்ஸை நீரில் மாட்டிக் கொள்ளாமல் எதிர்க் கரைக்குக் கொண்டு சேர்த்தார்.

இரவு ஒன்பதரை மணி. சிரிமிரி நிலக்கரிச் சுரங்கம் வந்தடைந்தோம். ''உங்களை இப்பொழுது சிரிமிரி பாதாளச் சுரங்கத்துக்கு நிலக்கரி 'ஆபரேஷனை'க் காண அழைத்துச் செல்லப் போகிறோம்!'' என்றார் சிரிமிரி நிலக்கரிச் சுரங்க ஏரியா மானேஜர் டோஷி

''என் மனைவி சஸநல்லா நிலக்கரிச் சுரங்க விபத்துக்களைப் பற்றிப் பத்திரிகையில் படித்து விட்டிருக்கிறாள். நானும் படித்திருக்கிறேன்!'' என்றார் ஒருவர் தயக்கத்துடன். இருந்தாலும் அவ[ரும்] மற்றவர்களுடன் கம் பூட்ஸ், சுரங்கத் தொப்[பி] விளக்குகளை அணிந்து கொண்டு முன்னேறினார்.

இரண்டரை மணி நேரம் சிறு ரயில் பெட்டியில் பத்திரிகைப் பிரதிநிதிகள் இரண்டரைக் கிலோமீட்டர் தூரம் சுரங்கத்துக்குள் வலம் வந்தனர். உள்ளே நுழையுமிடத்தில் சுரங்கத் தொழிலாளிகளுக்கு எச்சரிக்கை செய்யும் 'வால் போஸ்டர்'கள் காணப்பட்டன.


''நிலக்கரிச் சுரங்கத்தினுள் என்னென்ன விபத்துக்கள் நேரிடும்? அவற்றைத் தவிர்க்க என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

ஃபி.எஸ்.மணி

''நிலச்சரிவு ஏற்படலாம். அந்த மாதிரி ஏற்படாதிருக்கத்தான் இதோ பல மரக் கட்டைகள் முட்டுக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அபாயத்தைத் தவிர்க்க இந்த மரக் கட்டைகளுக்குப் பதில் இரும்புத் தூண்களை முட்டுக் கொடுக்கவிருக்கிறோம். நிலக்கரித் தூள் இந்தப் பாதாள வழியில் படிந்தால், தவறி நெருப்புப் பற்றிவிட்டால் நிலக்கரிச் சுரங்கம் தீவிபத்துக்குள்ளாகலாம். ஆகவே இந்தப் பாதாள வழி முழுவதும் மணல் (Sand dust) தெளிக்கிறோம். அதன் மேல் சுண்ணாம்பு படிய வைத்தால் நெருப்பு அணுகாது! வழி நெடுக டியூப்லைட் வெளிச்சம் கால் இடறி விழாமல் இருக்க உதவுகிறது'' என்று விவரித்தார் டோஷி. ஆபத்துத் தவிர்ப்பு [நட]வடிக்கை ஆறுதல் தருகிறது.

■ தொழிலாளருக்கான குடியிருப்பு வசதிகள்.





இரண்டரை மணி நேரம் நிலக்கரிப் பாதாளச் சுரங்கத்தில் சுற்றி வருவது 'திரில்லிங்' அனுபவம். ஒரு நாளைக்கு ஒரு தரம் சுரங்கத் தொழிலாளி நிலக்கரிச் சுரங்கத்தினுள் நுழைந்தால் அவருக்குப் பதினைந்து ரூபாய் அதிக பட்சம் கிடைக்கும்.

நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளியான டிரைவரிடம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்த போது, ''எனக்கு இரண்டு குழந்தைகள். ஒவ்வொரு நாளும் என் மனைவி கவலையோடு என்னை எதிர்பார்த்துக் காத்திருப்பாள். அவள் தாலி பலம் என்னைக் காத்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நாளும் உள்ளே நுழையும்போது தெய்வத்தை வணங்கிவிட்டு வருகி[றே]ன்!'' என்றார்.

தருமம் தவறேல்!

தரும வியாதர் கதையே கீதையின் உபதேசமும். எல்லாப் பொருள்களிலும் ஈசன் இருப்பதால் எந்தத் தொழிலும் அவன் தொழிலே. சமுதாய அமைப்பினாலோ விசேஷ சந்தர்ப்பத்தின் காரணமாகவோ அல்லது தன் முயற்சியின் பயனாகவோ மனிதனுக்குத் தொழில்கள் ஏற்படுகின்றன. எந்தத் தொழிலையும் தருமம் தவறாமல் சரிவரச் செய்து வந்தால் அதுவே பகவானை உபாசித்தபடியாகும். கசாப்புக்கடை வேலையும் இதில் சேரும் என்கிற இந்தப் பிரசித்தமான கதையை மார்க்கண்டேய ரிஷி சொல்லித் தரும புத்திரன் கேட்டதாக மகாபாரதத்தில் வேத வியாசர் அற்புதமாய்ச் சேர்த்திருக்கிறார். —வியாசர் விருந்து

சிறு ரயில் பெட்டியில் பயணம் செய்கையில் அடிக்கடி சுரங்க அதிகாரி 'தலை பத்திரம்!' (Mind your head) என்று எச்சரித்தார்! அந்த ரயில் பெட்டி ஓடுவதற்கான அபாயகரமான 'மின் ஓட்டம்' செல்லும் கம்பி தலைக்கு மேல் அமைந்திருக்கிறது. அந்தக் கம்பியில் தலை தட்டினால் உயிருக்கே ஆபத்து. எனவேதான் எச்சரிக்கை. நிலக்கரிச் சுரங்க ரயில் பெட்டிப் பயணத்தில் பத்திரிகைப் பிரதிநிதிகள் குனிந்த தலை நிமிரவே யில்லை!

பொதுத் துறையில் Coal India Ltd. ஓராண்டுக்கு முன் தோன்றி, சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கம் தவிர மற்ற நிலக்கரிச் சுரங்கங்களை ஒருங்கிணைத்து எண்ணெய் இடத்தை நிலக்கரி பிடிக்கப் பாடுபட்டு வருகிறது. நிலக்கரிச் சுரங்கங்களிலும், காரியாலயங்களிலும் மொத்தம் 6,05,488 பேர் பணி புரிகிறார்கள். நமது தேசத்தின் நிலக்கரி வயல்கள் 100 பில்லியன் டன்களை வைத்துக் கொண்டு அடுத்த 150 வருஷங்களுக்கு எண்ணெய்ப் பிரச்னையைச் சமாளிக்கக் காத்திருக்கின்றன! நிலக்கரிப் படிமங்கள் அலை அலையாகப் பூமிக்கடியில் மாபெரும் கடலாக அமைந்துள்ளன. எடுத்துப் பயன்படுத்துவது நமது பொறுப்பு.

பம்பாயில் இருபது நூற்பு ஆலைகள் எண்ணெய்க்குப் பதில் நிலக்கரி பயன்படுத்த முன்வந்துள்ளன. மேற்கத்திய நிலக்கரி நிறுவனம் இந்த மாறுதலுக்குத் தேவைப்படும் 'Mechanical Stokers' களை லாப நோக்கமின்றித் தயாரித்துத் தரும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழ் நாட்டில் இருபது காப்பி, தேயிலைத் தோட்டங்களில் இயந்திரங்களை ஓட்ட எண்ணெய்க்குப் பதில் இப்போது நிலக்கரி பயன்படுத்துகின்றனர். இப்படிப் பல்வேறு துறைகளில் எண்ணெயிலிருந்து நிலக்கரிக்கு மாறுவதால் இந்தியாவுக்கு மிச்சமாகும் அன்னியச் செலாவணி 90 கோடி ரூபாய்.

"சிரிமிரி நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் குடும்ப நலனிலும், கல்வி நலனிலும் இங்குள்ள மகளிர் மன்றம் மிகுந்த கவனம் செலுத்துகின்றது. ஸ்ரீமதி மெஹ்ரா தலைவி, ஸ்ரீமதி டோஷி காரியதரிசி, இங்குள்ள மகளிர் மன்றத்தார் பொழுதுபோக்கு விஷயங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்" என்றார் சிரிமிரி நிலக்கரிச் சுரங்க ஜெனரல் மானேஜர் மெஹ்ரா.

சிரிமிரி நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளிகளின் வீட்டுப் பிரச்னைகளில் இன்னும் கவனம் செலுத்த வேண்டும் என்பது தொழிலாளர்கள் கோரிக்கை. மேற்கத்திய நிலக்கரி நிறுவனத்தில் தொழிலாளர் டைரக்டர்கள் இருக்கின்றனர். ஆலோசனை வழங்குகின்றனர்.


இல்லத்தரசி முதல் தொழிலதிபர் வரை பலரும் வசதி மிக்க எண்ணெயை விட்டு நிலக்கரிக்கு மாறத் தயங்கலாம். ஆனால் தேச பக்தி இந்தத் தயக்கத்தை வெற்றி கொள்ள வேண்டும்.

இயேசுபாலனுக்கு உதவிய சிலந்திப் பூச்சி!

யோசேப்பும் கன்னிமரியாளும் பாலன் இயேசுவோடு ஏரோது மன்னனுக்குப் பயந்து எகிப்துக்கு ஓடிப் போகையில், வழியில் மரியாளுக்குக் களைப்பு ஏற்பட்டுவிட்டது.

தங்குவதற்கு இடம் தேடினார்கள். பக்கத்தில் காணப்பட்ட ஒரு குகையினுள் சென்று இரவைக் கழிக்கத் தீர்மானித்தார்கள்.

குகையின் வாசலில் ஒரு சிலந்திப் பூச்சி இருந்தது. அது இயேசு பாலனின் திரு முகத்தைக் கண்டு, அவரைக் குளிர் தாக்காமல் இருக்க ஏதாவது செய்ய வேண்டும் என்று திட்டம் இட்டது!



பின், குகையின் வாசலை மூடி ஒரு பெரிய வலை பின்னி முடித்தது. அந்த வலையின் மீது பனித்துளிகள் விழுந்து அது ஒரு திரை போலாகி விட்டது!

சிறிது நேரம் கழித்து, இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் குழந்தைகளைக் கொன்று குவித்துக் கொண்டிருந்த ஏரோது மன்னனின் ஆட்கள் அந்தக் குகையைச் சோதனை போட வந்தார்கள்.

வாசலில் பின்னப்பட்டிருந்த சிலந்தி வலையைக் கண்டு, 'சிலந்தி வலை அறுபடாமல் இருக்கிறதே! எனவே உள்ளே யாரும் போயிருக்க நியாயம் இல்லை' என்று முடிவு செய்து அங்கிருந்து போய்விட்டார்கள்!

சிலந்திப் பூச்சிக்கு எல்லையில்லா மகிழ்ச்சி!

-- என். எஸ். நாதன்

கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்

கல்கி நேயர்களுக்குக் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள். ஏசு பிறந்த புனித தினத்தில் நமது உள்ளங்களில் எல்லாம் எப்போதும் தூய எண்ணங்களே மலரப் பிரார்த்திப்போம். மேலட்டையில் கன்னி மரியாள், ஏசு பாலன் சிலை வடிவங்களை வண்ணப் படமெடுத்து வழங்குபவர்: **இனிப் பாணர்ஜி.**

கொல்லாமல் விடமாட்டேன்!

கே. எஸ். வாசன்



மழை தூறிக் கொண்டிருக்கும் இரவு!

சிலுசிலுவென்று குளிர் காற்று வீசிக் கொண்டிருந்தது. முக்கால்வாசி வெட்டப் பட்ட ரொட்டித் துண்டைப் போல் தோன் றிய நிலவு, மேகங்களுடன் கண்ணாமூச்சி விளை யாடிக் கொண்டிருந்தது. நீலகிரி தனது அழகை இருட்டுப் போர்வைக்குள் மறைத்துக் கொண்டது.

இரவு நேர அரக்கன்களாக மலைகள் தூங்கிக் கொண்டிருந்தன. ஆங்காங்கே மின்னிக் கொண்டிருக்கும் விளக்குகளின் ஒளி யைப் பனி மூட்டம் மங்கலாக்கிக் கொண் டிருந்தது. குன்னூர்—குந்தா சாலையில் அந்தக் கார் சென்று கொண்டிருந்தது. காரை ஓட்டிச் சென்ற இளைஞன் சோமுவின் முகம் சலனமற்று இருந்தது.

அவன் அருகே அமர்ந்திருந்தவன் கழுத்து வரையில் மறைக்கும் ஸ்வெட்டர் அணிந்திருந் தான். எதற்கும் அஞ்சாதவனைப் போல் தோன்றினான். முகத்தில் கடுமை படர்ந் திருந்தது. அவனுக்கு வயது முப்பது இருக்க லாம்.

காரின் பின் இருக்கையில் வயதான மனிதர் ஒருவர் படுத்திருந்தார். உடல் வற்றிய நிலையில் கண்களை மூடியபடியே கிடந்தார். காரை ஓட்டி வந்த சோமு அமைதியைக் கலைத்தான்: ''வீரப்பன் டாக்டர் சொன்ன தைக் கேட்டியா?''

''ம்... ம்...'' கரகரத்தான் வீரப்பன்.

''என் சித்தப்பாவுக்கு இதயம் ரொம்ப வீக்காயிடுச்சாம்! இலேசான வீக்கம்கூட இருக்காம்!''

''ஆமாம், அப்படித்தான் டாக்டர் சொன்னார்!''

பின்புறம் படுத்திருந்த, தனது சித்தப்பா ராமநாதனை ஒரு விநாடி திரும்பிப் பார்த்து விட்டுச் சாலையைக் கவனித்துக் காரை ஓட்டி னான் சோமு.

''பாவம், சித்தப்பா! தம் மனைவியைப் பத்து வருஷங்களுக்கு முன்பே இழந்துவிட் டார். பிள்ளைகளே இல்லை என்பதால் என்னை அழைத்து வந்து வைத்திருக்கிறார்.''

''அது சரி! ஏன் இப்படிப் படுத்துக் கிடக் கிறார்?'' என்றான் வீரப்பன்.

''உடல் வலி தெரியாமல் இருக்கவும், தூங்குவதற்காகவும் டாக்டர் ஊசி போட் டிருக்கிறார். நாம் எஸ்டேட் போவதற்குள் விழித்துக் கொள்வார் என்று டாக்டர் சொன் னார்'' என்றான் சோமு.

ராமநாதன் ஓர் எஸ்டேட் சொந்தக்காரர். குன்னூருக்கும் குந்தாவுக்கும் இடையில் அவரது கோல்டன் எஸ்டேட் உள்ளது. இன்று காலையிலிருந்தே நெஞ்சு வலியால் அவதிப் பட்டார். எனவே அவரைக் காரில் குன்னூ ருக்கு அழைத்து வந்தான் சோமு. குன்னூ ரில் டாக்டர் பரிசோதித்துவிட்டு ஊசி போட்டார்.

குன்னூரில் தனது பழைய நண்பனான வீரப்பனைச் சந்தித்தான் சோமு. வீரப்பன் பள்ளிப் பருவத்திலேயே கெட்டுப் போன வன். சிறைக்குப் போவதும் வருவதும் அவ னுக்குப் பொழுது போக்காகவே இருந்தது. அவனைப் பல முறை சந்தித்த போதிலும் கண்டும் காணாதது போல் போய்விடுவான் சோமு. ஆனால் இம்முறை குன்னூர் பஸ் நிலை யத்தில் வீரப்பனைக் கண்டபோது தானாகவே வலியச் சென்று பேசினான் சோமு. தன் னுடன் அவன் கோல்டன் எஸ்டேட்டுக்கு வரவேண்டும் என்று வற்புறுத்தினான். இது வீரப்பனுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. எனினும், மறுப்புக் கூறாமல் சோமுவுடன் ராமநாதன் இருந்த டாக்டர் வீட்டுக்குப் போனான், வீரப்பன்.

''சித்தப்பாவுக்கு எந்த அதிர்ச்சியும் ஏற்படக் கூடாதாம்! இதயம் ரொம்ப வீக்காக இருக்கிறதனாலே ஏதாவது சிறு அதிர்ச்சி ஏற்பட்டாலும் உயிருக்கே ஆபத் தாக முடியுமாம்'' என்றான் சோமு.

பளீரென்று ஒரு மின்னல் அடித்தது.

மழையில் நனைந்த தார் ரோடு விரிக்கப் பட்ட கறுப்புக் கம்பளி போல் தோன்றி மறைந்தது.

மர்மச் சிறுகதைப் போட்டி



இரண்டாம் பரிசுக்கதை

'எந்த அதிர்ச்சியும் ஏற்படக் கூடாது'—டாக்டர் கூறிய வார்த்தைகள் சோமுவின்காதில் ஒலித்துக் கொண்டேயிருந்தன.

''அது சரி, என்னையும் ஏன் எஸ்டேட்டுக்கு அழைச்சிட்டுப் போறே?''என்று கேட்டான் வீரப்பன்.

கார் காட்டேரி எஸ்டேட்டைத் தாண்டிச் கோலக்கொம்பை ரோட்டில் திரும்பியது. வண்டி மெதுவாகவே சென்றது. மழை பெய்து கொண்டிருந்ததாலும், காற்று வீசியதாலும், குளிர் உடலைத் துளைத்தது.

மீண்டும் கேட்டான் வீரப்பன். ''என்னை எதுக்காக எஸ்டேட்டுக்கு வரச் சொல்றே?''

''அதுவா? முக்கியமான வேலையாகத்தான். எஸ்டேட் வரட்டும்,சொல்கிறேன்'' என்றபடி அர்த்தபுஷ்டியுடன் பின்புறம் படுத்திருந்த தனது சித்தப்பாவைப் பார்த்தான் சோமு.

'சித்தப்பா!... உங்கள் கடைசிக் காலம் நெருங்கி விட்டது! சொத்துக்களையெல்லாம் எனக்குத் தருவதாகப்பேர்பண்ணிட்டுமுக்கால் பங்கைக் கோவில் பேரிலா எழுதப் போறீங்க?' என்று சோமுவின் மனம் கறுவியது.

கோல்டன் எஸ்டேட்டை நெருங்கி விட்டது கார். மெல்லக் கண் விழித்தார் ராமநாதன்.

''என்னப்பா சோமு, நம்ம எஸ்டேட் வந்துடுச்சா?'' என்று கேட்டார் ராமநாதன்.

''ஆச்சு சித்தப்பா! இன்னும் இரண்டே ஹேர் பின் பெண்டுதான் அப்புறம் எஸ்டேட் வந்து விடும். உடம்பு எப்படியிருக்கு? பரவாயில்லையா?''

பொய்யான அக்கறை காட்டினான் சோமு.

''பரவாயில்லே. கொஞ்சம் வலி குறைஞ்சிருச்சு... இது யாரு உன் பக்கத்திலே?'' என்று வீரப்பனைச் சுட்டிக் காட்டிக் கேட்டார் ராமநாதன்.

''என் நண்பன் வீரப்பன்னு பேர். குன்னூரிலே சந்திச்சேன். என்கூட ஒரு நாள் தங்கிவிட்டுப் போடான்னு சொல்லி அழைச்சிக்கிட்டு வந்தேன்.''

''அப்படியா! தம்பி உனக்கு எந்த ஊர்?'' என்று கேட்டார் ராமநாதன்.

''கோயமுத்தூர்'' என்றான் வீரப்பன்.

''ரொம்பச் சந்தோஷம்!''

பளிரென்று விளக்குகள் எரியும் பங்களாவின் அருகே காரை நிறுத்தினான் சோமு. வேகமாகக் கீழே இறங்கிக் காரின் கதவைத் திறந்தான் சோமு. கைத்தாங்கலாக ராமநாதனை அழைத்துச் சென்றான் வீரப்பன்.

''வேலைக்காரர்கள் யாருமே இல்லையா?'' என்று கேட்டார்.

''இல்லே சித்தப்பா! கோலக்கொம்பையில் ஏதோ திருவிழாவாம். எல்லாரும் போய் விட்டாங்க. காலையிலே வந்துடுவாங்க'' என்றான் சோமு.

மேல் மாடியிலிருந்த படுக்கை அறைக்கு ராமநாதனை இருவரும் அழைத்துச் சென்றனர். களைப்பாக இருந்த அவரும் கட்டிலில்



''நம்பினால் நம்பு; நம்பாவிட்டால் போ! ஒரு தடவை டேத் பேஸ்ட் வாங்கினால் ஐந்து வருஷம் வரும் எனக்கு!''

'' நம்புகிறேன்.''

படுத்துக் கனத்த கம்பளியைப் போர்த்திக் கொண்டார்.

இருவரும் கீழே வந்தனர். 'வார்ம் ஹீட்டரின்' அருகே இருந்த நாற்காலியில் அமர்ந்தான் சோமு. குளிருக்கு இதமாக இருந்தது. அவன் அருகே வந்து நின்றான் வீரப்பன்.

''வீரப்பன்! நான் சொல்கிறதைக் கவனமாகக் கேள். நான் சொல்கிறபடி நடந்து கொண்டாயானால் உனக்கு ஐயாயிரம் ரூபாய் கிடைக்கும்'' என்றான் சோமு.

''ஐயாயிரமா...? உன் பேச்சு எனக்குப் புதிராக இருக்கு சோமு!''

''இதிலே புதிர் ஒன்றுமேயில்லே. என்னோட சித்தப்பாவுக்கு நான்தான் வாரிசு. அவர் இறந்து விட்டால் இந்த எஸ்டேட், இந்தப் பங்களா எல்லாம் எனக்குத்தான். இது தெரியுமில்லே உனக்கு?''

''ம்...ம்'' தலையாட்டினான் வீரப்பன்.

''ஆனால் அவரோ இந்தச் சொத்திலே கால்வாசியை மட்டும் தான் எனக்கு எழுதி வைக்கப் போறாராம். மீதியைக் கோயில்களுக்குத் தானமா எழுதப் போறதா என் கிட்டேயே சொன்னார்.''

''அதுக்கு நீ என்ன செய்ய முடியும்?''

''அப்படி ஓர் உயில் எழுதறதற்கு முந்தியே அவர் உயிர் போயிடுச்சுன்னா எல்லாச் சொத்தும் எனக்குத்தானே சேரும்?'' என்றபடி கைகளை ஹீட்டரின் அருகே விரித்துக் காட்டினான் சோமு. விரல்களின் நிழல் வீரப்பனின் முகத்தில் கோலமிட்டது. ''உயிர் போறதா... அது எப்படி முடியும்?'' என்று கேட்டான் வீரப்பன்.

''அதற்குத்தானே உன்னை அழைச்சிட்டு வந்தேன்'' என்றான் சோமு.

''என்ன, கொலை செய்யறதா..? என்னாலே ஆகாது... நான் இதுவரையில் திருடியிருக்கேன்... கொள்ளையடிச்சிருக்கேன்... ஆனா... கொலை செய்யறதுன்னா...!'' என்று இழுத்தான் வீரப்பன்.

வீரப்பனின் கையைப் பிடித்திழுத்து அருகிலிருந்த நாற்காலியில் அமர்த்தினான் சோமு.

''உன்னை யார் கொலை பண்ணச் சொன்னது? டாக்டர் என்ன சொன்னார்ங்கறதை யோசிச்சுப் பார்!... சின்ன அதிர்ச்சி ஏற்பட்டால் கூடச் சித்தப்பாவின் உயிர் போயிடும்னு தானே சொன்னார்?'' என்றான் சோமு.

''ஆமா... அது... அதுவந்து...'' விழித்தான் வீரப்பன்.

''புரியலையா...'' என்று புன்முறுவல் பூத்தபடி கூறினான் சோமு: ''நான் இப்பவே இந்த இடத்தை விட்டுப் போயிடறேன். வேலைக்காரர்களும் இல்லே. நீயும் சித்தப்பாவும் மட்டும்தான். உன் விரல் நுனி கூட அவர் மீது பட வேண்டியதில்லே. மிரட்டி... உருட்டி ... எப்படியாவது அதிர்ச்சி ஏற்படும்படி பண்ணு. உயிர் பிரிந்து விடும்.... காலையிலே டாக்டரை அழைச்சுக்கிட்டு நான் வர்றேன். இயற்கையான மரணம்னு அவரே அத்தாட்சி தருவார். நான் சொன்னபடி உனக்குப் பணமும் கிடைக்கும்....!''

இதைக் கேட்டவுடன் பிரமித்து விட்டான் வீரப்பன். சிறையில் பல கேடிகளையும், கொலைகாரர்களையும் சந்தித்திருக்கிறான். பல கொலைக் கதைகளையும் கேட்டிருக்கிறான். ஆனால் இப்படியும் கொலையா...?

''என்ன யோசிக்கிறாய்?'' என்றான் சோமு.

''சரி சோமு ... நீ புறப்படு... காலையில் டாக்டருடன் வந்து விடு'' என்று நம்பிக்கையுடன் சொன்னான் வீரப்பன்.

மாடிப்படியேறிச் சென்றான் சோமு.

''சித்தப்பா! நான் குன்னூர் வரைக்கும் போயிட்டு வந்திடறேன். டாக்டர் கொடுத்த மருந்துப் பாட்டிலை அங்கேயே மறந்து வைச்சிட்டு வந்திட்டேன்'' என்றான் சோமு.

சோர்வுடன் காணப்பட்டார் ராமநாதன். ''இந்த ராத்திரி நேரத்திலேயா? காற்றும் மழையும் வேறே பலமாக இருக்கு. காலையிலே போகலாம்'' என்று கூறினார் ராமநாதன். பாவம், தமது உயிருக்கே உலை வைப்பவன் மீது உயிரை வைத்திருந்தார் அவர்.

''இல்லே! சித்தப்பா! திடீரென்று உங்களுக்கு மருந்து தேவைப்பட்டால் என்ன செய்யறது? உங்களை வீரப்பன் கவனிச்சுக்குவான். நான் சீக்கிரமா வந்து விடுவேன்'' என்று கூறி விட்டுப் படியிறங்கினான் சோமு.

ராமநாதனின் படுக்கையறை.

ரேடியம் பூசப்பட்ட அலாரம் கடிகாரம் 'டிக்டிக்'கென்று ஒலித்துக் கொண்டிருந்தது. குளிருக்குக் கம்பளியைக் கழுத்து வரை மூடிக் கொண்டு தலைக்கு ஒரு மப்ளரைச் சுற்றிக் கொண்டு இருந்தார் ராமநாதன். அவருக்கு அரைத் தூக்கம்.

யாரோ கதவை ஓங்கி அறைந்து திறந்த ஒலியைக் கேட்டுத் திடுக்கிட்டுக் கண் விழித்தார் ராமநாதன்.

கண்களில் கனல் பறக்க நின்றிருந்தான் வீரப்பன். நெடிய அவனது தோற்றம் காலப் பேயைப் போலத் தோன்றியது.

அவனைக் கண்டதும் கட்டிலில் எழுந்து அமர்ந்தார் ராமநாதன். ''வீரப்பன் என்ன இது ... உனக்கு என்ன வேண்டும்?'' என்று பீதியுடன் கேட்டார்.

பயங்கரமாக நகைத்தான் வீரப்பன். ''எனக்குப் பணம் வேண்டும். அதை அடைவதற்காக உங்க உயிர் வேண்டும்!''


"நேர்த்தியாக மணக்கும்
லியூர் ஷாம்பூ
நேரமெல்லாம் மணக்கும்
அவர் நெஞ்சிலே"
என்கிறார் அனிதா ராபின்ஸ்—எக்ஸ்போர்ட் ஹவுஸ் நிர்வாகி.
நாலு வகையான புதிய லியூர் ஷாம்பூவிலே எதை எடுத்தாலும் அதற்குத் தனிமணம் உண்டு. சிகை எந்த வகையானாலும் சீராட்டும் அருமையிலே, ஆகா. உங்கள் துணைவர் மனம் உங்கள் கூந்தலிலே சரணம்—தலைக்கேறிய உன்னதப் புதுமணம்.
என் கேசத்திற்கு வசீகா-மூட்டுது லியூர். சுகந்தமான சுத்தமுடன் அதை சொகுசாக வைத்திருக்குது லியூர் ஷாம்பூ.
Lure
Creative Unit-A 2352 -Tam

''என்ன சொல்லறே நீ...? சோமு வீட்டில் இல்லாத போது என்ன இது....?''

பேய்ச் சிரிப்புச் சிரித்தான் வீரப்பன்.

''சோமு வேண்டுமென்றுதான் வெளியிலே போயிருக்கான். நான் உங்களைக் கொலை செய்யறத்துக்கு வசதியாக இருக்கட்டும்னு தான் வேலைக்காரர்களைக் கூட லீவு கொடுத்து அனுப்பிட்டான்.''

எதைச் சொன்னால் அதிர்ச்சி அடைவார் என்று எதிர்பார்த்தானோ அதையே சொன்னான் வீரப்பன்.

''என்ன!'' ராமநாதனின் குரல் குழிக்குள் சென்று விட்டது.

''ஆமா! உங்க சோமு உங்களைத் தீர்த்துக் கட்ட முடிவு செஞ்சிட்டான். என்னை அவன் அழைச்சிட்டு வந்ததே உங்களைக் கொல்லத் தான்.''

இடது நெஞ்சில் கையை வைத்துக் கொண்டு தள்ளாடியபடி எழுந்தார் ராமநாதன்.

''நான் அவனுக்கு என்ன துரோகம் செஞ்சேன்? என் மகனைப் போலத்தானே இதுவரையில் நினைச்சுக்கிட்டிருந்தேன்!''

''உங்க சொத்திலே முக்கால் பங்கைக் கோயில் பேரிலே எழுதறதா முடிவெடுத்தீங்களாமே? அது அவனுக்குப் பிடிக்கலே! அதனால்தான் உங்களைக் கொலை செய்ய முடிவு செய்துட்டான்'' என்றான் வீரப்பன்.

''முடியாது ... என்னை யாருமே கொல்ல முடியாது'' என்று கூச்சலிட்டார் ராமநாதன்.

மீண்டும் பயங்கரமாகச் சிரித்தான் வீரப்பன்.

''அப்படி என்னைக் கொன்றாலும் நான் சும்மா இருக்க மாட்டேன். என்னைக் கொல்லச் சதி செய்த சோமுவையும் உன்னையும் பழி வாங்காமல் என் ஆவி அடங்காது. உன்னைக்கொல்லாமல் நான்விடமாட்டேன்.'' பயங்கரமாகக் கூச்சலிட்டார் ராமநாதன்.

''நானும் உங்களைக் கொல்லாமல் விட மாட்டேன்'' என்றபடி பான்ட் பாக்கெட்டிலிருந்து ஒரு கத்தியை எடுத்தான் வீரப்பன். மின்விளக்கின் ஒளியில் மின்னியது கத்தி. அவரை நோக்கி அடி மேலடி வைத்து நகர்ந்தான் வீரப்பன். தமது மரணம் நெருங்கி விட்டதை உணர்ந்துகொண்டார்ராமநாதன். அதிர்ச்சியினாலும் வயோதிகத்தினாலும் தள்ளாடினார். ஏற்கனவே பலவீனமான இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவதைப் போல் வலியால் துடித்தார். இதயம் சுக்குநூறாக இப்போது வெடிக்கப் போகிறது என்று எண்ணினார். பேச நா எழவில்லை....

எனினும் ''உன்னைக் கொல்லாமல் விட மாட்டேன்.... உன்னைக்... கொல்ல...... கொல்'' என்று கூறிக் கொண்டே வேரற்ற மரம் போல் 'காயர் மேட்'டிலே சாய்ந்தார். அசைவற்றுக் கிடந்தார்.

அவர் அருகே சென்று உற்று நோக்கினான் வீரப்பன். 'மனிதர் இறந்து விட்டார்' என்று அவன் மனம் கூறியது.

அவரது நாசியின் அருகே விரலை வைத்துப் பார்த்தான். அப்போது —

வெடிகுண்டுகளால் மலைகளைத் தகர்ப்பது போல் ஓர் இடி ஓசை.

ஆளுநராக உயர்ந்த ஆதிவாசி!

ஆஸ்திரேலிய ஆதிவாசிகளுள் ஒருவரான சர். டக்ளஸ் நிக்கலஸ், டிசம்பர் 1ம் தேதி முதல் தெற்கு ஆஸ்திரேலிய மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப் பெற்றுள்ளார். ஆதிவாசி ஒருவர் ஆளுநர் பதவி வகிப்பது இதுவே முதல் தடவையாகும். ஆதிவாசிகளின் நல்லுக்காக அரை நூற்றாண்டுக் காலம் அருந் தொண்டு ஆற்றியமைக்காக பிரிட்டிஷ் அரசினர் 1972ல் நிக்கலஸுக்கு 'சர்' பட்டம் வழங்கிக் கௌரவித்தார். இந்த ஆதிவாசி ஆதிகாலத்தில் மெல்போர்ன் மார்க்கெட்டில் வீதி கூட்டுபவராகப் பணியாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நன்றி: இந்து — பாணன்



ஊழிக் காலத்தின் காற்று போல் .... பேரிரைச்சலுடன் காற்று வீசியது.

திடீரென்று மின்சார விளக்குகள் அணைந்தன. எங்கோ மின்கம்பி அறுந்திருக்கலாம். வெளியில் மழை பெய்வதாகப் பாவனை புரிந்து கொண்டிருந்தது.

'ராமநாதன் இறந்து விட்டார்' என்று எண்ணிய வீரப்பன் திடுக்கிட்டான்.

இப்போது மணி என்ன இருக்கும்? ரேடியம் கடிகாரம் மணி ஒன்று என்று காட்டியது. இருட்டிலே உலவும் கறுப்புப் பூனையின் கண்களாக அது தோன்றியது.

'ராமநாதனின் பிணம் இதோ ...இங்கே என் காலடியில்.'

'விளக்கு எரியாதா? இம் மழையில் யார் வந்து மின்கோளாறைச் சரி செய்வார்கள்?' தவித்தான் வீரப்பன்.

நெருப்புக்குச்சியை எடுத்து உரசினான்.

அமைதியான அந்தச் சிறிய ஒளியில் ராமநாதனின் பிணத்தை நோக்கினான்.

பயங்கரம்! விழிகள் பிதுங்க ... அலங்கோலமாகக் கிடந்தார் ... இல்லை கிடந்தது ராமநாதனின் பிணம்.

அக்காட்சியைக் கண்டவுடன் வீரப்பனின் உடல் நடுங்கியது. எலும்பைத் துளைக்கும் அந்தக் குளிரிலும் அவனது உடலெங்கும் வியர்த்துக் கொட்டியது. 'இந்தப் பிணத்துடன் இன்னும் நான்கைந்து மணி நேரம் காலம் தள்ள வேண்டுமே?'

மயான அமைதி வீடெங்கும் பரவியது. 'ஓ'வென்று கத்த வேண்டும் போல் தோன்றியது அவனுக்கு.

மீண்டும் ஒரு நெருப்புக் குச்சியைக் கிழித்தான். ராமநாதனின் பிதுங்கிய விழிகள்!

வீரப்பனையே நோக்கிய பார்வை!

'உன்னைக் கொல்லாமல் விட மாட்டேன்'- அவர் கூறிய வார்த்தைகள் சம்மட்டியடி போல் அவன் காதிலே ஒலித்தன.

தனது பிடறிக்குப் பின் ராமநாதனின் ஆவி நிற்பது போல் ஒரு பிரமை.

சட்டென்று திரும்பிப் பார்த்தான்.

இருள்! இருள்! எங்கும் இருள்!

அமைதி அவனது மன அமைதியைக் கெடுத்தது! அந்தச் சலனமற்ற நிலையில் அவன் சஞ்சலம் அடைந்தான்.

தட்டுத் தடுமாறியபடி மாடியிலிருந்து இறங்கினான். எங்கோ ஓர் ஆந்தை அலறியது.

பயத்தில் நாக்கு வறண்டு விட்டது வீரப்பனுக்கு.

ஏதோ நினைத்துக் கொண்டவன் போல் வாசற்கதவை நோக்கி ஓடினான்.

கதவைத் தள்ளித் திறக்க முயற்சி செய்தான். முடியவில்லை.

'என்ன ... வெளியில் பூட்டு போடப்பட்டுள்ளதுபோல் தெரிகிறதே! — சோமுவின் வேலையா இது?—முட்டாள்! இப்பிணத்துடன் இனி என்னால் ஒருவினாடிகூட இருக்கமுடியாது.

அஞ்சாநெஞ்சனுகக் கொள்ளையிலும், திருட்டிலும் ஈடுபட்ட அவன் புழுவிலும் கேவலமாய் அலறினான்.

''யாருமே வெளியில் இல்லையா? கதவைத் திறவுங்கள்! கதவைத் திறவுங்கள்!''

கதவை இடித்தான். கை சலித்த பின் நிறுத்தினான். ஓசை அடங்கிய பின் ஏற்பட்ட அமைதி படுபயங்கரமான சூன்யத்தை ஏற்படுத்தியது.

மாடியிலிருந்த கடிகாரத்தின் 'டிக் டிக்' ஒலி மட்டும் துல்லியமாகக் கேட்டது. வேறு ஓசையே இல்லை. இப்படிச் சில வினாடிகள் கழிந்தன.

'உன்னைக் கொல்லாமல் விட மாட்டேன்!'— மேலேயிருந்து குரல் கேட்டது.

'யாரது ... ராமநாதனின் குரல் போல் உள்ளதே?' உற்றுக் கேட்டான் வீரப்பன். 'இருக்காது' அவர்தான் இறந்து விட்டாரே' என்று எண்ணினான்.

'உன்னைக் கொல்லாமல் விட மாட்டேன்!'- மீண்டும் அதே குரல்.

'என் புலன்கள் என்னை ஏமாற்றவில்லை... இது ... இது... ராமநாதனின் குரல்தான்' மேலே பார்த்தான் வீரப்பன்.

பளீரென்று ஒரு மின்னல் கீற்று — கண்ணாடி ஜன்னல் வழியாக வீட்டில் தோன்றி மறைந்தது.

'மாடிக் கைப்பிடிச் சுவரில் கைகளை ஊன்றியபடி நின்று கொண்டிருப்பது யார்..? அது ராமநாதனின் ஆவிதான்.. ஆவிதான்..'

'அப்படியென்றால் என்னைப் பழி வாங்கத்தான் வந்திருக்கிறது.'

திரும்பி வேகமாக அடியெடுத்து வைத்தான் வீரப்பன். ''கதவைத் திறவுங்கள்.... கதவைத் திறவுங்கள்'' - பரிதாபமாகக் கத்தினான் வீரப்பன்.

விடிந்தது. —


இரவில் பெய்த மழையின் காரணமாக விளக்கி வைக்கப்பட்ட வெண்கலமாகத் தோன்றியது நீலமலை. பச்சைப் பசும்புல் போர்த்த அழகியாகத் தோன்றியது.

கோல்டன் எஸ்டேட் வாசலில் கார் வந்து நின்றது.

டாக்டருடன் இறங்கினான் சோமு.

கதவைத் திறந்தவனின் காலடியை வீரப்பனின் உயிரற்ற உடல்தான் வரவேற்றது.

திடுக்கிட்டான் சோமு. அவசரமாகப் பரிசோதனை செய்தார் டாக்டர்.



''வந்தே மாதரம்'' கீதம் இயற்றப்பட்டு இப்போது ஒரு நூற்றாண்டு பூர்த்தியாகிறது. இப்பாடலை இயற்றியவர் வங்க எழுத்தாளர் பங்கிம் சந்திர சட்டர்ஜி. கல்கத்தா பல்கலைக் கழகத்தின் முதல் இரண்டு பட்டதாரிகளில் ஒருவர். இப்பாடலை எழுதத் தூண்டுகோலாக இருந்த நிகழ்ச்சி 1858ல் நடந்த சிப்பாய்க் கலகம். ''ஆனந்த மடம்'' என்ற இவரது நூலில் இடம் பெற்றது. 1905ல் நடந்த வங்கப் பிரிவினையின்போதுதான் இப்பாடல் காட்டுத் தீயாகப் பரவியது. இக்கீதம் தேசிய கீதத்துக்கு (ஜனகணமன) சமமான அந்தஸ்தைப் பெறுகிறது என்று 1950ல் ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டது.

-சாம்பமூர்த்தி

கவிஞனை நம்பினார்களா?



'விக்கார் ஆப் வேக் பீல்ட்' என்னும் நூலை எழுதி அழியாப் புகழ் பெற்ற ஆலிவர் கோல்ட் ஸ்மித் இறக்கும்போது அவர் கொடுக்க வேண்டிய கடன் இரண்டாயிரம் பவுனுக்கும் அதிகமாக இருந்தது.

இதை அறிந்த சாமுவேல் ஜான்சன் தமது நண்பரான பாஸ்வெல்லுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் ''ஒரு கவிஞனை இவ்வளவு தூரத்துக்கு நம்பிக் கடன் கொடுத்தார்களா?'' என்று கேட்டுத் தமது வியப்பை வெளிப்படுத்தினார். -கோ. தீபா

''கார்டியாக் அரெஸ்ட் ... புவர் சேப்.... ஏதோ அதிர்ச்சியிலே இதயம் நின்னு போயிடுச்சு'' — சூள் கொட்டினார் டாக்டர்.

''வாருங்கள் டாக்டர்'' — குரல் வந்த திசையில் இருவரது கண்களும் பாய்ந்தன.


மாடிப்படியிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தார் ராமநாதன்.

''என்னைக் கவனிக்கிறதுக்காகத் தன்னோட நண்பனை சோமு இங்கே அழைச்சிட்டு வந்தான் .... ஆனா .... பாவம் அவனே உயிரை விட்டுட்டான். டாக்டர் நேற்று இரவிலிருந்து என் உடல் குணமாயிட்டு வருது... இன்னும் ஒரு சேதி தெரியுமா டாக்டர்...? சோமுவின் நண்பன்தான் எனக்கு உலகத்தைக் காட்டினான். யார் நல்லவன், யார் கெட்டவன் என்கிறதையும் எனக்குப் புரிய வைச்சுட்டான்'' என்று அர்த்தமுள்ள பார்வையைச் சோமுவின் மீது ஓட விட்டார் ராமநாதன்.

''எனக்கு உயிர்ப் பிச்சையளித்த ஆண்டவனுக்கு என் சொத்து முழுவதையும் அர்ப்பணமாக்கப் போகிறேன், டாக்டர்!''

இடையில் மெல்ல நழுவி விட்டான் சோமு. அவன் வெளியில் செல்வதைக் கண்ணாடி வழியாகப் பார்த்த டாக்டர் அவனைக் கூப்பிட முயன்றார். ''அவனைக் கூப்பிடாதீங்க! டாக்டர், அவனைப் போக விடுங்கள்'' என்ற ராமநாதனை வியப்புடன் நோக்கினார் டாக்டர்.

உங்கள் குழந்தையை நடத்தும் அதே வகையில் அவனது சளியையும் அகற்றுங்கள். கனிவுடன். கண்டிப்புடன்.



ரபெக்ஸ்
உங்களைப் போலவே... சளியைப் போக்கும் வலிமையும், திறனும் மிக்கது. இதமும், ஆறுதலும் அளிப்பது.

ரபெக்ஸில் அடங்கியுள்ள நம்பகமான ஆற மருந்துப் பொருள்கள், (மென்தால், கேம்பர், தைமால், டர்பென்டைன், யூகலிப்டஸ் ஆயில், நட்மெக் ஆயில்) அவனுடைய மூக்கு, தொண்டை, மார்பு மற்றும் முதுகுப் பகுதிகளில் தேய்க்கும்போதே இதமான ஆறுதல் தர வல்லவை. ரபெக்ஸ் அவனது மூக்கடைப்பைத் தளர்த்தி, மார்புச் சளியை அகற்றி, மூச்சு விடுதலை எளிதாக்கும். ரபெக்ஸ் தரும் இதம், உங்களது கனிவு இவற்றினூடே அவனது புன்னகைக்கு அளவே இராது. உடனடியாகவே!

ரபெக்ஸ்

தேய்த்தாற்றும் திறனுள்ள களிம்பு. எரிச்சலூட்டாது. ஒட்டாது.

க்ளோகோடின் போன்ற நவீன மருந்துகள் தயாரிக்கும் Alembic அலெம்பிக் நிறுவனத்திடமிருந்து.

everest/665/ACW-tm.



சிலம்புச் செல்வம்

ம.பொ.சி.

'' போர் உழந்து எடுத்த ஆர்எயில் நெடுங்கொடி
'வாரல்' என்பனபோல், மறித்துக் கைகாட்ட,
அறம்புரி மாந்தர் அன்றிச் சேரா
புறஞ்சிறை மூதூர் புக்கனர்...''

பகைவரைப் போரிலே வென்று பாண்டியரின் வானளாவ வளர்ந்த கோட்டையின் மீது உயர்ந்து பறக்கின்ற மீனக் கொடியானது, '' கண்ணகி — கோவலன் தம் பதிகளே! மதுரையம்பதிக்கு வாராதீர் !'' என்று கையை அசைத்துக் காட்டிக் கூறுவது போலப் பறந்து கொண்டிருந்தது.

கண்ணகி தேவிக்கு இனி நேரவிருப்பதை வையையாற்றைக் கொண்டும், கோட்டை மீது பறந்து கொண்டிருக்கும் மீனக் கொடியைக் கொண்டும் உணர்த்துகின்றார் இளங்கோ வடிகள்.

சிவ தனுசை வளைத்துச் சீதையை மணக்க மிதிலைக்கு இராமன் சென்றபோது அந்த மாநகரின் கொடிகளெல்லாம் இராமனை வரவேற்ற காட்சி பற்றிக் கம்பர் கூறுவதை இங்கு பார்ப்போம்.

மையறு மலரின் நீங்கி
யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவள் இருந்தாள் என்று
செழுமணிக் கொடிகள் என்னும்
கைகளை நீட்டி அந்தக்
கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை 'ஒல்லை வா' வென்று
அழைப்பது போன்ற அம்மா!

கம்பன் காட்டும் மிதிலைக் கொடிகள், சீதையின் சுயம்வர விழாவை முன்னிட்டு நகரை அலங்கரிக்கக் கட்டியுள்ள — தொங்க விடப்பட்டுள்ள — தோரணக் கொடிகளாகும். அதனால், கைகளை நீட்டி, 'விரைவில் வா' என்று அழைப்பது போன்று பறக்கின்றன. இளங்கோ காட்டும் மதுரைக் கொடி கோட்டை மதில் மீது நின்று பறக்கும் நிலையில் காட்சியளிக்கின்றது. அதனால், 'வாராதே' என்பது போல் பறக்கின்றதென்கிறார் இளங்கோ.

குவளை, ஆம்பல் மலர்களிலிருந்து பிலிற்றும் தேன் துளிகளைக் கண்ணகிக்கு இனி நேரவிருக்கும் துன்பத்தை அறிந்து அவை வடிக்கும் கண்ணீர்த் துளிகளாகவும்; அந்தத் தேன் துளிகளை உண்ண வரும் வண்டுகள் ரீங்காரத்தைப் புலம்பலாகவும் இளங்கோ வருணிக்கிறார்.

ஒரு நாள் இரவு முடிந்து, பகற்பொழுது புலர்ந்து கொண்டிருந்த அதிகாலையிலே கோவலனும் கண்ணகியும் கவுந்தியும் மதுரையம் பதியை அடுத்துள்ள புறநகரை அடைந்தனர். இதனை, 'புறஞ்சேரி' என்கின்றார் இளங்கோ.

அங்குள்ள அறவோர் பள்ளியைச் சேர்ந்து தவக்கோலம் கொண்டார் கவுந்தியடிகள். அன்றைரின் தவம் முடிந்ததும், அவரையணுகிக் கோவலன் கீழ்வருமாறு கூறினான்:

''நெறியின் நீங்கியோர்
நீர்மையேன் ஆகி,
நறுமலர் மேனி
நடுங்கு துயர்எய்த,
அறியாத் தேயத்து
ஆறிடை யுழந்து,
சிறுமை யுற்றேன்,
செய்தவத்தீர் யான்.''

''தவத்திறன் உடையீர், யான், ஒழுக்கப் பாதையினின்று வழுக்கிய வாழ்க்கை நடத்தி, பிறரால் பழிக்கத்தக்க தன்மையனுகிவிட்டேன். மலர் போன்ற மேனியையுடைய கண்ணகி நடுங்கும் வகையில் முன்னர் அறிந்திராத நாட்டிலே — துயரம் தரும் வழிகளிலே —நடந்து அலைந்து சிறுமையடைந்தேன்.''

கவுந்தியடிகள் கோவலனுக்கு ராமாயணத் தலைவனை இராமனையும், பாரதத்தில் வரும் நளனையும் சான்று காட்டி ஆறுதல் கூறினார்.

''நீ இராமனையும் நளனையும் போன்றவன் அல்லன். நீ மனைவியை விட்டுப் பிரியாத வாழ்க்கையைப் பெற்றிருக்கிறாய். வருந்தாதே! பாண்டிய மன்னனின் மதுரைக்குள் சென்று, அங்கு நீ உன் மனைவியோடு தங்குவதற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்து, விரைவில் வந்துவிடு'' என்றார்.

(தொடரும்)

(மயிலை இலக்கிய வட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam Associate Editor: K. Rajendran.

அன்றும் இன்றும் சிலருக்கு அதே இளந்தளிர் மேனி!





கனிவான பியர்ஸ் சோப்பினால் காத்திடுவீர் உங்கள் மேனி மெருகை. மாணிக்கப் படிகம்போல் மிளிரும் ஒவ்வொரு வில்லையிலும் ஒரு நூறாண்டு கால சோப்-உற்பத்தி அனுபவம் உள்ளிறங்கியுள்ளது. பிஞ்சு மென்மை கொஞ்சும் பியர்ஸ்—தூய்மைக் கொழுந்து—கண்கூடாக நீங்கள் ஊடுருவிப் பார்க்கக்கூடிய உன்னதத் தூய்மை.

பியர்ஸ் சருமக் களை...
கன்னிப் பருவக் களை

ந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லின்டாஸ்-PS. 56-140 TH

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேயா காசு

